# உற்பத்தியாளர் கம்பெனிகள் சட்டம்



இந்திய அரசாங்கம் உற்பத்தியாளர் கம்பெனிகளுக்கு பல்வேறு சலுகைகளை வழங்க முன்வந்துள்ளது. பல்வேறு விவசாய அமைப்புகளும், இதர உற்பத்தியாளர்களும், உற்பத்தியாளர் கம்பெனிகளைத் துவக்கி உள்ளனர்; துவக்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கு தன்னார்வத் தொண்டு அமைப்புகள் வழிகாட்டும் நிறுவனங்களாகச் செயல்பட்டு வருகின்றன. உற்பத்தியாளர் கம்பெனிகளைத் துவக்குவதற்கும், துவக்கிய கம்பெனிகளைச் சரியான முறையில் வழிநடத்துவதற்கும், உற்பத்தியாளர்களுக்குப் பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிகளைத் தொடர்ந்து அளிக்க வேண்டும். இம்மாதிரியான பயிற்சிகள் அளிக்கும் தமிழ்நாட்டிலுள்ள தொண்டு நிறுவனங்கள், விவசாயக் கூட்டமைப்புகள், அரசு அமைப்புகள் ஆகியோருக்கு தமிழில் பயிற்சிக் கையேடுகள் தேவை.

இந்தப் புத்தகத்தில் உற்பத்தியாளர் கம்பெனிகள் சட்டம் முதன்முறையாகத் தமிழ் வடிவில் வெளியிடப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் உள்ள வடிவத்தையே இந்தத் தமிழாக்கத்தில் பின்பற்றி உள்ளோம். ஆனால், இதை எளிய நடையில் பாமர மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் வெளியிட முயற்சி செய்துள்ளோம். உற்பத்தியாளர் கம்பெனிகள் குறித்த கையேடுகளின் முதல்படியாக இந்தப் புத்தகம் வெளிவருகிறது.








CIKS
Centre for Indian Knowledge Systems, Chennai
www.ciks.org

CIKS

# உற்பத்தியாளர் கம்பெனிகள் சட்டம்


மொழிபெயர்ப்பு & பதிப்பு

பா. பூங்குழலி. இரா. அபர்ணா தூயவதி & கே. விஜயலட்சுமி




இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம், சென்னை

மே 2014

| | |
|---|---|
| தலைப்பு | உற்பத்தியாளர் கம்பெனிகள் சட்டம் |
| மொழிபெயர்ப்பு & பதிப்பு | பா. பூங்குழலி, (வழக்கறிஞர், சென்னை உயர்நீதி மன்றம்),<br>இரா. அபர்ணா தூயவதி, (இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம்),<br>கே. விஜயலட்சுமி, (இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம்) |
| மொழிபெயர்ப்பு ஆலோசகர் | எஸ். ராமகிருஷ்ணன், க்ரியா பதிப்பகம், சென்னை |
| வெளியீடு | மே 2014 |
| முகப்புப் புகைப்படம் | இந்தியப் பாரம்பரிய அறிவியம் மையம் |
| முகப்பு அமைப்பு மற்றும் அச்சுக்கோப்பு | எஸ். ரமேஷ் |
| வெளியிட்டோர் | இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம்<br>எண். 30, காந்திமண்டபம் சாலை,<br>கோட்டூர்புரம், சென்னை - 600 085.<br>தொலைபேசி : 044-2447 1087 / 5862<br>மின்னஞ்சல் : info@ciks.org<br>இணையதளம் : www.ciks.org |
| அச்சிட்டோர் | பி.எம். டிஜிட்டல் புராடக்ட்ஸ்<br>‘கோனார் மாளிகை,’<br>எண். 25, பீட்டர்ஸ் சாலை,<br>சென்னை - 600 014. |
| பிரதிகள் கிடைக்குமிடம் | இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம், சென்னை |
| © | இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் |

# SHASHI – FOND MEMORIES




Shashi Rekha Rajagopalan (Shashi) was a great friend and support for people's organisations and had contributed in a very significant way to the growth of the cooperatives moment. She was a member of the Central board of the Reserve Bank of India (RBI), National Bank for Agriculture and Rural Development (NABARD) and also a member of the Malegam Committee on Micro finance institutions. Throughout her life she was an advocate for better cooperative legislation and she also contributed to creating new institutional structures based on cooperative principles. At the Centre for Indian Knowledge Systems (CIKS) we met her rather late in her life sometime around the year 2008. She developed a strong liking for our work and felt and expressed a great deal of affection for many of our team members. During the period 2008 - 2011 she was involved closely with our work and helped us mobilize resources for our sustainable agriculture efforts. In the summer of 2011 we received an invitation from her family to join a get together in Secunderabad to celebrate her 60th Birthday and we made a trip on 24th July 2011 for that occasion. Within a couple of weeks in early August we received the sad news that she was no more.

**Bequest from Shashi**

A few weeks later we were informed by her sister that Shashi had left a Will in which she had remembered CIKS and bequethed a share of her property as a donation to CIKS. We were moved and touched by this gesture and we felt quite honoured by this show of faith in our work. We decided that we would invest these funds and use the income for supporting farmers organisations - a cause that was very dear to her. She had great faith in the capacity of rural people and farmers to manage their own affairs (and she would also add with a mischievous gleam in her eyes that she also had great faith in the capacity of NGOs to mess up things for farmers organisations !). Though our interaction with her was rather brief, confined as it was to the last three years of her life, we were deeply influenced by her sincerity, transparency, honesty and admired the high standards she set for all work (for herself and for others) and her intolerance for any form of sloppiness, delays or lack of rigour in work.

During the year 2013 our Centre along with Vrutti, Bengaluru had supported the formation of two producer companies in Tamil Nadu i.e., Marutham Sustainable Agriculture Producer Company Limited (MSAPCL) and Valanadu Sustainable Agriculture Producer Company Limited (VSAPCL) which are operating from the districts of Tiruvannamalai and Nagapattinam respectively. The two producer companies are in need of a lot of support and help for education and capacity building of the farmers as shareholders as well as members of the Board of Directors. Similarly, there are various other producer companies formed in Tamil Nadu and other States. All these producer companies need a lot of support with respect to institution building. For this purpose, educational material needs to be produced in the local language.

As part of this effort we have now produced a Tamil translation of the Producer Company Act (which forms a section of the Companies Act, 2013). Currently, a large number of producer companies are coming into existence and they have expressed a strong need for the basic material in Tamil. We hope


this will be of great help to them. We also plan to bring out similar material as a series in Tamil which will be of use to producer companies.

The publication of this translation is being supported by the endowment fund received from the estate of Shashi Rajagopalan and we dedicate this publication to her memory. We are grateful to Ms. Sabitha Gopal and the other members of the family of Shashi Rajagopalan for their continued support and encouragement of our work.

Chennai - 85
May 2014

A.V. Balasubramanian
Director

# சசி - அன்பு நினைவலைகள்



சசி ரேகா ராஜகோபாலன் (சசி) அவர்கள் மக்கள் அமைப்புகளின் ஒரு சிறந்த நண்பரும், ஆதரவாளரும் ஆவார். கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க வகையில் பங்களித்துள்ளார். இவர், இந்திய ரிசர்வ் வங்கி (RBI) மற்றும் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் (NABARD) மையக் குழு உறுப்பினராகவும், நுண் நிதி நிறுவனங்களுக்கான மேல்கம் குழுவின் (Melgam Committee) உறுப்பினராகவும் இருந்தவர் ஆவார். இவர் தன்னுடைய வாழ்நாள் முழுவதும் தரமான கூட்டுறவு சட்டத்தை ஆதரித்து வாதாடுபவராக இருந்தார். மேலும், கூட்டுறவு கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட புதிய நிறுவனக் கட்டமைப்புகளை உருவாக்குவதற்கும் பங்களித்துள்ளார். இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையப் பணியாளர்களுக்கு அவரை 2008ஆம் வருடம், அவருடைய வாழ்வின் பிந்திய பகுதியில் தான் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. அவர் எங்களுடைய மையத்தின் பணிகளின் மீது அதிக நாட்டமுடையவராக மட்டுமின்றி, எங்களுடைய மையத்தின் உறுப்பினர்கள் மீது அதீத பாசத்தையும் வெளிப்படுத்தினார். 2008 - 2011ஆம் ஆண்டுகளில், இவர் எங்களுடைய பணிகளில் மிக நெருக்கமாக ஈடுபட்டு உதவி புரிந்தார். அத்துடன், எங்களுடைய தற்சார்பு வேளாண்மை சார்ந்த முயற்சிகளுக்கு நிதி திரட்டுவதற்கான வழிமுறைகளிலும் உதவி செய்தார். கோடை 2011 இல் இவருடைய குடும்பத்திடமிருந்து நமக்கு வந்த இவருடைய அறுபதாவது பிறந்த நாள் அழைப்பை தொடர்ந்து ஜூலை 24ஆம் தேதி செகந்திராபாத்தில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டோம். இது முடிந்த இரண்டு வாரங்களுக்குள் ஆகஸ்டு 2011ல் அவர் காலமாகிவிட்ட துயரச் செய்தியை அறிந்தோம்.

**சசி அவர்கள் அளித்த நன்கொடை**

அவர் காலமாகி சில வாரங்கள் கழித்து, சசி தன்னுடைய உயிலில் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தை நினைவு கூர்ந்து, தன்னுடைய சொத்தில் ஒரு பங்கை நமது மையத்திற்கு நன்கொடையாக அளித்து இருப்பதாக அவருடைய சகோதரி மூலம் நமக்கு தெரிவிக்கப்பட்டது. இந்த நிகழ்வினால் நாங்கள் மிகவும் நெகிழ்ந்ததுடன் மட்டுமின்றி, அவருடைய இத்தகைய செய்கையையும், எங்களுடைய பணியின் மீதான நம்பிக்கையையும் நமக்கு கிடைத்த பெரிய கௌரவமாக எண்ணுகிறோம். இந்த நிதியை முதலீடு செய்து இதன் வருவாயைக் கொண்டு விவசாயிகள் அமைப்புகளுக்கு உதவி செய்ய (சசி அவர்களுக்கு பிரியமான செயல்) தீர்மானித்து இருக்கிறோம். தங்கள் சொந்த விவகாரங்களை தாங்களே நிர்வகித்து கொள்ளுவதில் கிராமப்புற மக்கள் மற்றும் விவசாயிகளுக்கு உள்ள திறமையின் மீது இவருக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு (அவர் தன்னுடைய கண்களின் குறும்பு நிறைந்த ஒளியுடன், விவசாயிகள் அமைப்புகளின் செயல்பாடுகளை குழப்புவதற்கு தன்னார்வ நிறுவனங்களின் திறனின் மீதும் தனக்கு பெரிய நம்பிக்கை உள்ளதை தெரிவித்துள்ளார்!). இவருடனான நம்முடைய தொடர்பு மிகவும் குறுகியது, குறிப்பாக, அவருடைய வாழ்நாளின் கடைசி மூன்று வருடங்கள் மட்டுமே இவருடன் நமக்கு தொடர்பு இருந்தது என்றாலும், நாம் அவருடைய நேர்மை, வெளிப்படையான தன்மை, வாய்மை போன்றவற்றினால் மிகவும் வசீகரிக்கப்பட்டும், அவர் அனைத்து வேலைகளுக்கும் (தன்னுடைய மற்றும் பிறருடைய) நிர்ணயிக்கும் உயர் தரநிர்ணயங்கள், பணியில் காண்பிக்கப்படும் எந்தவிதமான மெத்தன தன்மை, தாமதங்கள் மற்றும் சுறுசுறுப்பின்மையை சகித்து கொள்ள முடியாத அவருடைய தன்மை போன்றவற்றை மதித்தும், ரசித்தும் இருக்கிறோம்.

2013ஆம் ஆண்டில், எங்கள் மையம், தமிழ்நாட்டில் பெங்களூரில் உள்ள விருத்தி நிறுவனத்துடன் இணைந்து இரண்டு உற்பத்தியாளர் கம்பெனிகளின் உருவாக்கத்திற்கு உதவி செய்துள்ளது. அவை, மருதம் தற்சார்பு வேளாண்மை உற்பத்தியாளர் கம்பெனி லிமிடெட் மற்றும் வளநாடு தற்சார்பு வேளாண்மை உற்பத்தியாளர் கம்பெனி லிமிடெட். இவை, முறையே தமிழ்நாட்டிலுள்ள திருவண்ணாமலை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. இந்த இரண்டு உற்பத்தியாளர் கம்பெனிகளும் தங்கள் விவசாயிகளுக்கும், இயக்குனர் அவையின்

உறுப்பினர்களுக்கும் பங்குதாரர்களுக்கான பயிற்சி மற்றும் திறன் வளர்ப்பை மேற்கொள்ளுவதற்கான உதவி மற்றும் இதர பல உதவிகள் தேவைப்படும் நிலையில் உள்ளன. இவர்களுக்கு நாங்கள் தொடர்ந்து பல பயிற்சிகளை நடத்தி கொண்டு வருகின்றோம்.

இந்தக் கம்பெனிகள் அல்லாது தமிழ்நாட்டில் இன்று பல தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், அரசு அமைப்புகள், விவசாய கூட்டமைப்புகள் ஆகியோர் உற்பத்தியாளர் கம்பெனிகளை உருவாக்கி உள்ளனர்; உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால், உற்பத்தியாளர் கம்பெனிகள் குறித்த தகவல்கள் அனைத்தும் ஆங்கிலத்திலேயே உள்ளது. இந்தத் தகவல்களை தமிழில் கொண்டு வருவது ஒரு அவசரத் தேவையாக உள்ளது. இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் பல ஆண்டுகளாக தற்சார்பு வேளாண்மை சம்பந்தப்பட்ட பல புத்தகங்களையும், கையேடுகளையும் கொண்டு வந்துள்ளது. இப்பொழுது உற்பத்தியாளர் கம்பெனிகள் குறித்த பல விஷயங்களை கையேடுகளாகத் தமிழில் வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

இந்த முயற்சியின் ஒரு பகுதியாக, உற்பத்தியாளர் கம்பெனிகள் சட்டத்தை தமிழாக்கம் செய்துள்ளோம். இது தமிழ்நாட்டிலுள்ள அனைத்து உற்பத்தியாளர் கம்பெனிகளுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகிறோம்.

இந்த மொழிபெயர்ப்பு புத்தகம், சசி ராஜகோபாலன் அவர்கள் அளித்த நிதியிலிருந்து தயாரிக்கப்பட்டது. நாம் இந்தப் புத்தகத்தை சசி அவர்களின் நினைவாக அவர்களுக்கே அர்ப்பணிக்கின்றோம். செல்வி. சபிதா கோபால் மற்றும் சசி ராஜகோபாலன் அவர்களின் இதர குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் அவர்கள் எங்கள் பணிக்காக அளித்து வரும் தொடர் உற்சாகம் மற்றும் உதவிகளுக்காக மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சென்னை - 85 | ஆ.வே. பாலசுப்பிரமணியன்
மே 2014 | இயக்குனர்

# முகவுரை

இந்திய அரசாங்கம் 2002ஆம் ஆண்டு, இந்தியக் கம்பெனிகள் சட்டம், 1956 இல் ஒரு திருத்தத்தைச் செய்து உற்பத்தியாளர் கம்பெனிகள் சட்டத்தை உருவாக்கியது. இது Y.K. அலாக் குழுவின் பரிந்துரையின்படி உருவாக்கப்பட்ட சட்டமாகும். உற்பத்தியாளர் கம்பெனி அதிலுள்ள உறுப்பினர்களின் சாதாரண பங்குகளின் (Equity shares) மூலம் உருவாக்கப்படுகிறது. உற்பத்தியாளர் கம்பெனியில் உற்பத்தியாளர்களே பங்குதாரர்கள் ஆவார்கள். இந்தக் கம்பெனி இவர்களுக்கே சொந்தமாகும். அதற்குப் பொருத்தமான ஒரு கட்டமைப்பை ஒரு நிறுவனம் என்ற முறையில் வழிநடத்த உற்பத்தியாளர் கம்பெனிகள் சட்டம் வழி வகுக்கிறது.

உற்பத்தியாளர் கம்பெனிகள் சட்டம் கூட்டுறவுகளுக்கான சிறப்பு பண்புகள் மற்றும் கொள்கைகளை உள்ளடக்கியுள்ளது. மேலும், மேலாண்மையில் ஒரு தொழில்முறை அணுகுமுறையை அறிமுகப்படுத்துகிறது.

பொதுவாக, உற்பத்தியாளர் கம்பெனி ஒரு வழிகாட்டும் நிறுவனத்தினால் தூண்டப்பட்டு உருவாக்கப்படுகிறது. பெரும்பாலும் சிறு, குறு விவசாயிகளிடம் தாங்கள் ஒரு அமைப்பாக ஒருங்கிணைந்து கம்பெனியை உருவாக்குவதற்கான திறன் இருப்பதில்லை. எனவே தான் வழிநடத்தும் முகமை, உற்பத்தியாளர் கம்பெனி உருவாக்கத்தைத் தலைமையேற்று செயல்படுத்துகிறது. பெரும்பாலான சமுதாய அமைப்புகளின் உண்மை நிலை இதுதான்.

முதல் நிலை உற்பத்தியாளர்களுடன் (சிறு குறு விவசாயிகள்) அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக இணைந்து செயல்படும் தன்னார்வ நிறுவனங்கள், தனிநபர் அல்லது நபர்களின் குழு ஆகியோர் முதல்நிலை உற்பத்தியாளர்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை. சமுதாய முன்னேற்றத்தில் ஊக்கம் கொண்ட நபர்களாகவும், குழுக்களாகவும் இருக்கலாம். ஏற்கனவே வலுவாக உள்ள சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்பு, கூட்டுறவு சங்கங்கள் போன்றவை தங்களை உற்பத்தியாளர் கம்பெனியாக மாற்றிக் கொள்வதற்கான செயல்பாட்டினை துவங்கலாம். இந்த வகையில் இது ஒரு சுய தூண்டுதல் முயற்சியாக இருக்கும். உற்பத்தியாளர் கம்பெனியை உருவாக்க விரும்பும் எந்தவொரு அரசாங்க நிறுவனமோ அல்லது அரசுத் துறையோ உற்பத்தியாளர் கம்பெனியை உருவாக்கலாம். அரசாங்கம் ஒரு தன்னார்வ அமைப்பையோ (பஞ்சாயத்து அல்லது ஏதாவது மாநிலத் துறை) அல்லது ஒரு சமுதாய அமைப்பையோ இதற்காக அணுகலாம். இதை செயல்படுத்தும் அமைப்பிற்கு அரசாங்கம் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்கக்கூடும்.

இந்திய அரசாங்கம் உற்பத்தியாளர் கம்பெனிகளுக்கு பல்வேறு சலுகைகளை வழங்க முன்வந்துள்ளது. பல்வேறு விவசாய அமைப்புகளும், இதர உற்பத்தியாளர்களும் உற்பத்தியாளர் கம்பெனிகளைத் துவக்கி உள்ளனர்; துவக்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கு தன்னார்வத் தொண்டு அமைப்புகள் வழிகாட்டும் நிறுவனங்களாகச் செயல்பட்டு வருகின்றன. உற்பத்தியாளர் கம்பெனிகளைத் துவக்குவதற்கும், துவக்கிய கம்பெனிகளை சரியான முறையில் வழிநடத்துவதற்கும் உற்பத்தியாளர்களுக்குப் பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளைத் தொடர்ந்து அளிக்க வேண்டும். இம்மாதிரியான பயிற்சிகள் அளிக்கும் தமிழ்நாட்டிலுள்ள தொண்டு நிறுவனங்கள், விவசாய கூட்டமைப்புகள், அரசு அமைப்புகள் ஆகியோருக்குத் தமிழில் பயிற்சி கையேடுகள் தேவை.

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் தற்சார்பு வேளாண்மை குறித்த நூற்றுக்கும் மேற்பட்ட புத்தகங்களையும், கையேடுகளையும் வெளியிட்டுள்ளது. இப்பொழுது, உற்பத்தியாளர் கம்பெனிகளை உருவாக்கி வழிநடத்துவதற்கு பயிற்சிக் கையேடுகளைத் தயாரித்துக் கொண்டு வரும் பணியில் ஈடுபட்டுள்ளது. இதன் முதல்படியாக உற்பத்தியாளர் கம்பெனிகள் சட்டத்தை தமிழாக்கம் செய்துள்ளது. இது தமிழ்நாட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள அனைத்து உற்பத்தியாளர் கம்பெனிகளுக்கும், ஆரம்பிக்கப்படவுள்ள உற்பத்தியாளர் கம்பெனிகளுக்கும் உதவியாக இருக்கும் என்று நம்புகிறோம். இதை அடுத்து உற்பத்தியாளர் கம்பெனிகள் பற்றிய பல விவரங்களைக் கையேடுகளாக வெளியிட உள்ளோம். இதைப் படிக்கும் அனைவரையும் இது பற்றிய உங்கள் கருத்துக்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். இதை விரைவில் இணையத்தளத்திலும் வெளியிட உள்ளோம்.

உற்பத்தியாளர்கள் அனைவரும் இதன் மூலம் பயன்பெறுவார்கள் என்பது எங்கள் நம்பிக்கை.

சென்னை - 85
மே 2014

கே. விஜயலட்சுமி
இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம்

# உற்பத்தியாளர் கம்பெனிகள் சட்டம் – ஒரு குறிப்பு

உற்பத்தியாளர் கம்பெனிகள் தொடர்பான சட்டம், கம்பெனிகள் (திருத்த) சட்டம், 2002 இன் மூலம் கம்பெனிகள் சட்டம், 1956 இல் இடைசொருகப்பட்டது. ஆகவே, உற்பத்தியாளர் கம்பெனிகள் சட்டம் என்பது ஒரு தனிப்பட்ட சட்டம் அல்ல. ஆனால், கம்பெனிகள் சட்டம், 1956 இன் விரிவான கட்டமைப்பிற்குள் இடம்பெற்றுள்ள ஒரு தனிப்பட்ட அத்தியாயம் (அத்தியாயம் - IX-A) ஆகும்.

புதிய கம்பெனிகள் சட்டம், 2013 இல் உற்பத்தியாளர் கம்பெனிகளுக்கென்று தனிப்பட்ட எந்தவொரு அத்தியாயமும் இல்லை. ஆகவே, உற்பத்தியாளர் கம்பெனிகளுக்கென்று பிரத்தியேகமான புதிய சிறப்பு சட்டம் இயற்றப்படும் வரை, கம்பெனிகள் சட்டம், 1956 இல் உள்ள அத்தியாயம் IX-A தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மேலும், புதிய கம்பெனிகள் சட்டம், 2013 இல், தனியார் வரையறுக்கப்பட்ட கம்பெனிகளுக்கான பல்வேறு அம்சங்கள் மற்றும் இதர விதிமுறைகள் நடைமுறையிலிருந்தாலும், இன்று செயல்பாட்டிலிருக்கும் உற்பத்தியாளர் கம்பெனிகளுக்கான சட்டம், கம்பெனிகள் சட்டம், 1956 இன் ஒரு பகுதியே ஆகும்.

# பொருளடக்கம்


| | |
|---|---|
| சட்டத்தின் நோக்கமும், அதற்கான தேவையும் | 1 |
| அத்தியாயம்-1 : உற்பத்தியாளர் கம்பெனிகள் | 3 |
| அத்தியாயம்-2 : உற்பத்தியாளர் கம்பெனிகளின் கூட்டுருவாக்கம் மற்றும் இதர விவகாரங்கள் | 5 |
| அத்தியாயம்-3 : உற்பத்தியாளர் கம்பெனியின் நிர்வாகம் | 14 |
| அத்தியாயம்-4 : பொதுக் கூட்டங்கள் | 19 |
| அத்தியாயம்-5 : பங்கு மூலதனம் மற்றும் உறுப்பினர்களின் உரிமைகள் | 21 |
| அத்தியாயம்-6 : நிதி, கணக்குப் பதிவு மற்றும் தணிக்கை | 22 |
| அத்தியாயம்-7 : உறுப்பினர்களுக்கான கடனுதவிகள் மற்றும் முதலீடுகள் | 24 |
| அத்தியாயம்-8 : அபராதங்கள் | 25 |
| அத்தியாயம்-9 : ஒருங்கிணைதல், இணைப்பு அல்லது பிரிதல் (பிரிப்பு) | 26 |
| அத்தியாயம்-10 : தகராறுகளுக்குத் தீர்வு காணுதல் | 29 |
| அத்தியாயம்-11 : இதர விதிமுறைகள் | 30 |
| அத்தியாயம்-12 : உற்பத்தியாளர் கம்பெனியை மாநிலங்களிடை கூட்டுறவு சங்கமாக திரும்ப மாற்றுதல் | 31 |
| நிதி அமைச்சகம் (கம்பெனி அலுவல் துறை) அறிவிக்கை | 33 |
| கலைச்சொற்கள் | 34 |

# சட்டத்தின் நோக்கமும், அதற்கான தேவையும்

1. கடந்த பத்து ஆண்டுகளில், இந்தியாவின் பொருளாதாரம், தொலைத்தொடர்பு மற்றும் போக்குவரத்து கட்டமைப்புகளில் மட்டுமின்றி வணிகம், வங்கித் தொழில் மற்றும் பன்னாட்டு வணிக செயல்முறைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பொருளாதார தாராள மயமாக்குதல், கிராமம் மற்றும் நகரம், தொழிலாளர் மற்றும் தொழிலகம், நிதி மற்றும் வணிகம் போன்றவற்றிற்கு இடையேயான வணிக விதிமுறைகளை மாற்றிக் கொண்டே இருக்கிறது. உயிரிதொழில்நுட்பம், தகவல் புரட்சி, மற்றும் கணினி மயமாதல் போன்ற அனைத்தும் கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி இதன் வாயிலாக கிராமப் பொருளாதாரத்தை உள்ளூர், தேசிய மற்றும் சர்வதேச பொருளாதாரத் தேவையுடன் பிணைக்கின்றன. கிராமப் பொருளாதாரத்தை, தோன்றி வரும் புதிய வாய்ப்புகளுடன் பிணைக்க நிறுவனங்கள் வேண்டும். கிராமப்புற உற்பத்தியாளர்கள், குறைந்த அளவு உடைமைகள், ஆதாரங்கள், கல்வி உடையவர்களாக இருப்பதால் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களைப் பெறுவழி இல்லாது பின்னடைந்த நிலையில் உள்ளனர். போட்டிகள் நிறைந்த இந்த காலக் கட்டத்தில், கூட்டுறவு அமைப்புகள் கிராமப்புற உற்பத்தியாளர்களுக்கு தொடர்ந்து சேவை செய்ய வேண்டுமானால், அவற்றிற்கு சட்டத்தின் கீழ் தற்போது நடைமுறையிலிருக்கும் நிறுவன அமைப்பிற்கும் மேலாக ஒரு மாற்று அமைப்பு தேவை.

2. இவை அனைத்தையும் கவனத்தில் கொண்டு, அரசாங்கம் பொருளாதாரவியல் வல்லுனரும் முன்னாள் மத்திய அமைச்சருமான டாக்டர் Y.K. அலாக் போன்றோர் அடங்கிய குழுவை நியமித்து கீழ்காணும் விவரங்களை ஆராய்ந்து தங்கள் பரிந்துரைகளை அளிக்குமாறு வேண்டியது. அவையாவன,

   (a) கூட்டுறவு அமைப்புகளை கம்பெனிகளாக உருவாக்கவும், ஏற்கனவே உள்ள கூட்டுறவு களை கம்பெனிகளாக மாற்றுவதற்கும் உதவக்கூடிய வகையிலான ஒரு சட்டத்தை வடிவமைத்தல்.

   (b) இந்த பரிந்துரைக்கப்படும் சட்டம், கூட்டுறவு அமைப்பு வியாபாரத்தின் தனித்தன்மை வாய்ந்த கூறுகளை, கம்பெனிகளுக்கு உள்ளதை போன்ற ஒழுங்குமுறை வடிவமைப்பில் ஒன்றிணைத்தல். இந்த குழு பல்வேறு கூட்டுறவுகள், நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுடன் பல கூட்டங்களை நடத்தி, கலந்துரையாடி கருத்துக்களைச் சேகரித்தது.

3. கூட்டுறவு வியாபார அமைப்பை கம்பெனிகளாக உருவாக்கவும் மற்றும் தற்போதுள்ள வியாபாரத்தை கம்பெனியாக மாற்றவும் வழிவகுப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டு, இந்த குழுவின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டும் தற்போதுள்ள மசோதா தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த மசோதாவின் முக்கிய கூறுகளாவன,

   (i) உற்பத்தியாளர் உரிமை கொண்டுள்ள நிறுவனம், இதர நிறுவனங்களுடன் போட்டியிடுவதற்கான திறமையை உருவாக்கக்கூடிய வகையிலான சட்டமுறை மற்றும் ஒழுங்குமுறை செயல்பாட்டு வழிகாட்டியைஉருவாக்கித்தருதல்.கம்பெனிகள் சட்டம், தனியார் லிமிடெட், பொது லிமிடெட் அறங்காவலர் நிலையிலான கம்பெனிகள் மற்றும் நிதிகள் போன்ற பல வகையான கம்பெனிகளை உள்ளடக்கி ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான மற்றும் குறிப்பிட்ட விதிமுறை-களை அளிக்கிறது.

   (ii) கம்பெனிகள் சட்டம் வழங்கும் சுதந்திர விரிநிலை கட்டமைப்பிற்குள், பொருத்தமான மாற்றங்களுடன் பரஸ்பர உதவி மற்றும் கூட்டுறவு கொள்கைகளை உள்ளடக்கிய உற்பத்தியாளர் கம்பெனிகளை உருவாக்கவும் மற்றும் பதிவு செய்யவும் வழி செய்தல்.

   (iii) கூட்டுறவு நிறுவனங்கள் தாங்களாகவே முன்வந்து தங்களை புதிய வடிவிலான உற்பத்தியாளர் கம்பெனிகளாக மாற்றி கொள்ளுவதற்கான ஒரு வாய்ப்பை அளிப்பதற்காக.

   (iv) இந்த மசோதாவின் கீழ் கூட்டுறவு அமைப்புகளை உற்பத்தியாளர் கம்பெனியாக மாற்றுவது முற்றிலும் தனிபட்ட விருப்பமே ஆகும்.

   (v) உறுப்பினர்களின் பங்குகளைப் பொதுச் சந்தையில் வணிகம் செய்யக்கூடாது. உற்பத்தியாளர் கம்பெனியின் அவையின்

அனுமதியுடன் உரிமை மாற்றம் செய்யலாம். உற்பத்தியாளர் கம்பெனி பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்களின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகும் அபாய நிலையில் இருக்காது.

(vi) கூட்டுறவு சங்கத்தை உற்பத்தியாளர் கம்பெனியாக மாற்றுவதை, குறிப்பிட்ட சங்கத்தின் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் ஓட்டு போட்டு குறிப்பிட்ட தீர்மானத்தை அங்கீகரித்தாலன்றி மேற்கொள்ள இயலாது.

(vii) புதிதாக வடிவமைக்கப்பட்ட கம்பெனி "உற்பத்தியாளர் கம்பெனி" என்று குறிப்பிடப்படுவதின் மூலம் இதில் குறிப்பிட்ட பிரிவை சார்ந்த நபர்கள் மாத்திரமே உரிமையாளர்களாக பங்கேற்க முடியும் என்பது சுட்டிக்காட்டப்படும். உற்பத்தியாளர் கம்பெனியின் உறுப்பினர்கள் கண்டிப்பாக "முதல்நிலை உற்பத்தியாளர்களாக", அதாவது முதல்நிலை உற்பத்தி பொருளுடன் தொடர்புடையவர்களாக அல்லது சார்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

(viii) உற்பத்தியாளர் கம்பெனியின் நோக்கங்களில், இதர விஷயங்களுடன் முதல்நிலை விளைபொருட்களின் உற்பத்தி, பக்குவப் படுத்துதல், தயாரித்தல், விற்பனை மற்றும் இதர துணை செயல்பாடுகளும் அடங்கும் வகையில் விவரிக்கப்பட்டுள்ளது.

# கம்பெனிகள் (திருத்த) சட்டம், 2002
# 1/2003 (31 டிசம்பர் 2002)

கம்பெனிகள் சட்டம், 1956ஐ மேற்கொண்டு திருத்தும் சட்டம்.

இந்தச் சட்டம் இந்தியக் குடியரசின் 53வது வருடத்தில் பாராளுமன்றத்தினால் கீழ்வருமாறு இயற்றப்பட்டது.

## 1. குறுந்தலைப்பு மற்றும் அமலாக்கம்

(1) இந்தச் சட்டம் கம்பெனிகள் (திருத்த) சட்டம், 2002 என்று அழைக்கப்படும்.

(2) இந்தச் சட்டம் மத்திய அரசினால் அரசிதழில் அறிவிக்கை செய்யப்படும் தேதியிலிருந்து அமலுக்கு வரும்.

## 2. புதிய பகுதி IX A இடைசொருகல்

கம்பெனிகள் சட்டம், 1956 இல் பகுதி IX க்கு பின் பின்வரும் பகுதி இடைசொருகப்படும். அவையாவன,

# அத்தியாயம் - 1
# உற்பத்தியாளர் கம்பெனிகள்

581A. சூழ்நிலைக்கு ஏற்ப வேறு விளக்கம் தேவைப்படாவிட்டால், இந்தப் பகுதியில்,

**3. விளக்கங்கள்**

(a) "செயல்திறன் மிக்க உறுப்பினர்" (Active Member) என்பவர் உற்பத்தியாளர் கம்பெனியின் ஒரு வகை உறுப்பினர் ஆவார். இவர் கம்பெனியின் செயல்முறை விதிகளின் கீழ் தேவைப்படும் குறிப்பிட்ட அளவு விளைபொருட்களையும், கம்பெனியினுடனான வாடிக்கையாதரவு (தொடர்பு காலம்) காலத்தையும் பூர்த்தி செய்யும் உறுப்பினர்.

(b) "தலைமை செயலதிகாரி" (Chief Executive) என்பவர் பிரிவு 581W உட்பிரிவு (1) இன் கீழ் நியமிக்கப்பட்ட நபர் ஆவார்.

(c) "வரையறுக்கப்பட்ட மாற்றீடு" (Limited return) என்பது செயல்முறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடியான அதிகபட்ச பங்கு ஆதாயத் தொகையை குறிக்கும்.

(d) "உறுப்பினர்" (Member) என்பது ஒரு தனிநபரை அல்லது ஒரு உற்பத்தியாளர் நிறுவனத்தைக் குறிக்கும். உறுப்பினராகச் சேர்க்கப்படும் உற்பத்தியாளர் நிறுவனம் பதிவு செய்யப்பட்டதாகவோ அல்லது பதிவு செய்யப்படாத நிறுவனமாகவோ இருக்கலாம். ஒரு உற்பத்தியாளர் கம்பெனியில் உறுப்பினராக சேர்த்துக் கொள்ளப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்ட நபரைக் குறிக்கும். இவர்கள் தொடர்ந்து உறுப்பினராக நீடிப்பதற்கான தகுதியை உடையவராக இருக்க வேண்டும்.

(e) "மாநிலங்களிடை கூட்டுறவுச் சங்கம்" (Inter-State Cooperative Society) என்பது பன்மாநில கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம், 2002 (39/2002) இன் பிரிவு 3, கூறு (p) இல் கூறப்பட்டுள்ளப்படியான பல மாநிலங்களுக்கிடையேயான கூட்டுறவு சங்கத்தைக் குறிக்கும். குறிப்பிட்ட சமயத்தில் அமலிலிருக்கும் ஏதேனும் ஒரு சட்டத்தின் கீழ் பதிவு செய்து இருக்கலாம். இதைத் தொடர்ந்து தன்னுடைய நோக்கங்களை ஒன்றுக்கும் மேற்பட்ட மாநிலங்களில் உறுப்பினர்களின் பங்கேற்பின் மூலம் விரிவுப்படுத்தி இருக்கலாம் அல்லது தன்னுடைய செயல்பாடுகளை ஒரு மாநிலத்திற்கு வெளியே நேரடியாகவோ, மறை முகமாகவோ அல்லது முகவராக நியமிக்கப்பட்ட ஒரு அமைப்பின் மூலமோ விரிவுப்படுத்தி இருக்கலாம். இந்த மாதிரியான அனைத்து கூட்டுறவு சங்கங்களும் இதில் அடங்கும்.

(f) "பரஸ்பர உதவிக் கொள்கைகள்" (Mutual Assistance Principles) என்பது பிரிவு 581G, உட்பிரிவு (2) இன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள கொள்கைகளை குறிக்கும்.

(g) "அதிகாரி" (Officer) - இது இயக்குனர், தலைமை செயலதிகாரி, செயலாளர் அல்லது கீழ்வரும் செயல்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் எந்தவொரு நபரையும் குறிக்கும். உற்பத்தியாளர் கம்பெனியின் வியாபார செயல்பாடு முழுமையாக அல்லது பகுதியாக இந்த நபரின் வழிகாட்டுதல் மற்றும் அறிவுறுத்தலின் கீழ் செயல்படுத்தப்படும்.

(h) "ஆதரவு" அல்லது "வாடிக்கை ஆதரவு" (Patronage) - உறுப்பினர்கள் கம்பெனியின் வியாபார செயல்பாடுகளில் பங்கு பெறுவதின் மூலம் கம்பெனி தனது உறுப்பினர்களுக்கு வழங்கும் சேவைகளை பயன்படுத்திக் கொள்வர். இதற்கு "ஆதரவு" அல்லது "வாடிக்கை ஆதரவு" என்று பெயர்.

(i) "வாடிக்கை ஆதரவு ஊக்கத்தொகை" (Patronage Bonus) - ஒரு உற்பத்தியாளர் கம்பெனி தன்னுடைய மிகைப்படியான வருவாயிலிருந்து அதன் உறுப்பினர்களுக்கு அவர்களின் வாடிக்கையாதரவு அளவின்படி அளிக்கும் தொகை.

(j) "முதல்நிலை விளைபொருள்" (Primary Produce) என்பது,

i. வேளாண்மை (கால்நடைப் பராமரிப்பு, தோட்டக்கலை, மலர் சாகுபடி, மீன் வளர்ப்பு, திராட்சைச் சாகுபடி, காடு வளர்ப்பு, வனப் பொருட்கள், தாவரங்களை மீண்டும் பயிரிடுதல், தேனீ வளர்ப்பு மற்றும் தோப்புகளிலிருந்து வரும் விளைபொருட்கள் போன்றவை உட்பட) மூலம் விவசாயிகளுக்கு கிடைக்கும் விளைபொருட்கள்;

- மற்றவிதமான முதல்நிலை செயல்பாடுகள் மூலம் விவசாயிகளுக்கு கிடைக்கும் விளைபொருட்கள்.

- விவசாயிகள் அல்லது நுகர்வோரின் ஆர்வத்தை அதிகரிக்கக்கூடிய இதர சேவைகள் போன்றவற்றைக் குறிக்கும் அல்லது

ii. கைத்தறி, கைவினை மற்றும் இதர குடிசை தொழில்களில் ஈடுப்பட்டிருக்கும் நபர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களைக் குறிக்கும்.

iii. மேற்சொல்லப்பட்ட செயல்பாடுகளின் மூலம் கிடைக்கப் பெறும் பொருட்கள் மற்றும் அவற்றின் உபபொருட்களைக் குறிக்கும்.

iv. மேற்சொல்லப்பட்ட செயல்பாடுகள் அல்லது அதனுடன் தொடர்புடைய செயல்பாடுகளுக்கு உதவியாக அல்லது வளர்ச்சி காரணியாக இருக்கக்கூடிய துணை செயல்பாடுகளின் மூலம் கிடைக்கக்கூடிய பொருட்களைக் குறிக்கும்.

v. துணைக்கூறுகள் (i) - (iv) இல் கூறப்பட்டுள்ள-வற்றின் உற்பத்தியை அதிகரிக்கக்கூடிய அல்லது தரத்தை மேம்படுத்தக்கூடிய எந்தவொரு செயல்பாட்டையும் குறிக்கும்.

(k) "உற்பத்தியாளர்" (Producer) என்பவர் முதல்நிலை விளை பொருளைச் சார்ந்த அல்லது அதனுடன் தொடர்புடைய செயல்பாடுகளில் ஈடுப்பட்டுள்ள நபரைக் குறிக்கும்.

(l) "உற்பத்தியாளர் கம்பெனி" (Producer Company) என்பது பிரிவு 581B இல் குறிப்பிடப்பட்டுள்ளப்படி நோக்கங்கள் அல்லது செயல்பாடுகளைக் கொண்ட ஒரு கூட்டாண்மை அமைப்பு. மேலும், அது இந்தச் சட்டத்தின் கீழ் உற்பத்தியாளர் கம்பெனியாகவும் பதிவு பெற்றிருக்கும்.

(m) "உற்பத்தியாளர் நிறுவனம்" (Producer Institution) என்பது உற்பத்தியாளர் அல்லது உற்பத்தியாளர்கள் அல்லது உற்பத்தியாளர் கம்பெனி அல்லது உற்பத்தியாளர் கம்பெனிகளை மாத்திரம் அதன் உறுப்பினர்களாகக் கொண்டிருக்கும். இது பதிவு பெற்ற அல்லது பதிவு பெறாத ஒரு உற்பத்தியாளர் கம்பெனி அல்லது எந்த ஒரு அமைப்பையும் குறிக்கும். அது பிரிவு 581B இல் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுடன் ஈடுபட்டிருக்கும். உற்பத்தியாளர் கம்பெனி அல்லது கம்பெனிகளின் செயல்முறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளப்படி சேவைகளைப் பயன்படுத்தி கொள்ள ஒப்புதலுடையதாய் இருக்கும்.

(n) "தக்கவைப்புத் தொகை" (Withheld Price) என்பது ஒரு உறுப்பினர் உற்பத்தியாளர் கம்பெனிக்கு வழங்கிய சரக்குகளுக்காக செலுத்த வேண்டிய விலையில் / தொகையில் பிடித்து வைக்கப்பட்ட ஒரு பகுதி ஆகும். பின்வரும் தேதியில் செலுத்துவதற்காக அந்த தொகையை உற்பத்தியாளர் கம்பெனி தக்க வைத்துக் கொள்ளும்.

# அத்தியாயம் - 2
# உற்பத்தியாளர் கம்பெனிகளின் கூட்டுருவாக்கம் (Incorporation) மற்றும் இதர விவகாரங்கள்

## 581B உற்பத்தியாளர் கம்பெனியின் நோக்கங்கள்

(1) உற்பத்தியாளர் கம்பெனியின் நோக்கங்கள் கீழ்காண்பவை அனைத்துடனோ அல்லது ஏதாவதுடனோ தொடர்புடையவையாக இருக்கலாம். அவையாவன,

(a) உறுப்பினர்களின் முதல்நிலை விளை-பொருட்களின் உற்பத்தி, அறுவடை, கொள்-முதல், தரம் பிரித்தல், ஒன்று சேர்த்தல், கையாளுதல், சந்தைப்படுத்துதல், விற்பனை செய்தல் மற்றும் ஏற்றுமதி செய்தல்; சரக்குகளை இறக்குமதி செய்தல்; உறுப்பினர்கள் பயனடைவதற்காக சேவைகளை வழங்குதல். உற்பத்தியாளர் நிறுவனம் இந்தப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள செயல்பாடுகளை தானாகவோ அல்லது இதர நிறுவனங்களின் மூலமாகவோ மேற்கொள்ளலாம்.

(b) பதப்படுத்துதல், காய வைத்தல், வடித்தல், காய்ச்சுதல், சாறு பிரித்தல், டப்பாக்களில் / பண்டங்களில் அடைத்தல் மற்றும் பொட்டலம் கட்டுதல் போன்ற செயல்களின் மூலம் உறுப்பினர்களின் விளைபொருட்களைப் பக்குவப்படுத்துதல்.

(c) இயந்திரம், உபகரணம் அல்லது நுகர்பொருட்களை குறிப்பாக தன்னுடைய உறுப்பினர்களுக்காக உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல் அல்லது விநியோகித்தல்.

(d) தன்னுடைய உறுப்பினர்கள் மற்றும் பிறருக்கு பரஸ்பர உதவி கொள்கைகள் (mutual assistance principles) குறித்து கற்பித்தல்.

(e) தன்னுடைய உறுப்பினர்களின் ஆர்வத்தை (interest) அதிகரித்து பலனளிக்க, தொழில்நுட்ப சேவைகள், ஆலோசனை சேவைகள், பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மற்றும் இதர சேவைகளை வழங்குதல்;

(f) ஆற்றலை உற்பத்தி செய்தல், இடமாற்றுதல் மற்றும் விநியோகித்தல்; நிலம் மற்றும் நீர் ஆதாரங்களை புத்துயிர் அடைய செய்தல்; நிலம் மற்றும் நீர் ஆதாரங்களை பயன்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல்; முதல் நிலை உற்பத்தி சார்ந்த தகவல் பரிமாற்றத்தை மேற்கொள்ளுதல்.

(g) உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் முதல்நிலை விளைபொருள்களுக்கு காப்பீடு வழங்குதல்

(h) பரஸ்பர புரிந்து கொள்ளுதல் மற்றும் பரஸ்பர உதவி சார்ந்த நுட்பங்களை மேம்படுத்துதல்.

(i) இயக்குனர் அவையினால் (Board of Directors) தீர்மானிக்கப்படும் நலத் திட்ட நடவடிக்கைகள் அல்லது வசதிகளை உறுப்பினர்களின் நன்மைக்காக செயல்-படுத்துதல்.

(j) கூறுகள் (a) முதல் (i) வரை குறிப்பிடப்பட்டுள்ள செயல்பாடுகளுடன் தொடர்புடைய இதர நடவடிக்கைகள், துணை செயல்பாடுகள் அல்லது நேரிடக்கூடிய இதர செயல்பாடுகளை மேற்கொள்ளுதல். உறுப்பினர்களுக்குள் பரஸ்பரத்தன்மை மற்றும் பரஸ்பர உதவி செய்யும் கொள்கைகளை எந்த ஒரு வகையிலும் மேம்படுத்தக்கூடிய இதர செயல்பாடுகளை மேற்கொள்ளுதல்.

(k) கூறுகள் (a) முதல் (j) வரை குறிப்பிடப்பட்டுள்ள கொள்முதல், பக்குவப்படுத்துதல், சந்தைப் படுத்துதல் போன்ற செயல்பாடுகளுக்கு அல்லது இதர செயல்பாடுகளுக்கு நிதியுதவி வழங்குதல். தன்னுடைய உறுப்பினர்களுக்கு கடனுதவி வழங்குதல் அல்லது இதர நிதி சேவைகளை வழங்குதல் போன்றவை மேற்குறிப்பிட்ட நிதியுதவியில் அடங்கும்.

(2) எல்லா வித உற்பத்தியாளர் கம்பெனிகளும், இந்தப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தன்னுடைய நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்காக தன்னுடைய செயல் திறன்மிக்க உறுப்பினர்களின் விளைபொருட்களுக்கு முதன்மை இடம் கொடுத்துக் கையாள வேண்டும்.

## 581C உற்பத்தியாளர் கம்பெனியின் உருவாக்கம் (Formation) மற்றும் பதிவு (Registration)

(1) பத்து அல்லது அதற்கு மேற்பட்ட தனிநபர்களாக இருக்கும் உற்பத்தியாளர்கள் இணைந்து உற்பத்தியாளர் கம்பெனியை உருவாக்கலாம். விருப்பமுள்ள இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உற்பத்தியாளர் நிறுவனங்கள் ஒன்றிணைந்து உற்பத்தியாளர் கம்பெனியை உருவாக்கலாம்.

பத்து அல்லது அதற்கு மேற்பட்ட தனிநபர்கள் மற்றும் உற்பத்தியாளர் நிறுவனங்கள் ஒன்றிணைந்தும் உற்பத்தியாளர் கம்பெனியை உருவாக்கலாம். அவை பகுதி 581B இல் குறிப்பிடப்பட்டுள்ளப்படியான நோக்கங்களையும் இந்த பகுதியில் குறிப்பிடப் பட்டுள்ள தேவையான தகுதிகளையும் கொண்டிருக்க வேண்டும். உற்பத்தியாளர் கம்பெனி, சட்டத்தின் பதிவு பெறுவதற்கான விதிமுறைகளுக்கு உட்பட வேண்டும். இத்தகைய தகுதிகளை பூர்த்தி செய்யக்கூடிய தனிநபர்களோ / உற்பத்தியாளர் அமைப்புகளோ இரண்டும் ஒன்றிணைந்தோ இந்தச் சட்டத்தின் கீழ் புதிய உற்பத்தியாளர் கம்பெனியை உருவாக்கலாம்.

(2) சட்டத்தின் கீழ் கம்பெனியை பதிவு செய்வது தொடர்பான அனைத்து விதிமுறைகளுக்கும் உட்பட்டு பதிவிற்கு முந்திய மற்றும் நிகழக்கூடிய விவகாரங்கள் சார்ந்த அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்துள்ளதாக பதிவாளருக்கு திருப்தி ஏற்பட வேண்டும். அவ்வாறு திருப்தியடையும் பதிவாளர், பதிவு செய்வதற்குத் தேவையான ஆவணங்களைப் பெற்ற 30 நாட்களுக்குள் அமைப்பு சாசனம், செயல்முறை விதிகள் மற்றும் இதர ஆவணங்கள் ஏதாவது இருந்தால் அவற்றை-யும் பதிவு செய்து உற்பத்தியாளர் கம்பெனிகள் சட்டத்தின் கீழ் உற்பத்தியாளர் கம்பெனிக்கான கூட்டுருவாக்கச் சான்றிதழை (Incorporation Certificate) வழங்குவார்.

(3) ஒவ்வொரு உறுப்பினரும் அவரவருடைய பங்குகளில் செலுத்தப்படாத தொகையின் அளவுக்கு மட்டுமே பொறுப்பு பெற்றிருப்பார்கள். இது அமைப்புச் சாசனத்தின் மூலம் வரையறுக்கப்பட்டிருக்க வேண்டும். இதனால் இந்த கம்பெனி பங்குகளால் வரையறுக்கப்பட்ட கம்பெனி என்று கூறப்படும்.

(4) பதிவு செய்தல், சட்ட ஆலோசனைக்கான கட்டணம், அமைப்பு சாசனம் மற்றும் செயல்முறை விதிகளை அச்சிடுதல் உட்பட உற்பத்தியாளர் கம்பெனியின் உருவாக்கம் மற்றும் பதிவு செய்வதுடன் தொடர்புடைய அனைத்து வித நேரடி செலவுகளையும் உற்பத்தியாளர் நிறுவனம் அதன் தோற்றுவிப்பாளர்களுக்கு திரும்பச் செலுத்தலாம். மேற்கூறிய செலவுகளை திரும்பச் செலுத்துவதற்கு முன்பு உற்பத்தியாளர் நிறுவனம் அதன் உறுப்பினர் களின் முதல் பொதுக் குழு கூட்டத்தில் அதற்கான அங்கீகாரத்தை / அனுமதியைப் பெற வேண்டும்.

(5) உட்பிரிவு (1)ன் கீழ் பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளர் கம்பெனி ஒரு கூட்டாண்மை அமைப்பாக (Corporate body) செயல்படும். ஒரு தனியார் வரையறுக்கப்பட்ட கம்பெனியைப் போலவே இந்தப் பகுதியிலுள்ள விதிமுறைகள் பொருந்தும். ஆனால், உற்பத்தியாளர் கம்பெனியின் உறுப்பினர் எண்ணிக்கைக்கு எந்தவித வரம்பும் இல்லை. மேலும், இந்தச் சட்டத்தின் கீழ் எந்தவொரு சந்தர்ப்ப சூழ்நிலையிலும், யாராலும் உற்பத்தியாளர் கம்பெனியானது ஒரு வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பெனியாக (Public Limited Company) மாற்றப்படவோ அல்லது கருதப்படவோ முடியாது.

## 581D உற்பத்தியாளர் கம்பெனியின் உறுப்பினர் நிலை மற்றும் ஓட்டு போடும் உரிமை

(1) (a) தனிநபர்களை மட்டுமே உறுப்பினர்களாக கொண்டிருந்தால், ஒவ்வொரு உறுப்பின-ருக்கும் ஒரு ஓட்டு செலுத்த உரிமை உண்டு. இந்த ஓட்டுரிமை குறிப்பிட்ட உறுப்பினர் வைத்திருக்கும் பங்கு எண்ணிக்கை, அல்லது உற்பத்தியாளர் கம்பெனியின் வாடிக்கையாதரவை சார்ந்து அமைவதில்லை.

(b) உற்பத்தியாளர் நிறுவனங்களை மட்டுமே உறுப்பினர்களாகக் கொண்டிருந்தால், அத்தகைய உற்பத்தியாளர் நிறுவனங்-களுக்கான ஓட்டுரிமை அவை கம்பெனியின் வியாபாரத்தில் கடந்த வருடம் எப்படி பங்கேற்றது என்பதை அடிப்படையாக கொண்டு செயல்முறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளப்படி தீர்மானிக்கப்படும். எனினும், கம்பெனி பதிவு பெற்ற முதல் ஆண்டில் குறிப்பிட்ட உற்பத்தியாளர் நிறுவனத்தின் ஓட்டிடும் உரிமை அது வைத்திருக்கும் பங்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

(c) தனிநபர்களையும், உற்பத்தியாளர் நிறுவனங்-களையும் உறுப்பினர்களாக கொண்டிருந்தால் ஓட்டிடும் உரிமை ஒவ்வொரு உறுப்-பினருக்கு ஒரு ஓட்டு என்ற அடிப்படையிலே கணக்கிடப்படும்.

(2) ஒரு உறுப்பினர் தன் உறுப்பினர் நிலையை தக்க வைத்து கொள்ளுவதற்கான நிபந்தனைகளையும், உறுப்பினர்கள் ஓட்டிடும் உரிமையை செயல்படுத்தும் வழிமுறைகளையும் எந்தவொரு உற்பத்தியாளர் கம்பெனியும் தன் செயல்முறை விதிகளில் சேர்க்கலாம்.

(3) உட்பிரிவு (1) அல்லது உட்பிரிவு (2) இல் கூறப் பட்டதற்கு அப்பால், எந்த உற்பத்தியாளர் கம்பெனியும் தன்னுடைய செயல்முறை விதிகள் அனுமதிக்கும் பட்சத்தில், எந்தவொரு சிறப்புக் கூட்டம் அல்லது பொதுக் கூட்டத்திலும் ஓட்டிடும் உரிமை செயல்திறன் மிக்க உறுப்பினர்களுக்கு மட்டுமே உண்டு என்று வரைமுறைப்படுத்தலாம்.

(4) உற்பத்தியாளரின் வியாபாரத்திற்கு முரணான வியாபார ஆர்வத்தைக் கொண்டுள்ள எந்தவொரு நபரும் அந்த கம்பெனியின் உறுப்பினராக இருக்கக் கூடாது.

(5) உற்பத்தியாளர் கம்பெனியின் வியாபாரத்திற்கு முரணான வியாபார ஆர்வத்தை ஒரு உறுப்பினர் கொண்டிருந்தால் அவரின் உறுப்பினர் நிலை முடிவடைந்துவிடும் மற்றும் செயல்முறை விதிகளின்படி குறிப்பிட்ட நபரை அவருடைய உறுப்பினர் நிலையிலிருந்து நீக்கிவிட வேண்டும்.

### 581E உறுப்பினர்களுக்கான பயன்கள் (Benefits)

(1) செயல்முறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு உட்பட்டு, ஆரம்பத்தில் ஒவ்வொரு உறுப்பினரும் அவர் வழங்கிய விளைபொருட்கள் அல்லது ஒன்று சேர்த்து கொடுக்கப்பட்ட விளைபொருட்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை பெறுவார்கள். இந்தத் தொகை அளவை உற்பத்தியாளர் கம்பெனியின் அவை தீர்மானிக்கும்.

தக்க வைப்புத் தொகை பின்னர் பணமாகவோ அல்லது பொருளாகவோ அல்லது பங்குகள் ஒதுக்கீடாகவோ குறிப்பிட்ட நிதியாண்டில் ஒரு உறுப்பினர் உற்பத்தியாளர் கம்பெனிக்கு வழங்கிய விளைபொருளின் அளவுக்கு ஈடாக வழங்கப்படும். அவையினால் தீர்மானிக்கப்படும் விதிமுறைகளுக்கு உட்பட்டு தக்க வைப்புத் தொகை வழங்கப்படும்.

(2) அனைத்து உறுப்பினரும் அவர்கள் வழங்கிய பங்கு மூலதனத்திற்கு வரையறுக்கப்பட்ட மாற்றீடு (Limited return) தொகையை மட்டுமே திரும்பப் பெறுவர். இத்தகைய உறுப்பினர்களுக்கு பிரிவு 581ZJ யிலுள்ள விதிமுறைகளின்படி ஊக்கப் பங்குகள் (Bonus shares) ஒதுக்கப்படலாம்.

(3) பிரிவு 581ZI இல் குறிப்பிடப்பட்டுள்ளப்படி உறுப்பினர்களுக்கான வரையறுக்கப்பட்ட மாற்றீடு தொகை மற்றும் ஒதுக்கீடு நிதிகளுக்கு செலுத்திய பின் ஏதாவது தொகை மிகைப்படியாக மீதமிருந்தால், அதை உறுப்பினர்களுக்கு வாடிக்கை ஆதரவு ஊக்கத் தொகையாக உற்பத்தியாளர் கம்பெனியின் வியாபாரத்தில் அவர்களின் பங்கேற்பின் அளவை அடிப்படையாகக் கொண்டு பகிர்ந்தளிக்கலாம். பொதுக் கூட்டத்தில் உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படும் முறையில் இந்த வாடிக்கையாதரவு ஊக்கத் தொகையை பணமாகவோ, சாதாரண பங்குகள் (Equity Shares) ஒதுக்கீடாகவோ அல்லது இரண்டும் கலந்தோ விநியோகிக்கலாம்.

### 581F உற்பத்தியாளர் கம்பெனியின் அமைப்பு சாசனம் (Memorandum of Producer Company)

(1) அனைத்து உற்பத்தியாளர் கம்பெனிகளின் அமைப்பு சாசனத்திலும் கீழ்க்காணும் விவரங்கள் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

(a) குறிப்பிட்ட கம்பெனியின் பெயருக்கு பின் “உற்பத்தியாளர் கம்பெனி லிமிடெட்” என்ற சொற்கள் இருக்க வேண்டும்.

(b) உற்பத்தியாளர் கம்பெனியின் பதிவு அலுவலகம் எந்த மாநிலத்தில் உள்ளது என்று குறிப்பிட வேண்டும்.

(c) உற்பத்தியாளர் கம்பெனியின் முக்கிய நோக்கங்களில் பிரிவு 581B இல் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களில் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்டவையோ இடம் பெற்றிருக்க வேண்டும்.

(d) கம்பெனியின் அமைப்பு சாசனத்திற்கு இணங்கி / உட்பட்டு ஒரு உற்பத்தியாளர் கம்பெனியாக உருவாக விரும்பும் நபர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள்.

(e) உற்பத்தியாளர் கம்பெனியாக பதிவு செய்வதற்காக உள்ள பங்கு மூலதனத் தொகை (Share Capital) மற்றும் அதை நிலையான தொகைக்குரிய பங்குகளாகப் பிரித்தல்.

(f) பிரிவு 581J உட்பிரிவு (2) இன் படி முதல் இயக்குனர்களாக செயல்படும், உற்பத்தியாளர்களாக உள்ள கம்பெனியின் உறுப்பினர்களின் பெயர், முகவரி மற்றும் தொழில் விவரங்கள்.

(g) உறுப்பினர்களுக்கான பொறுப்புகள் (Liability) வரையறுக்கப்பட்டது.

(h) உறுப்பினர்களின் பெயருக்கு எதிரே அவர்கள் வைத்திருக்கும் பங்குகளின் எண்ணிக்கையை குறிப்பிட வேண்டும். மேலும் எந்த உறுப்பினரும் ஒரு பங்கிற்கு குறைவாக எடுத்துக் கொள்ளக்கூடாது.

(i) ஒரு வேளை உற்பத்தியாளர் கம்பெனியின் நோக்கங்கள் ஒரு மாநிலத்திற்குள் மட்டும் உட்படாமல் இருந்தால், வேறு எந்தெந்த மாநிலங்களில் விரிவுப்படுத்தப்பட்டுள்ளன என்பதைக் குறிப்பிட வேண்டும்.

### 581G செயல்முறை விதிகள் (Articles of Association)

(1) அமைப்பு சாசனத்தில் எந்த மாநிலத்தில் குறிப்பிட்ட கம்பெனியின் பதிவு அலுவலகம் அமைந்துள்ளதாக

குறிப்பிடப்பட்டுள்ளதோ அந்த மாநில பதிவாளரிடம், கம்பெனியின் பதிவிற்காக கீழ்க்கண்ட ஆவணங்கள் கொடுக்கப்பட வேண்டும்.

(a) உற்பத்தியாளர் கம்பெனியின் அமைப்பு சாசனம்

(b) அமைப்பு சாசனத்திற்கு இணங்கி ஏற்றுக்கொள்ளும் உறுப்பினர்களினால் கையொப்பம் இடப்பட்ட செயல்முறை விதிகள்

(2) செயல்முறை விதிகள் கீழ்காணும் பரஸ்பர உதவிக் கொள்கைகளை உள்ளடக்கியிருக்க வேண்டும். அவையாவன :

(a) தன்னிச்சையாக, தானாக சேர விரும்பும் அனைத்து நபருக்கும் உற்பத்தியாளர் கம்பெனியில் உறுப்பினர் நிலை கீழ்கண்ட சூழ்நிலைகளில் அளிக்கப்படலாம். இவர்கள், உறுப்பினர்களுக்கு உரிய தகுதி பெற்றிருக்க வேண்டும், கம்பெனியின் சேவைகள் மற்றும் வசதிகளை பயன்படுத்திக் கொள்ளக்கூடிய நபர்களாகவும். உறுப்பினர்களின் கடமைகளை ஏற்றுக் கொள்பவர்களாகவும் இருக்க வேண்டும்.

(b) இந்தப் பகுதியில் வேறு வகையில் குறிப்பிடப்பட்டு இருந்தால் அன்றி, ஒவ்வொரு உறுப்பினருக்கும் அவர் வைத்திருக்கும் பங்குகளின் எண்ணிக்கையை பொருட்படுத்தாமல் ஒரு ஓட்டு மட்டுமே உண்டு.

(c) இந்தப் பகுதியிலுள்ள விதிமுறை-களுக்கு உட்பட்டு, குறிப்பிட்ட முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட இயக்குனர்களைக் கொண்ட அவையினால் உற்பத்தியாளர் கம்பெனி நிர்வகிக்கப்படும். இயக்குனர் அவை, கம்பெனியின் உறுப்பினர் களுக்கு பொறுப்பேற்று பதிலளிக்க வேண்டும்.

(d) இந்தப் பகுதியில் குறிப்பிட்டுள்ளபடி, பங்கு மூலதனத்திற்கு வரையறுக்கப்பட்ட மாற்றீடு கிடைக்கும்.

(e) உற்பத்தியாளர் கம்பெனியின் செயல்பாடுகளின் மூலம் கிடைக்கும் மிகையான வருவாய் (Surplus) நியாயமான முறையில் கீழ்க்கண்ட வழிகளில் பகிர்ந்தளிக்கப்படும்.

i. உற்பத்தியாளர் கம்பெனியின் வியாபாரத்தை மேம்படுத்துவதற்காக பயன்படுத்தலாம்;

ii. பொதுவான வசதிகளை வழங்க பயன்படுத்தலாம்; மற்றும்

iii. உறுப்பினர்களுக்கு அவர்களுடைய வியாபார பங்கேற்பு அளவின்படி பகிர்ந்து அளிக்கலாம்.

(f) உறுப்பினர்கள், பணியாளர்கள் மற்றும் பிற நபர்களுக்கு பரஸ்பர புரிந்து கொள்ளுதல் கொள்கைகள் மற்றும் பரஸ்பர உதவி புரிதலின் நுட்பங்கள் குறித்து பயிற்சி அளிப்பதற்கான விதிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும்.

(g) உற்பத்தியாளர் கம்பெனி, உள்ளூர், தேசிய அல்லது சர்வதேச அளவிலான இதர உற்பத்தியாளர் கம்பெனிகளுடன் (ஒரேவிதமான கொள்கையை பின்பற்றும் இதர அமைப்புகள்) கூட்டுறவை ஏற்படுத்தி, ஒத்துழைக்க வேண்டும். இதன் மூலம் கம்பெனி தன்னுடைய உறுப்பினர்களுக்கும் மற்றும் சேவை அளிக்கும் சமுதாயத்தினருக்கும் சிறப்பாக சேவை செய்யலாம்.

(3) உட்பிரிவுகள் (1) மற்றும் (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின் பொதுத் தன்மைக்கு எந்தவித பாதிப்பும் இன்றி, கீழ்காணும் விதிமுறைகள் செயல்முறை விதிகளில் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். அவையாவன,

(a) உறுப்பினர்களுக்கான தகுதிகள், உறுப்பினர் நிலையை தொடர்வதற்கான அல்லது ரத்து செய்வதற்கான நிபந்தனைகள் மற்றும் பங்குகளை மாற்றம் செய்வதற்கான விதிமுறைகள், நிபந்தனைகள் மற்றும் வழிமுறைகள்;

(b) வாடிக்கையாதரவை மற்றும் வாடிக்கையாதரவை அடிப்படையாகக் கொண்டு ஓட்டுரிமையை உறுதிப்படுத்தும் முறைகள்;

(c) பிரிவு 581N உட்பிரிவு (1) இன் கீழுள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு கீழ்காணும் விவரங்களை உள்ளடக்கியிருக்க வேண்டும். அவை உருவாக்க முறை, அவையின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள், குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச இயக்குனர்களின் எண்ணிக்கை, தேர்தல் முறை கள், இயக்குனர்களை பணியமர்த்துதல், சுழற்சி முறை பணி ஓய்வு, தேர்வு செய்யப்படுவதற்கான அல்லது பணியில் தொடர்வதற்கான தகுதிகள். அவை இயக்குனர்களின் பதவிக் காலம், அவர்களின் அதிகாரங்களும் கடமைகளும், இயக்குனர்களுக்கான தேர்தல் அல்லது அழைப்பு விட்டு (Co-Option) அமர்த்துவதற்கான கட்டுப்பாடுகள், இயக்குனர்களை நீக்கம் செய்தல் மற்றும் அவையிலுள்ள காலியிடங்களை நிரப்பு

வதற்கான முறைகள் மற்றும் தலைமை செயலதிகாரியை பணியமர்த்துவதற்கான வழிமுறைகள் மற்றும் விதிமுறைகள்;

(d) அவைத் தலைவருக்கான தேர்தல், இயக்குனர்கள் மற்றும் தலைவருக்கான பணி காலம், உறுப்பினர்களின் பொது அல்லது சிறப்பு கூட்டங்களில் ஓட்டிடும் முறை, அவைக் கூட்டங்களில் இயக்குனர்கள் ஓட்டிடுவதற்கான செயல்முறை, தலைவரின் அதிகாரங்கள் மற்றும் எந்தெந்த தருணங்களில் தலைவர் தனது ஓட்டினை இறுதி / முடிவு ஓட்டாக இடலாம் என்பதற்கான வழிமுறைகள்;

(e) தக்க வைப்புத் தொகையை எந்தெந்தத் தருணங்களில், எந்த முறையில், நிர்ணயித்து / உறுதி செய்து விநியோகிக்கலாம்;

(f) வாடிக்கையாதரவு ஊக்கத் தொகையை பணமாகவோ அல்லது சாதாரண பங்குகள் ஒதுக்கீடாகவோ அல்லது இரண்டும் கலந்தோ விநியோகிக்கும் முறை;

(g) பிரிவு 581ZI, உட்பிரிவு (2) இல் குறிப்பிடப்பட்டுள்ளப்படி பகிர்ந்து கொள்ள வேண்டிய பங்களிப்புகள் மற்றும் அதை சார்ந்த விவரங்கள்;

(h) பிரிவு 581ZJ இல் உள்ளபடி பொது வைப்பு நிதியிலிருந்து ஊக்கப் பங்குகளை ஒதுக்கீடு செய்வது குறித்த விவரங்கள்;

(i) உறுப்பினர்களால் வழங்கப்பட்ட விளை-பொருட்கள் அல்லது பொருட்களின் விற்பனையின் மூலம் கிடைத்த தொகையை பணமாக கொடுப்பதற்கு பதில் உற்பத்தியாளர் கம்பெனியின் சாதாரண பங்குகளாக பிரித்தளிப்பதற்கான அடிப்படை மற்றும் முறை;

(j) ஒதுக்கீடு தொகைகள், எந்தெந்த ஆதாரங்களிலிருந்து நிதியைத் திரட்டலாம், நிதி திரட்டுவதற்கான வரம்புகள், அத்தகைய நிதிகளைப் பயன்படுத்துவதற்கான கட்டுப்பாடுகள் மற்றும் கடன் வாங்குவதற்கான வரம்புகள் மற்றும் அதற்கான கட்டுப்பாடுகள்;

(k) உறுப்பினர்களுக்கு வழங்கப்படக்கூடிய கடன்கள், கடனுதவிகள் அல்லது முன்பணம் மற்றும் இவற்றை வழங்குவதற்கான கட்டுப்பாடுகள்;

(l) கம்பெனியின் பொதுவான வியாபாரம் சார்ந்த விவரங்களைப் பெறுவதற்கு ஒரு உறுப்பினருக்கு உள்ள உரிமை;

(m) உற்பத்தியாளர் கம்பெனியை கிரையப்படுத்தும் (Liquidation) அல்லது கலைக்கும் (Dissolution) சந்தர்ப்பத்தில், அனைத்து பொறுப்புகளையும் முடித்த பின் மீதமிருக்கும் நிதியை பிரித்தளித்து விநியோகிப்பதற்கான அடிப்படைகளும், முறைகளும்;

(n) உற்பத்தியாளர் கம்பெனியை பிரித்தல், இதர கம்பெனியுடன் ஒருங்கிணைத்தல், மற்றொரு கம்பெனியுடன் சேர்ந்து ஒரே கம்பெனியாக மாற்றுதல், துணை அமைப்புகளை / கம்பெனிகளை உருவாக்குதல், கூட்டு வணிக முயற்சிகளில் (Joint Venture) ஈடுபடுதல் மற்றும் இந்த செயல்பாடுகள் சார்ந்த இதர நடவடிக்கைகளில் ஈடுப்படுவதற்கான அதிகாரம் வழங்குதல்;

(o) உற்பத்தியாளர் கம்பெனியை பதிவு செய்த 90 நாட்களுக்குள் நடத்தப்படவிருக்கும் சிறப்பு பொதுக் கூட்டத்தில் உற்பத்தியாளர் கம்பெனியின் அமைப்பு சாசனம் மற்றும் செயல்முறை விதிகளை முன்வைத்தல்;

(p) உறுப்பினர்கள் சிறப்பு தீர்மானத்தின் மூலம் செயல்முறை விதிகளில் சேர்க்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கும் இதர விதிமுறைகள்.

## 581H அமைப்பு சாசனத்தில் திருத்தம் செய்தல்

(1) உற்பத்தியாளர் கம்பெனி இச்சட்டத்தின் கீழ் குறிப்பாக வழங்கப்பட்டுள்ள முறைகளை கடைபிடித்து மட்டுமே அமைப்பு சாசனத்தில் மாற்றம் கொண்டு வரலாம். வேறு எந்த வகையிலும் அமைப்பு சாசனத்தில் மாற்றங்கள் கொண்டு வர முடியாது.

(2) ஒரு உற்பத்தியாளர் கம்பெனி சிறப்பு தீர்மானத்தின் மூலம் தன்னுடைய அமைப்பு சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை மாற்றி அமைக்கலாம். இந்த சிறப்பு தீர்மானம் பிரிவு 581 B க்கு புறம்பாக இருக்கக்கூடாது.

(3) உட்பிரிவு (2) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளப்படி அமைப்பு சாசனத்தில் மாற்றம் ஏதாகிலும் செய்யப்பட்டால், அவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப் பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், இரண்டு இயக்குனர்களால் கையொப்பமிட்டு சான்றளிக்கப்பட்ட திருத்திய அமைப்பு சாசனத்தின் நகல் மற்றும் சிறப்பு தீர்மானத்தின் நகலை பதிவாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

ஒரு வேளை உற்பத்தியாளர் கம்பெனியின் பதிவு அலுவலகம் ஒரு பதிவாளரின் அதிகார வரம்பிலிருந்து மற்றொரு பதிவாளரின் கீழுள்ள அதிகார வரம்பிற்கு மாற்றப்பட்டிருந்தால், இரண்டு இயக்குனர்களால் கையொப்பமிடப்பட்ட சான்றளிக்கப்

பட்ட சிறப்பு தீர்மானத்தின் நகல்களை இரண்டு பதிவாளர்களுக்கும் முப்பது நாட்களுக்குள் அனுப்ப வேண்டும்.

இரண்டு பதிவாளர்களும் இந்த சான்றளிக்கப்பட்ட சிறப்புத் தீர்மானத்தை பதிவு செய்வார்கள்.

அதன் பின்னர், எந்த பகுதியிலிருந்து பதிவு அலுவலகம் வேறு பகுதிக்கு மாற்றப்பட்டதோ அந்த பகுதியின் பதிவாளர் உற்பத்தியாளர் கம்பெனி சார்ந்த அனைத்து ஆவணங்களையும் அடுத்த பதிவாளருக்கு அனுப்பி விடுவார்.

(4) மனுவின் பேரில் கம்பெனி சட்ட வாரியத்தினால் உறுதிப்படுத்தப்பட்டாலன்றி, கம்பெனியின் பதிவு அலுவலகத்தை ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு இட மாற்றம் செய்ததின் தொடர்பாக அமைப்பு சாசன விதிமுறைகளில் செய்யப்படும் மாற்றம் நடைமுறைப்படுத்தப்பட மாட்டாது.

### 581I செயல்முறை விதிகளில் திருத்தம் செய்தல்

(1) உற்பத்தியாளர் கம்பெனியின் மூன்றில் இரண்டு பங்கிற்கு குறையாத தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குனர்களால் அல்லது மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாத உறுப்பினர்களால் செயல்முறை விதிகளில் செய்யப்பட வேண்டிய திருத்தங்கள் முன்மொழியப்படலாம்.

இந்த திருத்தங்கள் சிறப்பு தீர்மானத்தின் (Special resolution) மூலம் உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.

இத்தகைய திருத்தங்கள் அவை ஏற்றுக்கொள்ளப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் இரண்டு இயக்குனர்களால் கையொப்பமிட்டு, சான்றளிக்கப்பட்ட, திருத்தப்பட்ட விதிமுறைகள் மற்றும் சிறப்பு தீர்மானம் ஆகியவற்றுடன் பதிவாளரிடம் பதிவு செய்யப்பட வேண்டும்.

### 581J மாநிலங்களிடை கூட்டுறவு சங்கங்கள் உற்பத்தியாளர் கம்பெனிகளாக மாறுவதற்கான வழிவகைகள்

(1) பிரிவு 581C உட்பிரிவு (1) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை மேலோங்கும் வகையில் ஒரு மாநிலத்திற்கு மட்டுமே உட்படாத நோக்கங்களையுடைய எந்தவொரு மாநிலங்களிடை கூட்டுறவு சங்கமும், இந்தப் பகுதியின் கீழ் உற்பத்தியாளர் கம்பெனியாக பதிவு பெறுவதற்காக பதிவாளரிடம் விண்ணப்பிக்கலாம்.

(2) உட்பிரிவு (1) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விண்ணப்பங்களும் கீழ்க்காணும் ஆவணங்களை உள்ளடக்கியிருக்க வேண்டும்.

(a) இந்தச் சட்டத்தின் கீழ் உற்பத்தியாளர் கம்பெனியாக உருவாக்க வேண்டி, குறிப்பிட்ட மாநிலங்களிடை கூட்டுறவு சங்கத்தின் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களால் நிறைவேற்றப் பட்ட சிறப்பு தீர்மானத்தின் ஒரு நகல்.

(b) கீழ்க்காணும் விவரங்கள் அடங்கிய அறிக்கை,

i. கூட்டுறவு சங்கத்தின் இயக்குனர்கள் மற்றும் தலைமை செயலதிகாரி மற்றும் வேறு எந்தப் பெயரிலும் உள்ள பொறுப்பதிகாரிகளின் பெயர்கள் மற்றும் முகவரி அல்லது தொழில் விவரம்.

ii. குறிப்பிட்ட மாநிலங்களிடை கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர்கள் பட்டியல்.

(c) பிரிவு 581B இல் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நோக்கங்களில் குறிப்பிட்ட மாநிலங்களிடை கூட்டுறவு சங்கம் ஈடுபட்டுள்ளதைச் சுட்டிகாட்டக்கூடிய அறிக்கை.

(d) கூறுகள் (a) முதல் (c) வரை குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களை உறுதிப்படுத்தும் வகையில் குறிப்பிட்ட மாநிலங்களிடை கூட்டுறவு சங்கத்தின் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட இயக்குனர்களின் உறுதிமொழி.

(3) ஒரு மாநிலங்களிடை கூட்டுறவு சங்கம் உற்பத்தியாளர் கம்பெனியாக பதிவு பெற்றபின் அதன் முந்தைய அடையாளம் குறிக்கப்படுவதோடு பெயரின் ஒரு பகுதியாக “உற்பத்தியாளர் கம்பெனி லிமிடெட்” என்ற வார்த்தைகள் இடம் பெற வேண்டும்.

(4) உட்பிரிவு (1) முதல் (3) வரையுள்ள தேவைகளுக்கு உட்பட்டு, விண்ணப்பத்தை பெற்ற முப்பது நாட்களுக்குள் பதிவாளர், பதிவிற்காக விண்ணப்பிக்கும் மாநிலங்களிடை கூட்டுறவு சங்கம் இந்தப் பகுதியின் கீழ் பதிவு செய்யப்பட்டு ஓர் உற்பத்தியாளர் கம்பெனியாக உருவாக்கப்படுகிறது என்பதற்கு தன் அதிகாரத்தின் கீழ் சான்றளிக்க வேண்டும்.

(5) உட்பிரிவு (1) இன் கீழ், உற்பத்தியாளர் கம்பெனியாக பதிவு பெறுவதற்காக விண்ணப்பிக்கவும், இந்த பகுதியின் கீழ் உற்பத்தியாளர் கம்பெனியாக பதிவு பெறவும், தகுதியானவைகளாவன,

குறிப்பிட்ட சமயம் அமலிலிருக்கும் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு, தன்னுடைய நோக்கங்களை நேரடியாகவோ, அல்லது தான் பங்கு வகிக்கும் கூட்டுறவுகளின் சங்கம் அல்லது கூட்டமைப்பின் மூலமாகவோ மாநிலத்திற்கு வெளியே விரிவுப்படுத்திய உற்பத்தியாளர்கள் அல்லது கூட்டமைப்பினால் உருவாக்கப்பட்ட ஒரு கூட்டுறவு சங்கம் அல்லது உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கங்களின் கூட்டமைப்பு அல்லது உற்பத்தியாளர்களின் கூட்டுறவுகள்.

தன்னுடைய நோக்கங்கள் மற்றும் செயல்பாடுகளை மாநிலத்திற்கு வெளியே விரிவுப்படுத்திய இத்தகைய கூட்டுறவுகளின் கூட்டமைப்புகள் மற்றும் சங்கங்கள்

(6) உட்பிரிவு (1) இன் கீழ், பதிவு செய்யப்பட்ட மாநிலங்களிடை கூட்டுறவு சங்கம் ஒரு உற்பத்தியாளர் கம்பெனியாக மாற்றப்படுகிறது.

உற்பத்தியாளர் கம்பெனியாக மாற்றப்பட்ட பின். இந்த பகுதியிலுள்ள விதிமுறைகளால் அது ஆளுமை செய்யப்படும்.

இதற்கு முன் கட்டுப்படுத்தப்பட்ட சட்டத்தினால் தற்போது ஆளுமை செய்யப்படாது.

உற்பத்தியாளர் கம்பெனியாக பதிவு பெறுவதற்கு முன்பு வரை செய்யப்பட்ட அல்லது தவிர்க்கப்பட்ட செயல்கள் அப்படியே இருக்கும்.

நடைமுறையில் இருக்கும் எந்த ஒரு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றிற்கு மேலோங்கும் வகையில் இத்தகைய மாற்றம் அல்லது அமைப்பு மாறுபாட்டிற்கு உட்பட்ட கூட்டுறவு அமைப்பு அல்லது கம்பெனியில் அதன் மாற்றத்தை காரணமாக்கி எந்தவொரு நபரும் அதற்கு எதிராக பாத்தியதை கோர முடியாது.

(7) உற்பத்தியாளர் கம்பெனியாக பதிவு பெற்ற பின், அதை கம்பெனியாக பதிவு செய்த கம்பெனிகள் பதிவாளர், குறிப்பிட்ட கம்பெனி முன்னாட்களில் மாநிலங்களிடை கூட்டுறவு சங்கமாக பதிவு செய்யப்பட்டிருந்த பதிவகத்தின் பதிவாளருக்கு தெரியப்படுத்தி குறிப்பிட்ட சங்கத்தை அ தன் பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்ய விவரம் தெரிவிப்பார்.

### 581K உற்பத்தியாளர் கம்பெனியாக மாறுவதன் விளைவு

உற்பத்தியாளர் கம்பெனியாக பதிவு பெறுவதற்கு முன்பு மாநிலங்களிடை கூட்டுறவு சங்கத்தின் பங்குதாரராக இருந்த அனைத்து நபர்களும், அது கம்பெனியாக பதிவு பெறவிருக்கும் தேதியிலிருந்து (இனிமேல், அமைப்பு மாறுபாடு தேதி (transformation date) என்று குறிப்பிடப்படும்) உற்பத்தியாளர் கம்பெனியின் பங்குதாரராக கருதப்படுவர். இது அவர்களின் பங்குகளின் தோற்ற மதிப்பிற்கு (face value) ஏற்றவாறு நிர்ணயிக்கப்படும்.

### 581L உடைமைகளை உற்பத்தியாளர் கம்பெனி வசப்படுத்துதல் (Vesting of Undertaking in Producer Company)

(1) அமைப்பு மாறுபாடு தேதியிலிருந்து, மாநிலங்களிடை கூட்டுறவு சங்கத்தினுடைய அல்லது சங்கத்திற்கு சொந்தமானதாக உள்ள அனைத்து அசையும் மற்றும் அசையா சொத்துக்களும், உடைமைகளும் உற்பத்தியாளர் கம்பெனியை சேரும்.

(2) அமைப்பு மாறுபாடு தேதியிலிருந்து மாநிலங்களிடை கூட்டுறவு சங்கத்திற்குரிய அனைத்து உரிமைகள், கடன்கள், பொறுப்புகள், ஆர்வங்கள், முன்னுரிமைகள் மற்றும் கடமைகள் யாவும் மாற்றம் செய்யப்பட்டு, அவை யாவும் உற்பத்தியாளர் கம்பெனியின் உரிமைகள், கடன்கள், பொறுப்புகள், ஆர்வங்கள், முன்னுரிமைகள் மற்றும் கடமைகளாகக் கருதப்படும்.

(3) உட்பிரிவு (2) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவற்றிற்கு குந்தகம் எதுவுமின்றி, அமைப்பு மாறுபாடு தேதியன்று உள்ள நிலவரப்படி உள்ள கடன்கள், பொறுப்புகள் மற்றும் கடமைகள், உடன்பட்ட அனைத்து ஒப்பந்தங்கள் மற்றும் நிறுவனமோ, நிறுவனத்துடன் இணைந்தோ, நிறுவனத்திற்காகவோ நோக்கங்களை பூர்த்தி செய்ய ஈடுப்பட்ட காரியங்கள் மற்றும் விவகாரங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இதர தேவைகள் அனைத்தும் உற்பத்தியாளர் கம்பெனியினுடையதாகவும், கம்பெனியால் மேற்கொள்ளப்படுவதற்காக, கம்பெனியுடன் இணைந்து அல்லது கம்பெனிக்காக உடன்பட்ட அல்லது ஈடுப்பட்டவையாகக் கருதப்படும்.

(4) அமைப்பு மாறுபாடு தேதிக்கு முன்பு வரை உள்ள நிலவரப்படி, மாநிலங்களிடை கூட்டுறவு சங்கத்திற்கு வர வேண்டிய அனைத்து தொகைகளும் உற்பத்தியாளர் கம்பெனிக்கு வர வேண்டிய தொகையாகவே கருதப்படும்.

(5) அமைப்பு மாறுபாடு தேதிக்கு முன்பு மாநிலங்களிடை கூட்டுறவு சங்கத்தினால் நிர்வகிக்கப்பட்ட, அனைத்து அமைப்புகளும் உற்பத்தியாளர் கம்பெனியால் சூழ்நிலைக்கு ஏற்ப தேவைப்படும் குறிப்பிட்ட காலத்திற்கு, குறிப்பிட்ட அளவிற்கு குறிப்பிட்ட முறையில் நிர்வகிக்கப்படும்.

(6) அமைப்பு மாறுபாடு தேதிக்கு முன்பு வரை, மாநிலங்களிடை கூட்டுறவு, சங்கத்திடமிருந்து நிதி, நிர்வாக மற்றும் தொழில்நுட்ப உதவிகளை பெற்று கொண்டிருந்த அனைத்து அமைப்புகளுக்கும், உற்பத்தியாளர் கம்பெனியின் மூலம் அவை தொடர்ந்து அளிக்கப்படும். கம்பெனியால் பொருத்தமானதாகக் கருதப்படும் காலத்திற்கு, குறிப்பிட்ட அளவில் மற்றும் குறிப்பிட்ட முறையில் இந்த உதவிகள் வழங்கப்படும்.

(7) முந்தைய மாநிலங்களிடை கூட்டுறவு சங்கத்தின் மூலதனத் தொகை, தற்போதைய உற்பத்தியாளர் கம்பெனியின் மூலதன தொகையின் ஒரு பகுதியாக இருக்கும்.

(8) இந்தச் சட்டத்தைத் தவிர்த்து, இதர சட்டத்தில் அல்லது எந்தவொரு ஒப்பந்தத்தில் அல்லது இதர செயல்களில் மாநிலங்களிடை கூட்டுறவு சங்கத்தை

குறிப்பிடும் அனைத்து இடங்களிலும் அது உற்பத்தியாளர் கம்பெனியாகவே கருதப்படும்.

(9) அமைப்பு மாறுபாடு தேதியன்று உள்ள நிலவரப்படி, மாநிலங்களிடை கூட்டுறவு சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட அல்லது சங்கத்திற்கு எதிராக தொடரப்பட்டு முடிவு பெறாத எந்தவொரு வகையான இசைவு தீர்ப்பு (arbitral award), மேல் முறையீடு அல்லது எந்தவொரு சட்ட நடவடிக்கையும் பிரிவு 581C இன் கீழ் உற்பத்தியாளர் கம்பெனியாக உருவாக்கப்பட்டதினாலோ அல்லது பிரிவு 581J இன் கீழ் மாநிலங்களிடை கூட்டுறவு சங்கம் உற்பத்தியாளர் கம்பெனியாக மாற்றப்பட்டதினாலோ முடிவடையவோ, அகற்றப்படவோ, இடைநிறுத்தப்படவோ, வேறு எந்தவித குந்தகம் ஏற்படும் வகையிலோ பாதிக்கப் படாது.

குறிப்பிட்ட வழக்கு, இசைவு தீர்ப்பு, மேல் முறையீடு அல்லது இதர சட்ட நடவடிக்கைகள் அதே முறையில் மற்றும் அதே அளவில் உற்பத்தியாளர் கம்பெனியினால் அல்லது உற்பத்தியாளர் கம்பெனிக்கு எதிராக தொடரப்படலாம்; சட்ட நடவடிக்கை எடுக்கப்படலாம் அல்லது செயல்படுத்தப்படலாம்.

இந்தப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் நடைமுறைக்கு வராது இருந்தால், எவ்வாறு குறிப்பிட்ட வழக்கு, இசைவு தீர்ப்பு, மேல்முறையீடு அல்லது இதர சட்ட நடவடிக்கைகள் மாநிலங்களிடை கூட்டுறவு சங்கத்தினாலோ, அதற்கு எதிராகவோ நடந்திருக்குமோ அதே முறையில் உற்பத்தியாளர் கம்பெனி மீது நடக்கும்.

### 581M உற்பத்தியாளர் கம்பெனிக்கு வழங்கப்பட்டதாகக் கருதப்படக்கூடிய சலுகைகள் போன்றவை

அமைப்பு மாறுபாடு தேதியிலிருந்து, நடைமுறையிலிருக்கும் எந்தவொரு சட்டத்தின் கீழும், மாநிலங்களிடை கூட்டுறவு சங்கத்தின் விவகாரங்கள் மற்றும் வியாபாரத் தொடர்பாக அளிக்கப்பட்ட அனைத்து விதமான நிதி மற்றும் இதர சலுகைகள், உரிமம், நன்மைகள், சிறப்பு சலுகைகள் மற்றும் தள்ளுபடிகள் யாவும் உற்பத்தியாளர் கம்பெனிக்கு அளிக்கப்பட்டவையாகவே கருதப்படும்.

### 581N மாநிலங்களிடை கூட்டுறவு சங்கத்தின் அலுவலர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கான விதிமுறைகள்

(1) பிரிவு 581O இல் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை மேலோங்கும் வகையில், உற்பத்தியாளர் கம்பெனியாக உருவாக்கப்படுவதற்கு முன் மாநிலங்களிடை கூட்டுறவு சங்கத்திலிருந்த அனைத்து இயக்குனர்களும் அமைப்பு மாறுபாடு தேதியிலிருந்து ஒரு வருட காலத்திற்கு தங்கள் பதவியை இந்தச் சட்டத்தின் விதிமுறைகளின்படியே தொடர வேண்டும்.

(2) அமைப்பு மாறுபாடு தேதிக்கு முன் மாநிலங்களிடை கூட்டுறவு சங்கத்தில் பணியாற்றி கொண்டிருந்த அனைத்து அதிகாரிகள் அல்லது இதர பணியாளர்கள் (அவையின் இயக்குனர், தலைவர் அல்லது நிர்வாக இயக்குனர் தவிர்த்து) இந்தச் சட்டத்தின் கீழ் உற்பத்தியாளர் கம்பெனியின் அதிகாரிகளாக அல்லது பணியாளர்களாக அமைப்பு மாறுபாடு தேதியிலிருந்து சேர்த்து கொள்ளப்படுவார்கள்.

குறிப்பிட்ட இந்த அதிகாரிகள் அல்லது பணியாளர்களுக்கு மாநிலங்களிடை கூட்டுறவு சங்கம் உற்பத்தியாளர் கம்பெனியாக மாறாமல் இருந்திருந்தால் என்னென்ன உரிமைகள் மற்றும் சிறப்பு உரிமைகளான விடுப்பு மற்றும் பிரயாண சலுகை, நலத்திட்டம், மருத்துவ சலுகை திட்டம், காப்பீடு, வைப்பு நிதி, இதர நிதிகள், பணி ஓய்வு, தன் விருப்பப் பணி ஓய்வு, பணிக்கொடை மற்றும் இதர சலுகைகள் போன்றவை கிடைத்திருக்குமோ அவை அனைத்தையும் உற்பத்தியாளர் கம்பெனி வழங்கும்.

இத்தகைய அதிகாரிகள் அல்லது இதர பணியாளர்கள் தங்கள் பதவி அல்லது பணியில் குறிப்பிட்ட அதே பதவிக்காலம் அதே ஊதியம், அதே விதமான விதிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் கீழ், அதே பொறுப்புகளுடன் நீடிக்கலாம்.

(3) உட்பிரிவு (2) இன் கீழ் மாநிலங்களிடை கூட்டுறவு சங்கத்தின் ஒரு அதிகாரியோ அல்லது மற்ற பணியாளரோ உற்பத்தியாளர் கம்பெனியின் பணியில் அல்லது சேவையில் நீடிக்க விருப்பப்படாத பட்சத்தில் குறிப்பிட்ட அதிகாரி அல்லது பணியாளர் தன் பணியிலிருந்து ராஜினாமா செய்ததாகக் கருதப்படும்.

(4) தொழில் தகராறுகள் சட்டம், 1947 (14/1947) அல்லது தற்சமயம் அமலிலிருக்கும் எந்த ஒரு சட்டத்தில் கூறப்பட்டுள்ளவைகளை மேலோங்கும் வகையில்,

- மாநிலங்களிடை கூட்டுறவு சங்கத்தின் அதிகாரி அல்லது இதர பணியாளரின் பணியை உற்பத்தியாளர் கம்பெனிக்கு மாற்றம் செய்யும்போது குறிப்பிட்ட அதிகாரியோ அல்லது பணியாளரோ இந்தச் சட்டத்தின் கீழ் அல்லது அமலிலிருக்கும் எந்த ஒரு சட்டத்தின் கீழும் எந்தவொரு இழப்பீட்டிற்கும் உரியவர்கள் அல்ல.
- எந்தவொரு நீதிமன்றமோ, தீர்ப்பாயமோ அல்லது இதர அதிகாரங்களோ இத்தகைய கோரிக்கைகளை எந்தவிதத்திலும் அனுமதிக்காது.

(5) மாநிலங்களிடை கூட்டுறவு சங்கத்தின் பணியிலிருந்து அமைப்பு மாறுபாடு தேதிக்கு முன்பே ஓய்வு பெற்ற அதிகாரிகள் மற்றும் இதர பணியாளர்கள் தங்களுக்கு

கிடைக்க வேண்டிய சலுகைகள், உரிமைகள் மற்றும் சிறப்பு உரிமைகளை உற்பத்தியாளர் கம்பெனி-யிலிருந்து பெற்றுக் கொள்ள தகுதியானவர்கள் ஆவார்கள்.

(6) மாநிலங்களிடை கூட்டுறவு சங்கத்தின் வருங்கால வைப்புநிதி மற்றும் பணிக்கொடைக்கான அறக் கட்டளைகள் மற்றும் அதிகாரிகள் மற்றும் பணியாளர்களின் நலனுக்காக உருவாக்கப்பட்ட இதர அமைப்புகள், தங்கள் செயல்பாடுகளை உற்பத்தியாளர் கம்பெனியில் முன்பு போலவே தொடர்ந்து செய்து வரும். வருங்கால வைப்பு நிதி அல்லது பணிக்கொடை நிதிக்கு வழங்கப்பட்டு வந்த வரி விலக்கு உற்பத்தியாளர் கம்பெனிக்கும் தொடர்ந்து அளிக்கப்படும்.

(7) இந்தச் சட்டம் மற்றும் தற்சமயம் நடைமுறை-யிலிருக்கும் எந்த ஒரு சட்டத்திலோ அல்லது மாநிலங்களிடை கூட்டுறவு சங்கத்தின் விதிமுறை களிலோ குறிப்பிடப்பட்டுள்ளவற்றை மேலோங்கும் வகையில்,

மாநிலங்களிடை கூட்டுறவு சங்கத்தின் வியாபாரம் மற்றும் இதர விவகாரங்களை முழுமையாகவோ அல்லது பகுதி நேர மேலாண்மை செய்யும் அவை இயக்குனர், தலைவர், நிர்வாக இயக்குனர் அல்லது எந்த ஒரு நபரும் தங்கள் பணியை இழத்தல் அல்லது மாநிலங்களிடை கூட்டுறவு சங்கத்துடன் இணைந்து தான் செய்த நிர்வாக ஒப்பந்தத்தின் இடைக்கால முறிவு போன்ற எந்த காரணத்திற்காகவும் மாநிலங்களிடை கூட்டுறவு சங்கத்திற்கு எதிராகவோ அல்லது உற்பத்தியாளர் கம்பெனிக்கு எதிராகவோ இழப்பீடு எதுவும் கோர உரிமை கிடையாது.

# அத்தியாயம் - 3
# உற்பத்தியாளர் கம்பெனியின் நிர்வாகம்

### 581O இயக்குனர்களின் எண்ணிக்கை

ஒவ்வொரு உற்பத்தியாளர் கம்பெனியும் குறைந்தபட்சம் ஐந்து மற்றும் அதிகபட்சமாக பதினைந்திற்கு மிகாமல் இயக்குனர்களைக் கொண்டிருக்க வேண்டும்.

ஆனால், உற்பத்தியாளர் கம்பெனியாக உருவாக்கப்பட்ட மாநிலங்களிடை கூட்டுறவு சங்கம், அது உற்பத்தியாளர் கம்பெனியாக உருவாக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு வருடம் வரை 15க்கும் அதிகமான இயக்குனர்களை கொண்டிருக்கலாம்.

### 581P இயக்குனர்களின் நியமனம்

(1) பிரிவு 581N இல் குறிப்பிடப்பட்டுள்ளதை தவிர்த்து அமைப்பு சாசனம் மற்றும் செயல்முறை விதிகளில் கையொப்பமிடும் உறுப்பினர்களை (ஐந்திற்கு குறையாமல்) அவை இயக்குனர்களாக நியமிக்கலாம். இந்தப் பகுதியிலுள்ள விதிமுறைகளின்படி இயக்குனர்களை தேர்ந்தெடுக்கும் வரை, இந்த இயக்குனர்கள் உற்பத்தியாளர் கம்பெனியின் அலுவல்களை கையாளுவார்கள்.

(2) உற்பத்தியாளர் கம்பெனியை பதிவு செய்த 90 நாட்களுக்குள் இயக்குனர்களுக்கான தேர்தலை நடத்த வேண்டும். ஆனால், பிரிவு 581 J, உட்பிரிவு (4) இன் கீழ், உற்பத்தியாளர் கம்பெனியாக பதிவு பெற்ற மாநிலங்களிடை கூட்டுறவு சங்கத்தில் சிறிய வேறுபாடு உள்ளது. இங்கு, குறைந்தபட்சம் ஐந்து இயக்குனர்கள் (பிரிவு 581N உட்பிரிவு (1) இன் கீழ் தன் பணியை தொடரும் இயக்குனர்கள் உட்பட) தங்கள் பதவியில் அத்தகைய கம்பெனியாக பதிவுப் பெற்ற தேதியிலிருந்து நீடிக்கும் பட்சத்தில், இந்த உட்பிரிவில் உள்ள "90 நாட்கள்" என்ற வார்த்தைகளுக்கு பதில் "365 நாட்கள்" என்று மாற்றியமைக்கப்பட்டு பொருள் கொள்ளப்படும்.

(3) செயல்முறை விதிகளில் குறிப்பிட்டுள்ளப்படி, ஒவ்வொரு இயக்குனரும் குறைந்தபட்சம் ஒரு வருடமும், அதிகபட்சமாக ஐந்து வருடங்களுக்கு மிகாமலும் இயக்குனர் பதவி வகிக்க வேண்டும்.

(4) செயல்முறை விதிகளின்படி பணி ஓய்வு பெறும் அனைத்து இயக்குனர்களும் மீண்டும் இயக்குனர்களாக மறு நியமனம் செய்யப்பட தகுதி வாய்ந்தவர்கள் ஆவார்கள்.

(5) உட்பிரிவு (2) இல் உள்ளதை தவிர்த்து, அவை இயக்குனர்கள், உறுப்பினர்களால் வருடாந்திர பொதுக் குழுக் கூட்டத்தில் தேர்வு அல்லது நியமனம் செய்யப்பட வேண்டும்.

(6) அவை, ஒன்று அல்லது ஒன்றிற்கு மேல் வல்லுனர் இயக்குனர் அல்லது கூடுதல் இயக்குனரை அழைப்பு விடுத்து சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் இவர்களின் எண்ணிக்கை மொத்த இயக்குனர்களின் எண்ணிக்கையில் ஐந்தில் ஒரு பங்கிற்கு மேல் இருக்கக்கூடாது. மேலும், அவை தகுதியுடையவர் என்று கருதும் பட்சத்தில் வேறு நபர்களையும் கூடுதல் இயக்குனராக நியமிக்கலாம்.

வல்லுநர் இயக்குனர்களுக்கு தலைவருக்கான தேர்தலில் ஓட்டிடும் உரிமை இல்லை. எனினும், செயல்முறை விதிகளில் அனுமதிக்கப்பட்டிருந்தால், தலைவராக தேர்ந்தெடுக்கப்பட தகுதியானவர்கள் ஆவார்கள்.

வல்லுநர் இயக்குனர் அல்லது கூடுதல் இயக்குனருக்கான அதிகபட்ச பதவிக்காலம் செயல்முறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள காலவரையறையை காட்டிலும் கூடுதலாக இருக்கக் கூடாது.

### 581Q இயக்குனர்கள் பதவி விலகல் / நீக்கம்

(1) உற்பத்தியாளர் கம்பெனியில் இயக்குனர் பதவிக்கான காலியிடம் கீழ்காணும் காரணங்களால் ஏற்படும்.

(a) அவர் ஒழுக்ககேடு சம்பந்தப்பட்ட குற்றத்தில் ஈடுபட்டதற்காக நீதிமன்றத்தினால் குற்றம் சாட்டப்பட்டு அதற்கான தண்டனையாக ஆறு மாதத்திற்கு குறையாத சிறை தண்டனையை பெற்றிருந்தால்;

(b) அவர் இயக்குனராக இருக்கும் உற்பத்தியாளர் கம்பெனி, மற்ற கம்பெனி அல்லது அமைப்பு அல்லது நபரிடமிருந்து பெறப்பட்ட முன்பணம் அல்லது கடன்களை திரும்பச் செலுத்த தவறி மற்றும் 90 நாட்கள் வரை தொடர்ந்து செலுத்தத் தவறியிருந்தால்;

(c) அவர் இயக்குனராக பதவி வகிக்கும் உற்பத்தியாளர் கம்பெனியிலிருந்து பெற்ற முன்பணம் அல்லது கடன்களை அவர் திரும்பச் செலுத்தத் தவறியிருந்தால்;

(d) அவர் இயக்குனராக இருக்கும் உற்பத்தியாளர் கம்பெனி :-

i. ஏப்ரல் 1 ஆம் தேதி, 2002 அல்லது அதற்குப் பின் தொடர்ந்து மூன்று நிதியாண்டுகளாக வருடாந்திர கணக்குகள் மற்றும் வருடாந்திர வருவாய் போன்றவற்றைச் சமர்ப்பிக்காமல் இருத்தல்.

ii. தொடர்ந்து ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்களாக வைப்புத் தொகை அல்லது தக்க வைப்பு தொகை அல்லது வாடிக்கையாதரவு ஊக்கத் தொகை ஆகியவற்றை திரும்பச் செலுத்தாமல் அல்லது இவைகளுக்கான வட்டித் தொகையை உரிய தேதியில் செலுத்தத் தவறியிருந்தால் அல்லது பங்கு ஆதாயத் தொகையை செலுத்த தவறியிருந்தால்;

(e) தான் இயக்குனராக பதவி வகிக்கும் உற்பத்தியாளர் கம்பெனியில் இந்தச் சட்டத்தின் விதிமுறைகள் மற்றும் செயல்முறை விதிகளின்படி இயக்குனருக்கான தேர்தலை நடத்துவதில் தவறு செய்திருந்தால்;

(f) தான் இயக்குனராக பதவி வகிக்கும் உற்பத்தியாளர் கம்பெனியில் சட்டத்தின் விதிமுறைகளின்படி, இயற்கை சீற்றங்கள் அல்லது இதர காரணங்களைத் தவிர்த்து, உற்பத்தியாளர் கம்பெனியின் பொதுக் குழு கூட்டம் அல்லது சிறப்புப் பொதுக் குழு கூட்டத்தை கூட்டாமல் இருந்திருந்தால்.

(2) உட்பிரிவு (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள், உற்பத்தியாளர் கம்பெனியில் உறுப்பினராக உள்ள ஒரு உற்பத்தியாளர் அமைப்பின் இயக்குனருக்கும் பொருந்தும்.

## 581R அவையின் அதிகாரங்களும் செயல்பாடு-களும்

(1) சட்டத்தின் விதிமுறைகள் மற்றும் செயல்முறை விதிகளுக்கு உட்பட்டு, அவை இயக்குனர்கள், கம்பெனி செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட அனைத்து செயல்களையும், காரியங்களையும் நடைமுறைப்படுத்த தங்கள் அதிகாரத்தைச் செலுத்த வேண்டும்.

(2) குறிப்பாக மற்றும் முன்கூறப்பட்ட அதிகாரங்களின் பொதுத் தன்மைக்கு குந்தகம் ஏற்படாத வகையில் கீழ்காணும் எல்லா செயல்களையும் அல்லது அவற்றில் ஏதாவது ஒரு செயலை மேற்கொள்ளும் அதிகாரம் இயக்குனர்கள் அவைக்கு உண்டு. அவையாவன,

(a) செலுத்தப்பட வேண்டிய பங்கு ஆதாயத் தொகையை (dividend) நிர்ணயம் செய்தல்;

(b) தக்க வைப்புத் தொகையின் அளவை நிர்ணயம் செய்தல் மற்றும் பொதுக் குழுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட வேண்டிய வாடிக்கையாதரவு தொகையைப் பரிந்துரைத்தல்;

(c) புதிய உறுப்பினர்களைச் சேர்த்தல்;

(d) நிறுவனத்திற்கான கொள்கை மற்றும் நோக்கங்களை வரையறுத்து வடிவமைத்தல், நீண்ட காலத்திற்கான மற்றும் வருடாந்திர குறிக்கோள்களை உருவாக்குதல். நிறுவன உத்திகள் மற்றும் நிதி திட்டங்களை அங்கீகரித்தல்;

(e) செயல்முறை விதிகளில் குறிப்பிடப் பட்டுள்ளபடி, தலைமை செயலதிகாரிகளையும் மற்ற அலுவலர்களையும் நியமித்தல்;

(f) அவையினால் நியமனம் செய்யப்பட்ட தலைமை செயலதிகாரி மற்றும் பிற அலுவலர்களை கண்காணித்தல், வழிநடத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல்;

(g) கணக்கு பதிவேடுகள் முறையாக பராமரிக்கப் படுகிறதா என்பதை உறுதி செய்தல், வருடாந்திர கணக்கு பதிவு விவரங்களை வருடாந்திர பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கும் பொருட்டு தயாரித்தல். அதை கணக்குத் தணிக்கையாளரின் (Auditor) அறிக்கை மற்றும் அவருடைய மறுப்புகளையும் (qualification) அவற்றுக்கான பதில்களையும் (ஏதாவது இருந்தால்) சேர்த்து வருடாந்திர பொது கூட்டத்தில் வைத்தல்;

(h) வழக்கமான வியாபார செயல்பாடுகளின் கீழ் கம்பெனிக்கு சொத்துக்களை உருவாக்குதல், அல்லது கம்பெனிக்கு சொந்தமான சொத்துக்களை விற்பனை செய்தல்;

(i) வழக்கமான வியாபார செயல்பாடுகளில் உற்பத்தியாளர் கம்பெனியின் நிதிகளை முதலீடு செய்தல்;

(j) உற்பத்தியாளர் கம்பெனியின் இயக்குன-ராகவோ அல்லது அவருடைய உறவினராகவோ இல்லாத எந்த ஒரு உறுப்பினருக்கும் வியாபாரம் சார்ந்த செயல்பாடுகளுக்காக கடன் உதவி அல்லது முன் பணம் போன்றவைகளை அளித்தல்;

(k) அவையானது தன்னுடைய செயல்பாடுகளை மேற்கொள்வதற்கும் தன்னுடைய அதிகாரங்-களைச் செலுத்துவதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும், செயல்-களையும் மேற்கொள்ளலாம்.

(3) உட்பிரிவு (1) மற்றும் (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் அவையானது உற்பத்தியாளர் கம்பெனியின் சார்பில் அவை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி செலுத்தலாம்.

**விளக்கம்** : சந்தேகங்களை அகற்றுவதற்காக இங்கு அறிவிக்கப்படுவதாவது, அவையாக உருவாக்கப்படாத இயக்குனர் அல்லது ஒரு இயக்குனர்களின் குழு, அவையினால் செயல்படுத்தப்படக் கூடிய எந்த அதிகாரங்களையும் செலுத்த முடியாது.

### 581S பொதுக் கூட்டத்தில் பரிவர்த்தனை செய்யப்பட வேண்டிய விவரங்கள்

(1) உற்பத்தியாளர் கம்பெனியின் இயக்குனர்கள் அவை கீழ்காணும் அதிகாரங்களை கம்பெனியின் சார்பாகச் செயல்படுத்தலாம். மேலும், இவற்றை தனது உறுப்பினர்களின் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றிய பின் மட்டுமே செயல்படுத்த முடியும். அவையாவன,

(a) வரவு - செலவு திட்டத்தை (budget) அங்கீகரித்தல் மற்றும் கம்பெனியின் வருடாந்திர கணக்கு பதிவை (Annual Accounts) அங்கீகரித்து மேற்கொள்ளுதல்;

(b) வாடிக்கையாதரவு ஊக்கத் தொகையை அங்கீகரித்தல்;

(c) ஊக்கப் பங்குகளை விநியோகித்தல்;

(d) வரையறுக்கப்பட்ட மாற்றீட்டை அறிவித்தல் மற்றும் வாடிக்கையாதரவு தொகையை விநியோகிப்பது குறித்து தீர்மானித்தல்;

(e) எந்தவொரு இயக்குனருக்கும் அவையினால் வழங்கப்படும் கடனுதவிகளுக்கான நிபந்தனைகள் மற்றும் வரம்புகளை குறிப்பிடுதல்;

(f) உறுப்பினர்களால் அங்கீகரிக்கப்பட வேண்டியவையாக செயல்முறை விதிகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் பரிவர்த்தனைகளை அங்கீகரித்தல்.

### 581T இயக்குனர்களின் பொறுப்புடைமை

(1) இந்தச் சட்டத்தின் விதிமுறைகள் அல்லது நடைமுறையிலிருக்கும் எந்தவொரு சட்டத்தின் விதிமுறைகள் அல்லது செயல்முறை விதிகளுக்கு முரண்பாடான தீர்மானத்தை இயக்குனர்கள் ஓட்டிட்டோ அல்லது ஏதாவது ஒரு முறையில் அங்கீகரித்தோ இருந்தால், அதனால் உற்பத்தியாளர் கம்பெனிக்கு ஏற்பட்ட இழப்பு அல்லது பாதிப்பை முறைப்படி சரிக்கட்டும் பொறுப்பு அனைத்து இயக்குனர்களையும் தனியாகவும், கூட்டாகவும் சேரும்.

(2) உட்பிரிவு (1) இல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு குந்தகம் எதுவுமின்றி, உற்பத்தியாளர் கம்பெனி தன்னுடைய இயக்குனரிடமிருந்து கீழ்க்கண்டவற்றை மீட்க உரிமை கொண்டுள்ளது.

(a) உட்பிரிவு (1) இல் குறிப்பிடப்பட்டுள்ளப்படி, குறிப்பிட்ட இயக்குனர் விதிமுறைகளை மீறிய செயல்பாட்டின் விளைவாக பெற்ற எந்தவொரு லாபத்திற்கும் ஈடான தொகை;

(b) உட்பிரிவு (1) இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி குறிப்பிட்ட இயக்குனர் விதிமுறைகளை மீறிய செயல்பாட்டினால் உற்பத்தியாளர் கம்பெனிக்கு ஏற்பட்ட இழப்பு அல்லது பாதிப்பிற்கு ஈடான தொகை;

(3) இந்தப் பிரிவின் கீழ் ஏற்படுத்தப்பட்ட பொறுப்புடைமை (liability), ஒரு இயக்குனர் மீது இந்த சட்டத்தின் கீழ் அல்லது நடைமுறையில் இருக்கும் வேறு சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட பொறுப்புடைமைக்கும் கூடுதலாக செயல்படும். மற்ற பொறுப்புடைமையை எந்த விதத்திலும் குறைக்காது / மாற்றாது.

### 581U இயக்குனர் செயற்குழு

(1) இயக்குனர் அவை தன்னுடைய செயல்பாடுகளை திறம்பட நடைமுறைப்படுத்துவதற்கு உதவுவதற்காக, தான் பொருத்தமானதாக கருதும் எண்ணிக்கையில் செயற்குழுக்களை உருவாக்கலாம். ஆனால் அவையானது தன்னுடைய அதிகாரங்களையோ அல்லது தலைமை செயலதிகாரியின் அதிகாரங்களையோ எந்த செயற்குழுவுக்கும் வழங்கக்கூடாது.

(2) உட்பிரிவு (1) இன் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு செயற்குழு, அவையின் அங்கீகாரத்துடன் பொருத்தமானதாகக் கருதும் எண்ணிக்கையில் செயற்குழுவிற்கான உறுப்பினர்களை அழைப்பு விடுத்து சேர்த்துக் கொள்ளலாம். மேலும், பிரிவு 581W இன் கீழ் நியமனம் செய்யப்பட்ட தலைமை செயலதிகாரியோ அல்லது உற்பத்தியாளர் கம்பெனியின் இயக்குனரோ, இத்தகைய செயற்குழுவில் உறுப்பினராக இருக்க வேண்டும்.

(3) ஒவ்வொரு செயற்குழுவும், குறிப்பிட்ட காலத்திற்கு அவையின் கண்காணிப்பு, வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் அவையின் வழிநடத்துதலுடன் செயல்படும்.

(4) செயற்குழுவின் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கட்டணம் மற்றும் படிகள் அவையினால் நிர்ணயிக்கப்படும்.

(5) செயற்குழுவின் ஒவ்வொரு கூட்ட அறிக்கையும் அதன் அடுத்த கூட்டத்தில் அவையின் முன்பாக வைக்கப்படும்.

## 581V அவையின் கூட்டங்களும், குறைந்தபட்ச நபர்களின் பங்கேற்பும்

(1) அவையின் கூட்டம், குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையும், ஒவ்வொரு வருடத்திலும் நான்கு முறைகளுக்கு குறையாமலும் நடத்தப்பட வேண்டும்.

(2) இயக்குனர் அவையின் ஒவ்வொரு கூட்டத்திற்கான அறிவிப்பும் எழுத்து வடிவில் தற்சமயம் இந்தியாவிலுள்ள அனைத்து இயக்குனர்களுக்கும் கொடுக்கப்படும் மற்றும் அனைத்து இயக்குனர்களுக்கும் அவர்களுடைய இந்திய முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்.

(3) தலைமை செயலதிகாரி மேற்சொல்லப்பட்ட கூட்ட அறிவிப்பை அவை கூட்டத்திற்கு குறைந்தபட்சம் ஏழு நாட்களுக்கு முன்னர் அளிக்க வேண்டும். அப்படி அவர் அறிவிப்பு கொடுக்கத் தவறும் பட்சத்தில் ஆயிரம் ரூபாய் வரையிலான அபராதத்துடன் தண்டிக்கப்படுவார். மேலும், தேவைப்படும் பட்சத்தில் குறைவான கால இடைவெளியில் அறிவிப்பு செய்து, அவை கூட்டத்தை நடத்தலாம். அதற்கான காரணங்களை அவையானது எழுத்து வடிவில் பதிவு செய்து வைக்க வேண்டும்.

(4) அவைக் கூட்டம் நடத்துவதற்கு, இயக்குனர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பகுதியினர் இருக்க வேண்டும். குறைந்தபட்சம் மூன்று பேராவது தேவை.

(5) செயல்முறை விதிகளில் குறிப்பிடப்பட்டாலன்றி, அழைப்பு விடுத்து நியமிக்கப்பட்ட இயக்குனர்கள் உட்பட அனைத்து இயக்குனர்களுக்கும் அவைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான கட்டணம் மற்றும் இதரப் படிகளை பொதுக் கூட்டத்தில் உறுப்பினர்களால் தீர்மானிக்கப்பட்டபடி வழங்க வேண்டும்.

## 581W தலைமை செயலதிகாரி மற்றும் அவரது செயல்பாடுகள்

(1) அனைத்து உற்பத்தியாளர் கம்பெனியிலும் ஒரு முழு நேர தலைமை செயலதிகாரி இருக்க வேண்டும். இந்தப் பதவியை வேறு எப்படி வேண்டுமானாலும் அழைக்கலாம். உறுப்பினர் அல்லாத இதர நபர்களிலிருந்து இவரை அவை நியமனம் செய்யும்.

(2) தலைமை அதிகாரி என்பவர் பதவியின் காரணமாக அவையின் இயக்குனராக இருப்பார். இத்தகைய இயக்குனர் சுழற்சி முறையில் ஓய்வு பெற மாட்டார்.

(3) செயல்முறை விதிகளில் வேறு வகையில் குறிப்பிடப்பட்டாலன்றி, தலைமை செயலதிகாரிக்கான தகுதிகள், அனுபவம் மற்றும் அந்த பதவிக்கான விதிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் யாவும் அவையினால் நிர்ணயிக்கப்படும்.

(4) அவையினால் தீர்மானிக்கப்படும் அளவு பெரும்பாலான நிர்வாக அதிகாரங்கள் தலைமை செயலதிகாரிக்கு அளிக்கப்படும்.

(5) உட்பிரிவு (4) இன் பொது தன்மைக்கு பாதிப்பு எதுவுமின்றி, தலைமை செயலதிகாரி தன்னுடைய அதிகாரங்களைக் கொண்டு கீழ்காணும் செயல்பாடுகளை மேற்கொள்ளலாம். அவையாவன,

(a) உற்பத்தியாளர் கம்பெனியின் அன்றாட விவகாரங்களை நிர்வகிப்பது உட்பட அனைத்து நிர்வாகக் கடமைகளை நிறைவேற்றுதல்;

(b) வங்கிக் கணக்குகளை கையாளுதல், அல்லது அவையின் பொதுவான அல்லது சிறப்பு அனுமதியின் பேரில் வங்கிக் கணக்குகளை கையாளுவதற்கு தனக்கு பதிலாக வேறொரு நபரை நியமித்தல்;

(c) உற்பத்தியாளர் கம்பெனியின் பணம் மற்றும் இதர உடைமைகளுக்குக்கான பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்துதல்;

(d) கம்பெனிக்காக அல்லது கம்பெனியின் சார்பில் அவையினால் அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்களில் கையொப்பமிடுதல்;

(e) கணக்குப் பதிவேடுகளை முறையாக பராமரித்தல்;

வருடாந்திர கணக்குப் பதிவை தயாரித்து அதை தணிக்கை செய்ய வைத்தல்;

தணிக்கை செய்யப்பட்ட கணக்கு பதிவு ஆவணங்களை அவை மற்றும் உறுப்பினர்களின் பொதுக் கூட்டத்தில் முன் வைத்தல்;

(f) உற்பத்தியாளர் கம்பெனியின் செயல்பாடுகள் மற்றும் நடைமுறைகள் குறித்த விவரங்களை உறுப்பினர்களுக்கு குறிப்பிட்ட கால இடைவெளியில் அவர்கள் தகவலுக்காக அளிக்க வேண்டும்;

(g) அவையினால் இவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு ஏற்ப பணியிடங்களுக்கு ஏற்ற நபரை நியமனம் செய்தல்;

(h) கம்பெனிக்கான குறிக்கோள்கள், நோக்கங்கள், உத்திகள், திட்டங்கள் மற்றும் கொள்கைகளை உருவாக்குவதற்கு அவைக்கு உதவுதல்;

(i) பரிந்துரைக்கப்பட்ட மற்றும் நடைமுறையிலுள்ள செயல்பாடுகள் சார்ந்த சட்டமுறை மற்றும்

ஒழுங்கு முறை விவகாரங்கள் குறித்து அவைக்கு அறிவுரை வழங்குதல். மேலும், அதற்கு தேவையான எல்லா நடவடிக்கை களையும் மேற்கொள்ளுதல்.

(j) கம்பெனியின் வழக்கமான அலுவல்களுக்கு அவசியமான அதிகாரத்தைப் பயன்படுத்துதல்.

(k) அவையினால் வசப்படுத்தப்பட்ட (delegated) செயல்பாடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் அதிகாரங்களை உபயோகித்தல்.

(6) தலைமை செயலதிகாரி உற்பத்தியாளர் கம்பெனியின் விவகாரங்களை அவையின் பொதுவான கண்காணிப்பு, வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் நிர்வாகம் செய்வார். உற்பத்தியாளர் கம்பெனியின் முறையான செயல்பாட்டிற்கான பொறுப்பு தலைமை செயலதிகாரியைச் சாரும்.

### 581X உற்பத்தியாளர் கம்பெனியின் செயலாளர்

(1) தொடர்ந்து மூன்று வருடங்களுக்கு ஐந்து கோடிக்கும் அதிகமான சராசரி வருடாந்திர விற்பனை அளவை கொண்ட அனைத்து உற்பத்தியாளர் கம்பெனியும் ஒரு முழு நேர செயலாளரைக் கொண்டிருக்க வேண்டும்.

(2) கம்பெனிகள் சட்டம், 1980 (56/1980) இன் கீழ் உருவாக்கப்பட்ட இந்திய கம்பெனி செயலாளர்கள் அமைப்பில் (Institute of Company Secretaries of India) உறுப்பினராகாத எந்தவொரு நபரும் முழு நேர செயலாளராக நியமனம் செய்யப்படக் கூடாது.

உட்பிரிவு (1) இன் கீழுள்ள விதிமுறைகளுக்கு உடன்பட ஒரு உற்பத்தியாளர் கம்பெனி தவறினால், அந்த கம்பெனியும், அந்தத் தவறுடன் தொடர்புடைய அலுவலர்களும் தண்டிக்கப்படுவர். தவறு தொடரும் ஒவ்வொரு நாளும், நாளொன்றுக்கு ரூ. 500/– உடன் கூடிய தண்டனை வழங்கப்படும்.

இந்த உட்பிரிவின் கீழ் ஒரு நபரின் குற்றத்திற்காக அவருக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கை களிலிருந்து தன்னை தற்காத்து கொள்வதற்காக அந்த நபர், உட்பிரிவு (1) இன் கீழுள்ள விதிமுறை களுக்கு உடன்பட்டு நடப்பதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளை நிரூபிக்கலாம் அல்லது முழு நேர செயலாளரை நியமிப்பதற்கான கம்பெனியின் நிதி நிலைமை அதன் தகுதிக்கு அப்பாற்பட்டது என்பதையும் நிரூபிக்கலாம்.

### 581Y குறைவெண் வரம்பு (Quorum)

செயல்முறை விதிகள் கூடுதல் எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் அவசியமென்று கூறினாலன்றி, ஒரு பொதுக் கூட்டத்திற்கு மொத்த உறுப்பினர்களில் நான்கில் ஒரு பகுதி உறுப்பினர்கள் இருந்தால் போதுமானது.

### 581Z ஓட்டிடும் உரிமைகள்

பிரிவு 581D, உட்பிரிவுகள் (1) மற்றும் (3) இல் மற்றபடி வகை செய்யப்பட்டாலன்றி, அனைத்து உறுப்பினருக்கும் ஒரு ஓட்டு உண்டு. ஓட்டுகள் சமமாக இருக்கும் பட்சத்தில், தலைமை தாங்கும் தலைவர் அல்லது எந்த ஒரு நபருக்கும் இறுதி / முடிவு ஓட்டு இடும் உரிமை உண்டு. ஆனால் தலைவர் தேர்தலில் அவருக்கு இறுதி / முடிவு ஓட்டு கிடையாது.

# அத்தியாயம் - 4
# பொதுக் கூட்டங்கள்

**581ZA** வருடாந்திர பொதுக் கூட்டங்கள்

(1) ஒவ்வொரு உற்பத்தியாளர் கம்பெனியும், இதர கூட்டங்களுக்கு மேலாக ஒவ்வொரு வருடமும் ஒரு பொதுக் கூட்டத்தை அதன் வருடாந்திர பொதுக் கூட்டமாக நடத்த வேண்டும். அந்த கூட்டத்தின் அழைப்பு அறிவிப்பில் இதை வருடாந்திர பொதுக் கூட்டமாகக் குறிப்பிட வேண்டும்.

இரண்டு வருடாந்திர பொதுக் கூட்டங்களுக்கிடையே 15 மாதங்களுக்கு மேல் இடைவெளி இருக்கக் கூடாது.

எனினும், பதிவாளர் சிறப்புக் காரணங்களுக்காக ஏதாவது ஒரு வருடாந்திர பொதுக் கூட்டத்தை (முதல் வருடாந்திர பொதுக் கூட்டத்தைத் தவிர) நடத்துவதற்கான காலவரையில் மூன்று மாதங்கள் வரை கூடுதல் அவகாசம் அனுமதிக்கலாம்.

(2) ஒரு உற்பத்தியாளர் கம்பெனி, அதன் உருவாக்கத் தேதியிலிருந்து 90 நாட்களுக்குள் அதன் முதல் வருடாந்திர பொதுக் கூட்டத்தை நடத்த வேண்டும்.

(3) உறுப்பினர்கள் உற்பத்தியாளர் கம்பெனியின் செயல்முறை விதிகளை ஏற்றுக்கொண்டு, முதல் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் அவைக்கான இயக்குனர்களை நியமிப்பார்கள்.

(4) வருடாந்திர பொதுக் கூட்டத்திற்கான அறிவிப்புடன் கீழ்காணும் ஆவணங்களும் இணைக்கப்பட வேண்டும். அவையாவன,

(a) வருடாந்திர பொதுக் கூட்ட நிகழ்ச்சி நிரல்;

(b) இதற்கு முந்திய வருடாந்திர பொதுக் கூட்டம் அல்லது சிறப்பு பொதுக் கூட்டத்தின் கூட்ட நடவடிக்கை அறிக்கை (minutes);

(c) இயக்குனர்களுக்கான தேர்தல் ஏதாவது இருந்தால், அதற்கான நபர்களின் பெயர்கள் மற்றும் ஒவ்வொரு நபருக்கான தகுதிகள் அடங்கிய ஆவணம்;

(d) உற்பத்தியாளர் கம்பெனி மற்றும் அதன் துணைநிலை கம்பெனி ஏதாவது இருந்தால் அதன் தணிக்கை செய்யப்பட்ட இருப்பு நிலை ஏடு (Balance-sheet), லாப மற்றும் நஷ்ட கணக்கு பதிவுகளுடன் கீழ்காணும் விவரங்கள் அடங்கிய இயக்குனர் அவையின் அறிக்கை:

i. உற்பத்தியாளர் கம்பெனியின் விவகாரங்களின் நிலை;

ii. ஒதுக்கீடு நிதிக்காக பரிந்துரைக்கப்படும் தொகை;

iii. பங்கு மூலதனத்திற்கான வரையறுக்கப் பட்ட மாற்றீடாக செலுத்த வேண்டிய தொகை;

iv. வாடிக்கையாதரவு ஊக்கத்தொகையாக விநியோகிக்க பரிந்துரைக்கப்பட்ட தொகை;

v. இருப்பு நிலை ஆவணம் அடங்கிய வருடாந்திரக் கணக்கில் குறிப்பிட்டுள்ள தேதிக்கும், வருடாந்திர பொதுக் கூட்டத்திற்கும் இடையே உற்பத்தியாளர் கம்பெனி மற்றும் அதன் துணைநிலை கம்பெனியின் நிதி நிலையை பாதிக்கும்படி ஏதேனும் முக்கிய மாற்றங்களோ, செயற்பொறுப்போ ஏற்பட்டிருந்தால்;

vi. ஆற்றல் சேமிப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, அந்நிய செலாவணி சார்ந்த செலவீனங்கள் அல்லது வரவுகள் போன்ற வற்றுடன் தொடர்புடைய முக்கிய விஷயங்கள்;

vii. அவையினால் குறிப்பிடப்பட வேண்டிய அல்லது குறிப்பிடப்படக்கூடிய இதர விவரங்கள்;

(e) கணக்குத் தணிக்கையாளர்கள் நியமனத்திற்கான தீர்மானத்தின் வரைவு;

(f) பொதுக் குழு கூட்டத்தில் ஆராயப்பட வேண்டிய, அமைப்பு சாசனம் மற்றும் செயல்முறை விதிகளில் திருத்தம் செய்வதற்கான தீர்மானத்தின் வரைவு. இதனுடன் அவையின் பரிந்துரைகளும் இணைக்கப்பட வேண்டும்.

(5) எந்தவொரு பொதுக் கூட்டத்திலும் ஓட்டிடும் உரிமையுடைய மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்-களால் முறைப்படி கையொப்பமிடப்பட்டு, விவாதிக்க வேண்டிய விஷயங்களாக எழுத்து வடிவில் அளிக்கப்படும் கோரிக்கையின் அடிப்படையில் இயக்குனர்கள் அவை, சட்டப் பிரிவு 169-186இல் உள்ள விதிமுறைகளின்படி சிறப்பு பொதுக் கூட்டத்திற்கு கூட்ட அழைப்பு விடுக்க வேண்டும்.

(6) அனைத்து வருடாந்திர பொதுக் கூட்டமும் பொது விடுமுறை அல்லாத நாட்களில், வியாபார நேரத்தில்

நடத்தப்பட வேண்டும். மேலும், இந்த கூட்டத்தை உற்பத்தியாளர் கம்பெனியின் பதிவு அலுவலகத்தில் அல்லது பதிவு அலுவலகம் அமைந்துள்ள நகரம், மாநகராட்சி அல்லது கிராமத்தில் உள்ள இடத்தில் நடத்த வேண்டும்.

(7) உற்பத்தியாளர் கம்பெனியின் பொதுக் கூட்டத்தை குறைந்தபட்சம் 14 நாட்களுக்கு முன் எழுத்து வடிவில் அறிவிப்பு கொடுத்துக் கூட்ட வேண்டும்.

(8) தேதி, நேரம் மற்றும் கூட்டம் நடத்தப்படும் இடம் ஆகியவை அடங்கிய பொதுக் கூட்டத்திற்கான அறிவிப்பை கம்பெனியின் எல்லா உறுப்பினர்கள் மற்றும் கணக்குத் தணிக்கையாளருக்கு அனுப்ப வேண்டும்.

(9) உற்பத்தியாளர் கம்பெனியின் செயல்முறை விதிகளில் கூடுதல் எண்ணிக்கை அவசியம் என்று குறிப்பிடப்பட்டாலன்றி, வருடாந்திர பொதுக் கூட்டத்தை நடத்த மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் நான்கில் ஒரு பகுதி உறுப்பினர்களே கூட்டம் நடத்த போதுமான குறைந்தபட்ச எண்ணிக்கை ஆகும்.

(10) வருடாந்திர பொதுக் கூட்டம் நடந்து முடிந்த தேதியிலிருந்து 60 நாட்களுக்குள், இயக்குனரின் அறிக்கையுடன் கூடிய வருடாந்திர பொதுக்கூட்டத்தின் கூட்ட நடவடிக்கை, தணிக்கை செய்யப்பட்ட இருப்பு நிலை ஆவணம் மற்றும் லாப நஷ்ட கணக்கு பதிவு, ஆண்டு வரவுத் தாக்கல் ஆகியவற்றைத் தாக்கல் செய்ய வேண்டிய கட்டணத்துடன் சேர்த்து (சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டப்படி) பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும்.

(11) ஒரு வேளை உற்பத்தியாளர் கம்பெனி–யானது உற்பத்தியாளர் நிறுவனங்களால் உருவாக்கப்–பட்டிருந்தால், அத்தகைய உற்பத்தியாளர் நிறுவனங்களின் பிரதிநிதியாக தேர்வு பெற்ற அதன் தலைவரோ அல்லது தலைமை செயலதிகாரியோ, பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம். எனினும், பிரிவு 581Q, உட்பிரிவு (1) இன் கூறுகள் (d) - (f) இல் குறிப்பிடப்பட்டுள்ளப்படி கடமை தவறியிருந்தால், அந்த உற்பத்தியாளர் நிறுவனம் பொதுக் கூட்டத்தில் பங்கேற்க முடியாது.

# அத்தியாயம் - 5
# பங்கு மூலதனம் மற்றும் உறுப்பினர்களின் உரிமைகள்

**581ZB பங்கு மூலதனம்**

(1) உற்பத்தியாளர் கம்பெனியின் பங்கு மூலதனம் சாதாரண பங்குகளை மட்டும் கொண்டிருக்க வேண்டும்.

(2) ஒரு உற்பத்தியாளர் கம்பெனியிலுள்ள ஒரு உறுப்பினர் வைத்திருக்கும் பங்குகள் கூடுமான வரை அந்த கம்பெனியின் வாடிக்கையாதரவுக்கு பொருத்தமானதாக இருக்க வேண்டும்.

**581ZC சிறப்பு பயனீட்டாளர் உரிமைகள்**

(1) செயல்திறன் மிக்க உறுப்பினர்களாக உள்ள உற்பத்தியாளர்களுக்கு, செயல்முறை விதிகளில் அது பற்றி குறிப்பிட்டிருந்தால் சிறப்பு உரிமைகள் உண்டு. அத்தகைய சிறப்பு உரிமைகளுக்கு பொருத்தமான முறையாவணங்களை இவர்களுக்கு உற்பத்தியாளர் கம்பெனி வழங்கும்.

(2) உட்பிரிவு (1) இன் கீழ், உற்பத்தியாளர் கம்பெனியால் வழங்கப்படும் முறையாவணம், அவையின் அனுமதி பெற்ற பின் அந்த உற்பத்தியாளர் கம்பெனியிலுள்ள எந்த ஒரு செயல்திறன் மிக்க உறுப்பினருக்கும் மாற்றம் செய்யப்படலாம்.

**விளக்கம்:** இந்த பகுதியின் உபயோகத்திற்காக, "சிறப்பு உரிமை" என்பதன் அர்த்தம் செயல்திறன் மிக்க உறுப்பினர், கூடுதல் விளைபொருட்களை அளிப்பதற்கான உரிமை அல்லது அவையினால் குறிப்பிட்ட உறுப்பினருக்கு அளிக்கப்பட்ட அவருடைய விளைபொருள் சார்ந்த எந்தவொரு உரிமையையும் குறிக்கும்.

**581ZD பங்குகளின் உரிமை மாற்றத் தன்மை மற்றும் அதன் விளைப் பயனான உரிமைகள்**

(1) உட்பிரிவு (2) - (4) இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளை தவிர்த்து வேறு எந்த வகையிலும் உற்பத்தியாளர் கம்பெனியின் உறுப்பினருடைய பங்குகளை உரிமை மாற்றம் செய்யக் கூடாது.

(2) உற்பத்தியாளர் கம்பெனியின் உறுப்பினர், அவையின் முன்கூட்டிய அனுமதியின் பேரில் தன்னுடைய பங்குகளை முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியையோ, சிறப்பு உரிமைகள் ஏதாகிலும் இருந்தால் அதையும் சேர்த்து செயல்திறன் மிக்க உறுப்பினருக்கு சம மதிப்பிற்கு (par value) மாற்றம் செய்யலாம்.

(3) உற்பத்தியாளர் கம்பெனியில் உறுப்பினராக இணைந்த ஒவ்வொரு நபரும் மூன்று மாதங்களுக்குள் கம்பெனியிலுள்ள தன் பங்குகளுக்கு தன் இறப்பிற்கு பின் உரிமையாளராக ஒரு நபரை செயல்முறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளப்படி நியமிக்க வேண்டும்.

(4) குறிப்பிட்ட உறுப்பினரின் இறப்பிற்கு பின் கம்பெனியிலுள்ள அவருடைய பங்குகளுக்கு அவரால் நியமிக்கப்பட்ட நபர் முழு உரிமையுடையவராகி விடுவார். அவையானது, இறந்த உறுப்பினரின் பேரிலுள்ள பங்குகளை அவருடைய நியமனதாரரின் பெயருக்கு மாற்றம் செய்துவிடும்.

ஒரு வேளை, குறிப்பிட்ட அந்த நியமன-தாரர் உற்பத்தியாளராக இல்லாத பட்சத்தில், இயக்குனர் அவை அந்த பங்குகளை அதற்குரிய சிறப்பு உரிமைகள் ஏதாவது இருந்தால் அதனுடன் சேர்த்து கம்பெனியிடம் சம மதிப்பிற்கோ அல்லது அவையினால் நிர்ணயிக்கப்படும் மதிப்பிற்கோ சரணடையச் செய்ய உத்தரவிடும்.

(5) ஒரு உற்பத்தியாளர் கம்பெனியின் அவை கீழ்கண்டவற்றில் திருப்தி அடைந்திருந்தால்;

(a) முதல்நிலை உற்பத்தியாளராக இருப்பதை நிறுத்திய உறுப்பினர்;

(b) செயல்முறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள படி, தன் உறுப்பினர் நிலைக்கான தகுதிகளை தக்க வைத்துக் கொள்ளத் தவறும் எந்தவொரு நபரையும், அவையானது அவருடைய பங்குகளையும், சிறப்பு உரிமைகள் ஏதாகிலும் இருந்தால் அதையும் சேர்த்து சம மதிப்பிற்கோ அல்லது அவையினால் நிர்ணயிக்கப்படும் மதிப்பிற்கோ சரணடையச் செய்ய உத்தர விடும்.

எனினும், குறிப்பிட்ட நபருக்கு எழுத்து வடிவில் அறிவிப்பு அனுப்பி, அவருடைய தரப்பு வாதத்தையும் கேட்டறிந்த பின்னரே இவ்விதமாக பங்குகளை சரணடையச் செய்ய அவையானது உத்தரவிடும்.

# அத்தியாயம் - 6
# நிதி, கணக்குப் பதிவு மற்றும் தணிக்கை

### 581ZE கணக்குப் பதிவு புத்தகங்கள்

(1) ஒவ்வொரு உற்பத்தியாளர் கம்பெனியும் அதன் பதிவு அலுவலகத்தில் கீழ்காணும் விவரங்கள் அடங்கிய கணக்குப் பதிவு புத்தகங்களைப் பராமரிக்க வேண்டும்.

(a) உற்பத்தியாளர் கம்பெனியினால் பெறப்பட்ட மற்றும் செலவிடப்பட்ட மொத்தத் தொகை மற்றும் எந்தவிதமான செயல்பாடுகளுக்காக குறிப்பிட்ட தொகை பெறப்பட்டது அல்லது செலவிடப்பட்டது என்ற விவரங்கள்;

(b) உற்பத்தியாளர் கம்பெனியினால் மேற்கொள்ளப் பட்ட அனைத்து விதமான விற்பனைகள் மற்றும் சரக்குகளின் கொள்முதல்;

(c) உற்பத்தியாளர் கம்பெனியினால் அல்லது கம்பெனியின் சார்பாக நிறைவேற்றப்பட்ட பொறுப்பு ஏற்படுத்தும் முறையாவணங்கள்;

(d) உற்பத்தியாளர் கம்பெனியின் சொத்திருப்பு- களும், பொறுப்புடைமைகளும்;

(e) ஒரு வேளை உற்பத்தியாளர் கம்பெனி உற்பத்தி, பக்குவப்படுத்துதல் மற்றும் தயாரிப்பில் ஈடுப்பட்டிருந்தால், பொருட்களின் பயன்பாடு அல்லது கூலி அல்லது இதர பொருட்களுக்கான செலவுகள் குறித்த விவரங்கள்.

(2) கூடுமானவரை பிரிவு 211 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு உற்பத்தியாளர் கம்பெனியின் இருப்பு நிலை ஆவணம் மற்றும் லாப நஷ்ட கணக்குப் பதிவை தயாரிக்க வேண்டும்.

### 581ZF அகத் தணிக்கை (Internal Audit)

அனைத்து உற்பத்தியாளர் கம்பெனியும் தன்னுடைய கணக்கு பதிவுகளை செயல்முறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள முறைப்படியும், கால வரம்பிற்குள்ளும் அகத் தணிக்கை செய்ய வேண்டும்.

இத்தகைய அகத் தணிக்கையை இன்ஸ்டிடியூட் ஆஃப் சார்டட் அக்கௌன்டன்ஸ் சட்டம் (Institute of Chartered Accountant Act, 1949 (38 of 1949)) பிரிவு (2), உட்பிரிவு (1) இன் கீழுள்ள கூறு (b) இல் வரையறுக்கப்பட்டுள்ளபடி, பட்டயக் கணக்கரைக் கொண்டு நடத்த வேண்டும்.

### 581ZG இந்த பகுதியின் கீழ் கணக்குத் தணிக்கையாளரின் (Auditor) கடமைகள்

பிரிவு 227 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு குந்தகம் எதுவுமின்றி, கணக்குத் தணிக்கையாளர், உற்பத்தியாளர் கம்பெனியுடன் தொடர்புடைய கீழ்காணும் கூடுதல் விவரங்களை குறித்தும் அறிக்கை அளிக்க வேண்டும், அவையாவன,

(a) செலுத்தப்பட வேண்டிய கடன் தொகைகள் மற்றும் விவரங்கள் அல்லது மோசமான கடன்கள் (bad debts) ஏதாகிலும் இருந்தால் அதை குறித்தும்;

(b) இருப்புப் பணம் மற்றும் காப்புத் தொகைகளின் சரி பார்ப்பு;

(c) சொத்திருப்புகள் மற்றும் பொறுப்புகள் சார்ந்த விவரங்கள்;

(d) இந்த பகுதியின் விதிமுறைகளுக்கு மாறான- தாக தோன்றக்கூடிய அனைத்து விதமான பரிவர்த்தனைகள்;

(e) இயக்குனர்களுக்கு உற்பத்தியாளர் கம்பெனி- யினால் வழங்கப்பட்டுள்ள கடன்கள்;

(f) உற்பத்தியாளர் கம்பெனியினால் வழங்கப்பட்ட நன்கொடைகள் மற்றும் சந்தாக்கள்;

(g) அவசியமானதாக கணக்குத் தணிக்கையாளர் கருதும் இதர விவகாரங்கள்.

### 581ZH உற்பத்தியாளர் கம்பெனியால் வழங்கப்பட்ட நன்கொடைகள் மற்றும் சந்தாக்கள்

ஒரு உற்பத்தியாளர் கம்பெனி, சிறப்பு தீர்மானத்தின் மூலம் எந்தவொரு அமைப்பிற்கோ அல்லது தனிநபருக்கோ கீழ்காணும் நோக்கங்களுக்காக நன்கொடையோ அல்லது சந்தா தொகையோ வழங்கலாம்.

(a) உற்பத்தியாளர் உறுப்பினர்கள் (அ) உற்பத்தியாளர் (அ) பொது மக்களின் சமூக மற்றும் பொருளாதார நலனை மேம்படுத்துவதற்காக; அல்லது

(b) பரஸ்பர உதவி கொள்கைகளை மேம்படுத்துவதற்காக

மேலும், ஒரு நிதியாண்டில் வழங்கப்படும் குறிப்பிட்ட நன்கொடை மற்றும் சந்தா தொகைக்கான ஒட்டுமொத்த பணத்தின்

அளவு உற்பத்தியாளர் கம்பெனியின் முந்தைய நிதியாண்டில் பெற்ற மொத்த நிகர லாபத்தில் 3%க்கு அதிகமாக இருக்க கூடாது.

மேலும் எந்தவொரு உற்பத்தியாளர் கம்பெனியும் எந்த ஒரு அரசியல் கட்சிக்கோ அல்லது அரசியல் நோக்கங்களுக்காக எந்த ஒரு நபருக்கோ எந்தவித பங்களிப்பு அல்லது சந்தாத் தொகையையோ அல்லது ஆட்கள் மூலமான அல்லது பொருள் ரீதியிலான வசதிகளையோ செய்யக் கூடாது.

## 581ZI பொது மற்றும் இதர (Reserve) நிதிகள்

(1) செயல்முறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளப்படி பராமரிக்கப்படும் ஒதுக்கீடு நிதி மட்டுமின்றி அனைத்து உற்பத்தியாளர் கம்பெனியும் கூடுதலாக ஒவ்வொரு நிதியாண்டிலும் ஒரு ஒதுக்கீடு நிதியையும் பராமரிக்க வேண்டும்.

(2) செயல்முறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளப்படி பராமரிக்கப்படும் ஒதுக்கீடு நிதிகளுக்கு செலுத்துவதற்கு குறிப்பிட்ட நிதியாண்டில் போதுமான நிதி வசதி இல்லாமலிருந்தால், உறுப்பினர்கள் அந்தத் தொகையை கம்பெனியின் அந்த வருட வியாபாரத்தில் தங்களின் வாடிக்கையாதரவின் அளவிற்கு ஏற்ப பகிர்ந்தளிக்க வேண்டும்.

## 581ZJ ஊக்கப் பங்குகள் விநியோகம்

எந்த உற்பத்தியாளர் கம்பெனியும், அவையின் பரிந்துரைக்குட்பட்டு, பொதுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி, ஊக்கப் பங்குகளை விநியோகிக்கலாம். பிரிவு 581ZI இல் குறிப்பிடப்பட்டுள்ள பொது நிதியிலிருந்து குறிப்பிட்ட தொகையை மூலதனமாக்கி அதை ஊக்கப்பங்குகளாக விநியோகிக்கலாம். இத்தகைய ஊக்கப்பங்குகளை விநியோகிக்கும் தேதியன்று, உறுப்பினர்கள் வைத்திருக்கக்கூடிய பங்குகளின் அளவிற்கு ஏற்ப விநியோகிக்க வேண்டும்.

# அத்தியாயம் - 7
# உறுப்பினர்களுக்கான கடனுதவிகள் மற்றும் முதலீடுகள்

## 581ZK உறுப்பினர்களுக்கான கடன் மற்றும் இதர உதவிகள்

அவையானது செயல்முறை விதிகளில் கொடுக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு, உற்பத்தியாளர் கம்பெனியின் உறுப்பினர்களுக்கு கீழ்காணும் வழிகளில் நிதி உதவிகளை வழங்கலாம். அவையாவன,

(a) எந்தவொரு உறுப்பினருக்கும் கம்பெனியின் வியாபாரத்துடன் சம்பந்தப்பட்ட விவகாரங்களுக்காக ஆறு மாதங்களுக்கு மிகாத காலவரையறையுடன் கூடிய கடனுதவி;

(b) எந்தவொரு உறுப்பினருக்கும், திரும்பச் செலுத்துவதற்கு தேவையான பாதுகாப்பு உத்திரவாதத்திற்கு எதிரான கடனுதவிகள் மற்றும் முன் பணம்; இத்தகைய கடன் அல்லது முன்பணத்தை பெற்ற உறுப்பினர் அதை பெற்ற தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்கு பின், ஏழு வருடங்களுக்குள் திரும்பத் செலுத்திவிட வேண்டும்;

எனினும், இத்தகைய கடன் அல்லது முன் பணத்தை இயக்குனருக்கோ அல்லது அவருடைய உறவினருக்கோ கொடுக்க வேண்டியிருந்தால், பொதுக்கூட்டத்தில் உறுப்பினர்களின் அங்கீகாரத்தைப் பெற்ற பின்னரே வழங்க முடியும்.

## 581ZL இதர கம்பெனிகளில் முதலீடு செய்தல், துணைநிலை அமைப்புகளை உருவாக்குதல் போன்றவை

(1) எந்தவொரு உற்பத்தியாளர் கம்பெனியும் அதன் பொது ஒதுக்கீடு நிதியை அதிகபட்ச லாப வரவை உறுதிப்படுத்தும் வகையில், அரசாங்க அல்லது கூட்டுறவு அல்லது பட்டியல் வங்கியினால் வழங்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதிகள், வைப்பு நிதிகள், அலகுகள் / தொகுதிகள் மற்றும் உறுதிமுறிப் பத்திரங்கள் அல்லது பொருத்தமான இதர வகையில் முதலீடு செய்ய வேண்டும்.

(2) எந்தவொரு உற்பத்தியாளர் கம்பெனியும் அதன் நோக்கங்களை மேம்படுத்துவதற்காக வேறொரு கம்பெனியின் பங்குகளை வாங்கலாம்.

(3) எந்தவொரு உற்பத்தியாளர் கம்பெனியும் அதன் நோக்கங்களை மேம்படுத்துவதற்காக, சிறப்புத் தீர்மானத்தை நிறைவேற்றி, அதன் துணை நிலை கம்பெனியை உருவாக்கியோ, இதர கம்பெனியுடன் ஒன்றிணைந்தோ அல்லது இதர கூட்டாண்மை அமைப்புடன் இணைந்தோ பங்குகளை வாங்கலாம் அல்லது எந்தவொரு ஒப்பந்தத்திலும் நுழையலாம் அல்லது இதர ஏற்பாடுகளை மேற்கொள்ளலாம்.

(4) எந்தவொரு உற்பத்தியாளர் கம்பெனியும் உட்பிரிவு (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள உற்பத்தியாளர் கம்பெனி அல்லாத பிற கம்பெனியில் தானாகவோ, தனது துணைநிலை அமைப்புகளுடன் சேர்ந்தோ சந்தா பங்களிப்பு, கொள்முதல் அல்லது வேறு வகையில் பங்குகளில் முதலீடு செய்யலாம் அல்லது உட்பிரிவு (3) இல் உள்ளபடி, அதன் செலுத்தப்பட்ட மூலதன தொகை மற்றும் இதர இருப்புகளின் ஒட்டுமொத்த தொகையில் 30%த்திற்கும் மிகாத தொகையை மூலதனத் தொகையாக இந்தக் கம்பெனியில் செலுத்துதல் போன்ற வழிகளில் முதலீடு செய்யலாம். உற்பத்தியாளர் கம்பெனியானது, அதன் பொது குழுக் கூட்டத்தில் சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றி மற்றும் மத்திய அரசின் முன் கூட்டிய அங்கீகாரத்தை பெற்று இந்த பகுதியில் குறிப்பிட்டுள்ள தொகையை விட கூடுதலான தொகையையும் முதலீடு செய்யலாம்.

(5) உற்பத்தியாளர் கம்பெனியின் நோக்கங்களுடன் ஒத்துபோகக்கூடிய வகையில் அமையும் அனைத்து விதமான முதலீடுகளையும் கம்பெனி மேற்கொள்ளலாம்.

(6) உட்பிரிவு (3) மற்றும் (4) இல் குறிப்பிடப்பட்டுள்ள கம்பெனியின் எந்தவொரு முதலீட்டையும், சிறப்பு தீர்மானம் மூலம் உறுப்பினர்களின் அங்கீகாரம் பெற்று அவையானது விடுவிக்கலாம் / பராதீனப்படுத்தலாம்.

(7) ஒவ்வொரு உற்பத்தியாளர் கம்பெனியும் தங்கள் செய்துள்ள முதலீடுகளின் விவரங்கள் அடங்கிய ஒரு பதிவேட்டை பராமரிக்க வேண்டும். அதில், எந்தெந்த கம்பெனியிலிருந்து பங்குகள் வாங்கப்பட்டுள்ளதோ அந்த கம்பெனிகளின் பெயர், பங்குகளின் மதிப்பு மற்றும் எண்ணிக்கை, வாங்கப்பட்ட தேதி மற்றும் ஏதாகிலும் பங்குகள் விற்பனை செய்யப்பட்டிருந்தால் அவை விற்பனை செய்யப்பட்ட முறை மற்றும் மதிப்பு போன்ற விவரங்கள் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

(8) உட்பிரிவு (7) இல் குறிப்பிடப்பட்டுள்ள பதிவேடு கம்பெனியின் பதிவு அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும். அதிலிருந்து விவரங்கள் சேகரிக்க விரும்பும் எந்தவொரு உறுப்பினருக்கும் இந்தப் பதிவேடுகள் திறந்து கண்காணிப்பதற்காக வைக்கப்படும்.

# அத்தியாயம் - 8
# அபராதங்கள்

**581ZM விதிமுறை மீறல்களுக்கான அபராதங்கள்**

(1) இந்த பகுதியின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு உற்பத்தியாளர் கம்பெனியை தவிர்த்து "உற்பத்தியாளர் கம்பெனி லிமிடெட்" என்ற வார்த்தைகள் அடங்கிய எந்தவொரு பெயரின் கீழ் எந்தவொரு நபர் வியாபாரம் மேற்கொண்டாலும், குறிப்பிட்ட நபர் அபராதத்துடன் கூடிய தண்டனைக்கு உரியவராவார். அந்தப் பெயரை பயன்படுத்தி அவர் வியாபாரம் செய்த நாட்களுக்கு ஒரு நாளுக்கு ரூபாய் பத்தாயிரம் வரை அபராதம் விதிக்கப்படும்.

(2) ஒரு உற்பத்தியாளர் கம்பெனியின் இயக்குனரோ அல்லது அதிகாரியோ ஒரு உறுப்பினருக்கோ அல்லது அதிகாரம் பெற்ற நபருக்கோ தேவைப்படும் கம்பெனியின் விவகாரங்கள் சார்ந்த விவரங்களை வேண்டுமென்றே கொடுக்கத் தவறும்போது அவருக்கு ஆறு மாதங்கள் வரை நீடிக்கக் கூடிய சிறைத் தண்டனையும் அந்த கம்பெனியின் சென்ற ஆண்டின் மொத்த விற்பனையளவில் 5%த்திற்கு சமமான அபராதமும் விதிக்கப்படும்.

(3) உற்பத்தியாளர் கம்பெனியின் இயக்குனரோ அல்லது அதிகாரியோ,

(a) தன் பொறுப்பிலிருக்கும் கணக்கு பதிவுப் புத்தகங்கள் மற்றும் இதர ஆவணங்கள் அல்லது உடைமையை தான் இயக்குனராக அல்லது அதிகாரியாக இருக்கும் உற்பத்தியாளர் கம்பெனியிடம் ஒப்படைப்பதில் தவறு இழைக்கும் போது; அல்லது

(b) வருடாந்திர பொதுக் கூட்டம் அல்லது இதர பொதுக் கூட்டங்களை நடத்துவதற்கு தவறும்போது, அவர் ரூபாய் ஒரு லட்சம் வரை அபராதத்துடன் தண்டிக்கப்படுவார். தொடர்ந்து அந்தத் தவறை செய்யும் பட்சத்தில் அந்தத் தவறை தொடரும் காலத்திற்கு, நாள் ஒன்றுக்கு ரூபாய் பத்தாயிரம் வரை கூடிய கூடுதலான அபராதமும் விதிக்கப்படும்.

# அத்தியாயம் - 9

# ஒருங்கிணைதல், இணைப்பு அல்லது பிரிதல் (பிரிப்பு)

# (Amalgamation, Merger or Division)

**581ZN புதிய உற்பத்தியாளர் கம்பெனிகளை உருவாக்குவதற்காக ஒருங்கிணைத்தல், இணைத்தல் அல்லது பிரித்தல்**

(1) ஒரு உற்பத்தியாளர் கம்பெனி அதன் பொதுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி

(a) உரிமை மாற்றத்திற்கு ஒப்புதல் தெரிவிக்கும் உற்பத்தியாளர் கம்பெனிக்கு அதன் உடைமைகள் மற்றும் பொறுப்புகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ உரிமை மாற்றம் செய்ய தீர்மானிக்கலாம். பிரிவு 581B இல் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு நோக்கத்திற்காகவும் இதைச் செய்யலாம்.

(b) தன்னை இரண்டு அல்லது அதற்கு அதிகமான உற்பத்தியாளர் கம்பெனியாக பிரித்து கொள்ளும்.

(2) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உற்பத்தியாளர் கம்பெனிகள் அவற்றின் உறுப்பினர்களுடனான பொது அல்லது சிறப்பு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி,

(a) ஒருங்கிணைந்த ஒரு புதிய உற்பத்தியாளர் கம்பெனியை உருவாக்க தீர்மானிக்கலாம்; அல்லது

(b) ஒரு உற்பத்தியாளர் கம்பெனியை (இது முதல் இணையும் கம்பெனி என்று குறிப்பிடப்படும்) வேறொரு உற்பத்தியாளர் கம்பெனியுடன் இணைக்கத் தீர்மானிக்கலாம். (இது முதல் "இணைப்பு கம்பெனி" என்று குறிப்பிடப்படும்).

(3) இந்தப் பிரிவின் கீழ் உற்பத்தியாளர் கம்பெனியினால் அதன் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப் படும் அனைத்துத் தீர்மானங்களும் அதன் மொத்த உறுப்பினர்களில் பெரும்பாலானவர்களால், அதாவது அந்த கூட்டத்தில் கலந்து கொள்ளும் ஓட்டுரிமை உடைய மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஓட்டுகளால் தீர்மானிக்கப்படும்.

அத்தகைய தீர்மானத்தில், உடைமைகள் மற்றும் பொறுப்புகள் உரிமை மாற்றம், அல்லது பிரிதல், ஒருங்கிணைதல் அல்லது இணைப்பு போன்றவற்றில் எதை குறித்து தீர்மானிக்கப்பட்டதோ அந்த விவரங்கள் அடங்கி இருக்க வேண்டும்.

(4) இந்த பிரிவின் கீழ், ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு முன்னர், முன்வைக்கப்படும் தீர்மானத்தின் நகலுடன் கூடிய எழுத்து வடிவிலான அறிவிப்பை உற்பத்தியாளர் கம்பெனி அனைத்து உறுப்பினர்கள் மற்றும் கடனீட்டாளர்களுக்கு அனுப்ப வேண்டும். இவர்கள் இந்தத் தீர்மானத்திற்கு ஒப்புதல் அளிக்கலாம்.

(5) செயல்முறை விதிகள் மற்றும் பிற ஒப்பந்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை மேலோங்கும் வகையில் குறிப்பிட்ட தீர்மானத்தை ஒப்பு கொள்ளாத எந்தவொரு உறுப்பினர் அல்லது கடனீட்டாளரும், தனக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பு தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்கு கீழ்காணும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வாய்ப்பு அளிக்கப்படும்.

(a) எந்த உறுப்பினரும் அவையின் ஒப்புதலுடன் தன்னுடைய பங்குகளை செயல்திறன் மிக்க வேறொரு நபருக்கு உரிமை மாற்றம் செய்வதின் மூலம் கம்பெனியின் உறுப்பினர் நிலையிலிருந்து நீக்கம் பெறலாம்; அல்லது

(b) எந்த கடனீட்டாளரும் தான் அளித்த வைப்பு நிதி அல்லது கடன் அல்லது முன் பணம் போன்ற எதையும் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.

(6) உட்பிரிவு (5) இல் உள்ளபடி கொடுக்கப்பட்ட வாய்ப்பினை குறிப்பிட்ட காலவரையறையில் எந்தவொரு உறுப்பினரோ அல்லது கடனீட்டாளரோ பயன்படுத்தாவிட்டால் அவர்கள் இந்த தீர்மானத்தை ஒப்புக் கொண்டதாக கருதப்படும்.

(7) இந்த பிரிவின் கீழ் உற்பத்தியாளர் கம்பெனியால் நிறைவேற்றப்படும் எந்தவொரு தீர்மானமும், கீழ் உள்ளவற்றில் எது முன்பு நடக்கிறதோ அப்போது நடைமுறைக்கு வரும்.

- தீர்மானம் நிறைவேற்றி ஒரு மாதம் முடிவு
- அனைத்து உறுப்பினர்கள் மற்றும் கடனீட்டாளர்களின் ஒப்புதல்

(8) இந்தப் பிரிவில் குறிப்பிடப்படும் தீர்மானத்தில் கீழ் காண்பவை வழங்கப்பட்டிருக்க வேண்டும் :

(a) வருங்காலத்தில் கம்பெனியின் விவகாரங்களை நடத்துவதற்கான ஒழுங்குமுறை;

(b) உற்பத்தியாளர் கம்பெனியின் ஏதேனும் உறுப்பினரின் பங்குகள் அல்லது வட்டியை வேறு உறுப்பினர்கள் அல்லது உற்பத்தியாளர் கம்பெனி வாங்குவதற்காக;

(c) உற்பத்தியாளர் கம்பெனியின் பங்குகளை வேறொரு உற்பத்தியாளர் கம்பெனி விலைக்கு வாங்குவதன் விளைவாக ஏற்படும் பங்கு மூலதன குறைவு;

(d) பெரும்பான்மையான பங்குதாரர்களின் கருத்தில் சூழ்நிலைக்கு ஏற்ப முறையானதாகவும் சமமானதாகவும் எடுத்துக்கொள்ளப்படும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் தவிர, கம்பெனிக்கும் அதன் இயக்குனர்கள், செயலாளர்கள் மற்றும் மேலாளர்களுக்கும் இடையே செய்யப்பட்ட ஒப்பந்தத்தை முறிக்க, ஒத்தி வைக்க அல்லது மாற்றியமைக்க;

(e) உற்பத்தியாளர் கம்பெனிக்கும் கூறு (d) இல் குறிப்பிடப்படாத எந்தவொரு நபருக்கும் இடையிலான ஒப்பந்தத்தை முறித்தல், ஒத்தி வைத்தல் அல்லது மாற்றியமைத்தல்.

குறிப்பிட்ட தரப்பினருக்கு முன்கூட்டி அறிவிப்பு செய்யாமல் எந்தவொரு ஒப்பந்தத்தையும் முறிக்கவோ, ஒத்தி வைக்கவோ அல்லது மாற்றியமைக்கவோ முடியாது.

மேலும் குறிப்பிட்ட தரப்பினரின் ஒப்புதலை பெற்றாலன்றி இத்தகைய ஒப்பந்தத்தை மாற்றியமைக்க முடியாது.

(f) தீர்மானம் நிறைவேற்றும் தேதிக்கு மூன்று மாதத்திற்குள் உற்பத்தியாளர் கம்பெனி செய்த அல்லது உற்பத்தியாளர் கம்பெனிக்கு எதிராக செய்யப்பட்ட எந்த ஒரு மாற்றம், சரக்குகள் ஒப்படைப்பு, பணம் கொடுத்தல், சொத்து சம்பந்தமான விஷயங்களை நிறை-வேற்றல் மற்றும் பிற செயல்களை, ஒரு தனிநபரோ, தனிநபருக்கு எதிராகவோ செய்திருந்தால் அது அவரின் நொடிப்பு நிலை காரணமாக மோசடியான முன்னுரிமை என்று கருதப்படுமேயானால் அதனை ஒதுக்கி வைக்கலாம்.

(g) உற்பத்தியாளர் கம்பெனியின் உத்திரவாதம், சொத்து அல்லது பொறுப்புகளை முழுமையாக அல்லது பகுதியாக இணைப்பு கம்பெனிக்கு (Merged company) உரிமை மாற்றம் செய்தல்;

(h) இணையும் கம்பெனியின் பங்குகள், கடனீட்டு பத்திரங்கள், காப்பீடுகள் அல்லது வட்டிகள் போன்ற பிறவற்றை இணைப்பு கம்பெனி பங்கிடுதல் அல்லது தன்னுடையதாக்கிக் கொள்ளுதல்;

(i) உற்பத்தியாளர் கம்பெனியினால் அல்லது கம்பெனிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு நிலுவையில் உள்ள எந்தவித சட்ட நடவடிக்கையையும் இணைவு கம்பெனியின் மூலம் அல்லது இணைவு கம்பெனிக்கு எதிராக தொடர்ந்து மேற்கொள்ளுதல்;

(j) உற்பத்தியாளர் கம்பெனியை மூடுவதற்கான கலைப்பு நடவடிக்கைகள் எதுவுமின்றி கலைத்து விடுதல்;

(k) மாற்றுக் கருத்துக்கள் உடைய உறுப்பினர்கள் மற்றும் கடனீட்டாளர்களுக்காக ஏற்படுத்தப்பட வேண்டிய விதிமுறைகள்;

(l) உற்பத்தியாளர் கம்பெனியால் செலுத்தப்பட வேண்டிய வரிகள் ஏதாகிலும் இருந்தால், அது குறித்து;

(m) பிரிதல், ஒருங்கிணைதல் அல்லது இணைதலை முழுமையாகவும், திறம்படவும் செய்வதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமானதாக இருக்கும் தற்செயலான, கூடுதலான மற்றும் துணை விவகாரங்கள்.

(9) இந்த பிரிவின் கீழ் உற்பத்தியாளர் கம்பெனியால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நடைமுறைக்கு வந்து விட்டால், அந்த தீர்மானமே உரிமை மாற்றம் பெறுபவரின் பேரில் உடைமைகள் மற்றும் பொறுப்புகளை மாற்றுவதற்கு போதுமான உரிமை மாற்று சான்றாகும்.

(10) உட்பிரிவு (5) இல் உள்ளபடியான காலவரைக்குள் உறுப்பினர் அல்லது கடனீட்டாளர்கள் தாங்கள் அந்த நிலையில் நீடிக்க விரும்பவில்லை என்று தனது விருப்புரிமையை பயன்படுத்திய பின்பு, உற்பத்தியாளர் கம்பெனி முழுமையான கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யலாம் இவர்களின் அனைத்து கோரிக்கைகளையும் பூர்த்தி செய்யலாம்.

(11) உட்பிரிவு (9) இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறை-களின்படி, ஒரு உற்பத்தியாளர் கம்பெனியின் மொத்த உடைமைகள் மற்றும் பொறுப்புகள் வேறொரு உற்பத்தியாளர் கம்பெனிக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டால் அல்லது உட்பிரிவு (2) இன் கீழ் உள்ளபடி கம்பெனிகள் இணைவு ஏற்பட்டிருந்தால் முதல் குறிப்பிடப்பட்ட கம்பெனி அல்லது இணையும் கம்பெனியின் பதிவு ரத்து செய்யப்பட்டதாகவும், கூட்டாண்மை அமைப்பாக இல்லாதபடி கலைக்கப்பட்டதாகவும் கருதப்படும்.

(12) உட்பிரிவு (2) இல் உள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு இரண்டு அல்லது அதற்கு அதிகமான உற்பத்தியாளர்

கம்பெனிகள் ஒன்றிணைக்கப்பட்டு ஒரு புதிய உற்பத்தியாளர் கம்பெனியாக உருவாக்கப்பட்டு, இந்த உற்பத்தியாளர் கம்பெனி முறைப்படி பதிவாளரால் பதிவு செய்யப்பட்டிருந்தால், இந்த பதிவிற்கு பின், ஒன்றிணைந்த கம்பெனிகள் ஒவ்வொன்றின் தனிப்பட்ட பதிவும் ரத்து செய்யப்படும். மேலும் இவை கூட்டாண்மை அமைப்பாக இல்லாதபடி கலைக்கப்படும்.

(13) உட்பிரிவு (1) கூறு (b) இல் உள்ள விதிமுறை-களுக்கு உட்பட்டு, ஒரு உற்பத்தியாளர் கம்பெனி இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உற்பத்தியாளர் கம்பெனிகளாகப் பிரிக்கப்பட்டால், உட்பிரிவு (8) இன் கீழ் உள்ள விதிமுறைகளின்படி, புதிய கம்பெனிகள் பதிவு செய்யப்படும்.

மேலும், புதிய கம்பெனிகளின் பதிவிற்குப் பின் இதற்கு முந்தைய உற்பத்தியாளர் கம்பெனியின் பதிவு ரத்து செய்யப்பட்டு, அந்தக் கம்பெனி கலைக்கப்பட்டதாகவும், கூட்டாண்மை அமைப்பாக இல்லாதபடி கருதப்படும்.

(14) மேற்காணும் உட்பிரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கம்பெனிகளின் ஒன்றிணைவு, இணைப்பு அல்லது பிரிவு எந்த வகையிலும் இதற்கு முன்பாக உள்ள உரிமைகள் அல்லது கடமைகளை பாதிக்காது.

ஒன்றிணைதல், இணைப்பு அல்லது பிரிவிற்கு முன், குறிப்பிட்ட கம்பெனியினால் அல்லது கம்பெனிக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் ஏதாகிலும் தொடரப்பட்டு அல்லது தொடங்கப்பட்டிருந்தால், அதைக் குறிப்பிட்ட புதிய கம்பெனி அல்லது இணைவு கம்பெனி தொடரலாம் அல்லது தொடங்கலாம்.

(15) உட்பிரிவுகள் (11) – (14) இன் கீழ் உள்ளபடி, கலைக்கப்பட்டதாகக் கருதப்படும் அனைத்து உற்பத்தியாளர் கம்பெனியின் பெயர்களையும் பதிவாளர் பதிவேட்டிலிருந்து நீக்கி விடுவார்.

(16) உடைமைகள் உரிமை மாற்றம், பிரிவு, ஒன்றிணைவு அல்லது இணைப்பு போன்றவற்றினால் பாதிக்கப்பட்ட எந்தவொரு உறுப்பினர் அல்லது கடனீட்டாளர் அல்லது பணியாளரும், தீர்மானம் நிறைவேற்றப் பட்ட முப்பது நாட்களுக்குள் உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்யலாம்.

(17) உயர்நீதி மன்றம், குறிப்பிட்ட நபருக்கு போதுமான வாய்ப்பளித்தபின், பொருத்தமாகக் கருதும் தீர்ப்பை அளிக்கலாம்.

(18) உட்பிரிவு (16) இன் கீழ் மேல்முறையீடு செய்யப் பட்டால் உற்பத்தியாளர் கம்பெனியின் உடைமைகள் உரிமை மாற்றம், பிரிவு, ஒன்றிணைதல் அல்லது இணைப்பு போன்றவை உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பிற்கு உட்பட்டுதான் மேற்கொள்ளப்படும்.

# அத்தியாயம் - 10
# தகராறுகளுக்குத் தீர்வு காணுதல்

**581ZO** **தகராறுகள்**

(1) உற்பத்தியாளர் கம்பெனியின் உருவாக்கம், மேலாண்மை / நிர்வாகம் அல்லது வியாபாரம் சார்ந்த தகராறுகள் கீழ்காணும் வகையில் எழுந்தால்,

(a) உறுப்பினர்கள், முன்னாள் உறுப்பினர்கள் அல்லது இறந்துவிட்ட உறுப்பினர்களின் நியமனதாரர்கள் என்று கோரும் நபர்களுக்குள் ஏற்படும் தகராறுகள்; அல்லது

(b) உறுப்பினர், முன்னாள் உறுப்பினர் அல்லது உறுப்பினர் என்று கோருபவர் மற்றும் இறந்து போன உறுப்பினரின் நியமனதாரர்கள் என்று கோரும் நபர்களுக்கும் உற்பத்தியாளர் கம்பெனி, அதன் முந்தைய அல்லது இப்போதைய அவை இயக்குனர்கள், பொறுப்பாளர்கள் அல்லது கலைப்பாளருக்கும் (liquidator) இடையேயான தகராறுகள்; அல்லது

(c) உற்பத்தியாளர் கம்பெனி அல்லது அதன் அவைக்கும், எந்தவொரு இயக்குனர், பொறுப்பாளர் அல்லது முன்னாள் இயக்குனர் அல்லது இறந்துவிட்ட இயக்குனரின் நியமனதாரர், வாரிசுதாரர் அல்லது சட்டப் பிரதிநிதிக்கும் இடையேயான தகராறுகள்.

இத்தகைய பிரச்சினைகள் இசைவு தீர்ப்பு முறை மற்றும் உடன்பாட்டு சட்டம், 1996 (26/1996) இன் கீழ் கொடுக்கப்பட்ட இசைவு தீர்ப்பு அல்லது உடன்பாடு மூலம் தீர்த்து வைக்கப்படும். இந்த சட்டத்தின் விதிமுறைகள் இதற்கு பொருந்தும். தகராறு ஏற்பட்டுள்ள தரப்பினர்கள் குறிப்பிட்ட தகராறுகளை இசைவு தீர்ப்பு அல்லது உடன்பாடு மூலம் தீர்த்து வைக்க எழுத்து வடிவில் ஒப்புதல் அளித்ததாக கருதியே இத்தகைய தகராறு தீர்த்து வைக்கப்படும்.

**விளக்கம்** : இந்தப் பிரிவின் உபயோகத்திற்காக, ஒரு தகராறு என்பது கீழ்காண்பவைகளை உள்ளடக்கும்.

(a) செலுத்தப்பட வேண்டிய கடன் பாக்கி அல்லது இதர தொகைக்கான கோரிக்கை;

(b) ஒப்புக்கொள்ளப்பட்ட அல்லது படாத கடன்களை, முதன்மை கடனாளி செலுத்தத் தவறும் பட்சத்தில் உற்பத்தியாளர் கம்பெனி உத்திரவாதத் தொகையை அல்லது முதன்மை கடனாளி செலுத்த வேண்டிய பிற தொகையை உத்திரவாதியிடமிருந்து மீட்கலாம். இதனால் உத்திரவாதிக்கும் முதன்மை கடனாளிக்கும் எழும் தகராறு,

(c) உற்பத்தியாளர் கம்பெனி தான் அளிக்க வேண்டிய விளைபொருளை அளிக்க தவறும் ஒரு உறுப்பினருக்கு எதிராக எழுப்பும் கோரிக்கை;

(d) தான் அளிக்கும் சரக்குகளை எடுத்து கொள்ளாமலிருக்கும் உற்பத்தியாளர் கம்பெனிக்கு எதிராக ஒரு உறுப்பினர் எழுப்பும் கோரிக்கை;

(2) ஒரு தகராறு உற்பத்தியாளர் கம்பெனியின் உருவாக்கம், நிர்வாகம் அல்லது வியாபாரம் சார்ந்ததா என்ற கேள்வி ஏதாவது எழுந்தால், அதை இசைவு முறை தீர்ப்பாளருக்குத் தெரியப்படுத்த வேண்டும். அவருடைய முடிவே இறுதியானது.

# அத்தியாயம் - 11
# இதர விதிமுறைகள்

**581ZP உற்பத்தியாளர் கம்பெனியின் பெயரை நீக்குதல்**

(1) ஒரு உற்பத்தியாளர் கம்பெனி பதிவு பெற்று ஒரு வருடத்திற்குள் வியாபாரத்தை தொடங்கத் தவறினால் அல்லது உறுப்பினர்களுடன் வியாபார பரிவர்த்தனைகளை மேற்கொள்ளுவதை நிறுத்தி விட்டால் அல்லது பிரிவு 581B இல் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள் எதையுமே உற்பத்தியாளர் கம்பெனி மேற்கொள்ளவில்லை என்பதைத் தகுந்த விசாரணையின் மூலம் பதிவாளர் உறுதிப்படுத்தினால் அவர் அதன் பெயரை நீக்கம் செய்ய உத்தரவிடுவார். அவ்வாறு செய்த பிறகு அந்த கம்பெனி ஒரு முடிவுக்கு வந்துவிடும் (Cease to exist).

- எனினும், மேற்சொன்னபடி உற்பத்தியாளர் கம்பெனியின் பதிவை ரத்து செய்வதற்கு முன், உத்தேசத்திலிருக்கும் நடவடிக்கை பற்றி அதற்கான காரணங்காட்டு அறிவிப்பை (show cause notice) உற்பத்தியாளர் கம்பெனிக்கும் அதன் இயக்குனர்கள் அனைவருக்கும் பதிவாளர் அளிப்பார். அவ்வாறு அளித்து தங்கள் தரப்பு வாதத்தைத் தெரிவிக்க வாய்ப்பளிக்காமல் பதிவை ரத்து செய்ய எந்தவித உத்தரவும் பிறப்பிக்க முடியாது.

(2) குறிப்பிட்ட உற்பத்தியாளர் கம்பெனி எந்தவித பரஸ்பர உதவி கொள்கைகளையும் கடைப்பிடிப்பதில்லை என்பதை நியாயமான காரணத்துடன் பதிவாளர் நம்பினால், இந்தச் சட்டத்தின் பிரிவு 560 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின்படி, குறிப்பிட்ட உற்பத்தியாளர் கம்பெனியின் பெயரை பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்ய வேண்டும்.

(3) உட்பிரிவு (1) இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட உத்தரவினால் பாதிக்கப்பட்ட உற்பத்தியாளர் கம்பெனியின் எந்த ஒரு உறுப்பினரும் அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 60 நாட்களுக்குள் கம்பெனி சட்ட வாரியத்தில் மேல்முறையீடு செய்யலாம்.

(4) உட்பிரிவு (3) இன் கீழ், மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டால் அந்த மேல்முறையீட்டை விசாரித்து தீர்க்கும் வரை, உற்பத்தியாளர் கம்பெனியின் பெயரை நீக்கம் செய்வதற்கான ஆணையை நடைமுறைப்படுத்த முடியாது.

**581ZQ இந்தப் பகுதியின் விதிமுறைகள் பிற சட்டங்களை மேலோங்கும்**

இந்தச் சட்டத்தின் கீழ் உள்ள விதிமுறைகள் அல்லது தற்சமயம் அமலில் உள்ள வேறு சட்டத்தின் பிரிவுகள் அல்லது அந்தச் சட்டத்தின் காரணமாக செயல்பாட்டில் இருக்கும் முறையாவணங்கள் ஆகியவற்றோடு ஒவ்வாத வகையில் இருந்தாலும் இந்தப் பகுதியில் உள்ள விதிமுறைகள் மேலோங்கி செயல்படும். ஆனால் அத்தகைய சட்டம் அல்லது முறையாவணத்தின் பிரிவுகள் இந்தப் பகுதியுடன் வேறுபடாமல் ஒத்துப்போகும் அளவிற்கு உற்பத்தியாளர் கம்பெனிகளுக்கு பொருந்தும்.

**581ZR தனியார் கம்பெனிகளுக்கான விதிமுறைகள் உற்பத்தியாளர் கம்பெனிக்கும் பொருந்துதல்**

இந்தப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளவை தவிர, தனியார் கம்பெனிகளுக்கான சட்டத்தின் அனைத்து வரம்புகள், கட்டுப்பாடுகள் மற்றும் விதிமுறைகளும் இந்தப் பகுதியின் விதிமுறைகளுடன் முரண்பாடுகள் எதுவும் இல்லாத வரையில், உற்பத்தியாளர் கம்பெனிகளுக்கு பொருந்தும். இந்தச் சட்டத்தின் கீழ் உற்பத்தியாளர் கம்பெனிகள் தனியார் லிமிடெட் கம்பெனியாக கருதி பொருந்தும்.

# அத்தியாயம் - 12
# உற்பத்தியாளர் கம்பெனியை மாநிலங்களிடை கூட்டுறவு சங்கமாக திரும்ப மாற்றுதல்

**581ZS உற்பத்தியாளர் கம்பெனியை மாநிலங்களிடை கூட்டுறவு சங்கமாக திரும்ப மாற்றுதல்**

(1) இதற்கு முன் ஒரு மாநிலங்களிடை கூட்டுறவு சங்கமாக உருவாக்கப்பட்டு இந்த பகுதியின் கீழ் பதிவு செய்யப்பட்ட எந்தவொரு உற்பத்தியாளர் கம்பெனியும்,

(a) பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்களில், மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் ஓட்டு போட்டு தீர்மானம் நிறைவேற்றிய பின் அல்லது

(b) மொத்த கடனீட்டாளர்களில் நான்கில் மூன்று பகுதி மதிப்பை அளித்த கடனீட்டாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி மீண்டும் மாநிலங்களிடை கூட்டுறவு சங்கமாக மாறுவதற்கான விண்ணப்பப் படிவத்தை தயாரித்து உயர்நீதி மன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

(2) உட்பிரிவு (1) இன் கீழ், உயர்நீதி மன்றத்தில் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டால், குறிப்பிட்ட உறுப்பினர்கள் அல்லது கடனீட்டாளர்களைக் கொண்டு குறிப்பிட்ட முறையில் கூட்டம் ஒன்றை நடத்த உயர்நீதி மன்றம் வழிகாட்டும்.

(3) உட்பிரிவு (2) இன் கீழ், குறிப்பிடப்பட்டுள்ளப்படி, உயர்நீதி மன்றத்தின் வழிகாட்டுதலின்படி நடத்தப்படும் கூட்டத்தில், நான்கில் மூன்று பங்கு மதிப்புடைய கடன் வழங்கிய கடனீட்டாளர்கள் அல்லது உறுப்பினர்கள் கலந்து கொண்டு ஓட்டு போடுவதன் மூலம் மாநிலங்களிடை கூட்டுறவு சங்கமாக மாறுவதற்கு ஒப்புக்கொண்டு உயர்நீதி மன்றம் ஒப்புதல் அளித்தால் இந்த முடிவு அனைத்து உறுப்பினர்கள் அல்லது கடனீட்டாளர்கள் மற்றும் மாற்றப்படும் கம்பெனியை பிணைக்கும்.

கம்பெனியினாலோ அல்லது வேறு நபராலோ உட்பிரிவு (1) இன் கீழ் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை தொடர்ந்து, மாநிலங்களிடை கூட்டுறவு சங்கமாக மீண்டும் மாறுவதற்கான உத்தரவை பிறப்பிக்கும் முன் கம்பெனியின் தற்காலிக நிதி நிலைமை, கம்பெனியின் கணக்குப் பதிவு சார்ந்த கணக்குத் தணிக்கையாளரின் தற்போதைய அறிக்கை, கம்பெனி சார்ந்த பிரிவு 235 – 251 கீழ் நிலுவையிலுள்ள விசாரணை நடவடிக்கைகள் போன்ற அனைத்து முக்கிய விவரங்களையும் பிரமாண வாக்கு மூலமாக அல்லது வேறு விதமாகவோ நீதிமன்றம் பெற்று ஆராய்ந்து திருப்தி அடைய வேண்டும்.

(4) உட்பிரிவு (3) இன் கீழ் பிறப்பிக்கப்படும் உத்தரவு, குறிப்பிட்ட உத்தரவின் சான்றளிக்கப்பட்ட நகல் பதிவாளரிடம் தாக்கல் செய்யப்பட்டாலன்றி நடைமுறைக்கு வராது.

(5) மேற்கூறியபடி சான்றளிக்கப்பட்ட உத்தரவு நகல் பதிவாளரிடம் தாக்கல் செய்யப்பட்டபின் ஒவ்வொரு முறையும் விநியோகிக்கப்படும் கம்பெனியின் அமைப்பு சாசனத்துடன் உத்தரவு நகலும் இணைக்கப்பட வேண்டும் அல்லது அமைப்பு சாசனம் ஒரு கம்பெனிக்கு இல்லாமலிருந்தால் விநியோகிக்கப்படும் உருவாக்க முறையாவணம் அல்லது கம்பெனியின் கட்டமைப்பை விளக்கும் ஆவணத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

(6) உட்பிரிவு (4) இல் உள்ளபடி செய்ய தவறினால், குறிப்பிட்ட தவறு செய்யும் கம்பெனி மற்றும் கம்பெனியின் அனைத்து அதிகாரிகளும், தவறாக விநியோகிக்கப்பட்ட ஒவ்வொரு நகலுக்கும் ரூபாய் நூறு வரை அபராதத்துடன் தண்டிக்கப்படுவார்கள்.

(7) இந்த பிரிவின் கீழ், நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப் படிவத்தை தொடர்ந்து, குறிப்பிட்ட விண்ணப்பத்திற்கு தீர்வு காணும் வரை நீதிமன்றம், தான் பொருத்தமாகக் கருதும் விதிமுறைகளின்படி உற்பத்தியாளர் கம்பெனிக்கு எதிரான வழக்கு அல்லது நடவடிக்கையை தொடருவதை நிறுத்தலாம் அல்லது தடையுத்தரவு பிறப்பிக்கலாம்.

(8) பன்மாநில கூட்டுறவு சங்கமாக அல்லது கூட்டுறவு சங்கமாக மீண்டும் மாறுவதற்கு உயர்நீதி மன்றத்தால் அனுமதி பெற்ற அனைத்து உற்பத்தியாளர் கம்பெனியும்,

- அத்தகைய அனுமதியை பெற்ற ஆறு மாதத்திற்குள் பன்மாநில கூட்டுறவு சங்கமாக அல்லது கூட்டுறவு சங்கமாக தன்னைப் பதிவு செய்து கொள்வதற்காக பன்மாநில கூட்டுறவு சங்கங்கள் சட்டம், 2002 (39/2002) அல்லது அந்த சமயம் அமலிலிருக்கும் இதரச் சட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க வேண்டும்.

- மேலும் அதற்கான அறிக்கையை உயர்நீதிமன்றம், மற்றும் கம்பெனிகள் பதிவாளர், பன்மாநில கூட்டுறவு சங்கமாக அல்லது கூட்டுறவு சங்கமாக பதிவு பெறும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் ஆகியோரிடம் தாக்கல் செய்ய வேண்டும்.

**581ZT உற்பத்தியாளர் கம்பெனிகளுக்கு இந்தச் சட்டத்தை செயல்முறைப்படுத்தும் போது அதை மாற்றம் செய்வதற்கான அதிகாரம்**

(1) மத்திய அரசு அரசிதழில் அறிவிக்கை செய்து, குறிப்பிட்ட அறிவிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள இந்தச் சட்டத்தின் விதிமுறைகள் (இந்தப் பகுதியில் குறிப்பிடப்பட்டவைகளை தவிர்த்து மற்றவை),

(a) உற்பத்தியாளர் கம்பெனிகள் அல்லது அதன் வகை அல்லது பிரிவிற்குப் பொருந்தாது; அல்லது

(b) உற்பத்தியாளர் கம்பெனிகள் அல்லது அதன் வகை அல்லது பிரிவிற்கு அறிவிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள விதிவிலக்கு அல்லது தழுவல் / மாற்றத்துடன் பொருந்தும் என்பதை தெரிவிக்க வேண்டும்.

(2) உட்பிரிவு (1) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிக்கையை வெளியிடுவதற்கு முன், அதன் வரைவு நகலை நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அவையிலும் கூட்டத் தொடர் இருக்கும்போது வைக்க வேண்டும்.

நாடாளுமன்ற கூட்டத் தொடர் நடக்கும்போது அறிவிக்கையை அடுத்தடுத்த, ஒன்று அல்லது இரண்டு அல்லது அதற்கு அதிகமான கூட்டத் தொடர்களை கொண்ட மொத்தம் 30 நாட்களுக்கு வைக்க வேண்டும். ஒரு கூட்டத் தொடரின் முடிவுக்கு முன் அல்லது உடனடியாக அதற்கு அடுத்த தொடரில் அல்லது அடுத்தடுத்த தொடர்களில் மேற்கண்ட வகையில் வைக்க வேண்டும்.

நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளும் குறிப்பிட்ட அறிவிக்கை வெளியிடப்படுவதை அங்கீகரிக்காமல் அல்லது இரண்டு அவைகளும் அறிவிக்கையில் சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்று ஒப்புதல் அளித்தால் அதன்படியே குறிப்பிட்ட அறிவிக்கை வெளியிடப்படாது இரு அவையினால் அங்கீகரிக்கப்பட்ட மாற்றங்களை செய்த பின்னரே வெளியிடப்படும்.

# நிதி அமைச்சகம்
# (கம்பெனி அலுவல் துறை)
# அறிவிக்கை

எண். SO135(E) வெளியீட்டு தேதி : 5.2.2003 புதுதில்லி

கம்பெனிகள் (திருத்த) சட்டம், 2002 (1/2003) பிரிவு (1), உட்பிரிவு (2) இன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, மத்திய அரசு பிப்ரவரி 6ஆம் நாள், 2003ஐ மேற்சொன்ன சட்டத்தின் விதிமுறைகள் அமலுக்கு வரும் தேதியாக நிர்ணயித்துள்ளது.

(F No : 1/1/2003 – CL – V)
ராஜீவ் மெஹ்ரிஷி
இணை செயலாளர்

# நிதி அமைச்சகம்
# (கம்பெனி அலுவல் துறை)
# அறிவிக்கை
# புது தில்லி, ஆகஸ்டு 7ஆம் தேதி, 2003

GSR 641 (E) - கம்பெனிகள் சட்டம், 1956 இன், பிரிவு 642 இன் உட்பிரிவு (1) கூறு (a) இன் மற்றும் பிரிவு 581ZL உட்பிரிவு (1) இன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி மத்திய அரசு கீழ்காணும் விதிகளை உருவாக்கியுள்ளது. அவையாவன.

1. **குறுந்தலைப்பு மற்றும் அமலுக்கு வருதல் (Short title and commencement)** : (1) விதிகள், உற்பத்தியாளர் கம்பெனிகளின் (ஒதுக்கீடு) விதிகள், 2003 என்று அழைக்கப்படலாம்.
2. **பொருத்தம் (Applicability)** : இந்த விதிகள் கம்பெனிகள் சட்டம், 1956 இன் பிரிவு 581 C இன் கீழ் உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட கம்பெனிக்கு பொருந்தும்.
3. **விளக்கம் (Definition)** : “கூட்டுறவு சங்கம்” என்பது ஒரு மாநிலத்தில் அந்தச் சமயம் அமலில் இருக்கும் கூட்டுறவு சங்கங்கள் சார்ந்த எந்த ஒரு சட்டத்தின் கீழேயும் பதிவு செய்யப்பட்ட சங்கத்தைக் குறிக்கும்.
4. **பொது ஒதுக்கீடுகளிலிருந்து முதலீடு செய்தல் (Investment of general reserves)** : கம்பெனிகள் சட்டம், 1956 இன் பிரிவு 581 C இன் கீழ் உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட ஒரு உற்பத்தியாளர் கம்பெனியும் பொது வைப்பீட்டிலிருந்து கீழ்க்காணும் வழிமுறைகளில் முதலீடு செய்யலாம். அவையாவன :

(a) மத்திய அல்லது மாநில அரசு அல்லது கூட்டுறவு சங்கங்கள் அல்லது பட்டியல் வங்கியின் மூலம் வழங்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட உத்திரவாதங்கள், வைப்பு நிதிகள், அலகுகள் (units) மற்றும் பத்திரங்களில் முதலீடு செய்யலாம்;

(b) கூட்டுறவு வங்கி, மாநில கூட்டுறவு வங்கி, கூட்டுறவு நில மேம்பாட்டு வங்கி அல்லது மத்திய கூட்டுறவு வங்கியில் முதலீடு செய்யலாம்; அல்லது

(c) இதர பட்டியலிடப்பட்ட வங்கியில் முதலீடு செய்யலாம்;

(d) இந்திய அறக்கட்டளைகள் சட்டம், 1882 இன் பிரிவு (20) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உத்தரவாதங்களில் முதலீடு செய்யலாம். அல்லது

(e) இதர பன்மாநில கூட்டுறவு சங்கம் அல்லது கூட்டுறவு சங்கத்தின் பங்குகள் அல்லது உத்தரவாதங்களில் முதலீடு செய்யலாம்; அல்லது

(f) கம்பெனிகள் சட்டம், 1956 இன் பிரிவு 4(A) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க நிதி நிறுவனங்களின் பங்குகள், உத்தரவாதங்கள் அல்லது உடைமைகளில் முதலீடு செய்யலாம்.

(F No : 1/1/2003 – CL – V)
ராஜீவ் மெஹ்ரிஷி
இணை செயலாளர்

# கலைச்சொற்கள்

| | | |
|---|---|---|
| 1. | அகத் தணிக்கை | Internal audit |
| 2. | அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் | Authorised share capital |
| 3. | அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதிகள் | Approved securities |
| 4. | அங்கீகரிக்கப்பட்ட, ஒப்புக்கொள்ளப்பட்ட | Recognised |
| 5. | அசாதாரண பொதுக் குழு கூட்டம் | Extraordinary general meeting |
| 6. | அசையும் மற்றும் அசையா உடைமைகள் | Assets – movable and immovable |
| 7. | அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் | Properties – movable and immovable |
| 8. | அதன் காரணமாக / அந்த உண்மையின் அடிப்படையில், அது காரணமாகவே | *Ipso-facto* |
| 9. | அதிகார வரம்பு | Jurisdiction |
| 10. | அதிகாரி | Officer |
| 11. | அந்நியச் செலாவணி | Foreign exchange |
| 12. | அபராதங்கள் | Penalty |
| 13. | அமைப்பு மாறுபாடு தேதி | Transformation date |
| 14. | அமைப்பு சாசனம் | Memorandum of Association |
| 15. | அரசிதழ் | Official Gazette |
| 16. | அலகுகள் / தொகுதிகள் | Units |
| 17. | அவை | Board |
| 18. | அழைப்பு விடுதல் | Co-option |
| 19. | அறிவிப்பு, தகவல் | Notice |
| 20. | அறிவிக்கை | Notification |
| 21. | ஆதரவு அல்லது வாடிக்கை ஆதரவு | Patronage |
| 22. | ஆணையம், அதிகாரம் | Authority |
| 23. | ஆலோசனை சேவைகள் | Consultancy services |
| 24. | ஆற்றல் சேமிப்பு | Energy conservation |
| 25. | இசைவு தீர்ப்பு | Arbitration |
| 26. | இசைவு முறை தீர்ப்பாளர் | Arbitrator |
| 27. | இசைவு தீர்ப்பு முறை மற்றும் உடன்பாட்டு சட்டம், 1996 | Arbitration and Conciliation Act, 1996 |
| 28. | இடைக்கால முறிவு | Premature termination |
| 29. | இதற்கு முன் இருந்தவர் | Predecessors |
| 30. | இந்திய கம்பெனி செயலாளர்கள் அமைப்பு | Institute of Company Secretaries of India |
| 31. | இந்திய அறக்கட்டளைகள் சட்டம், 1882 | Indian Trusts Act, 1882 |
| 32. | இயக்குனர் அவை | Board of Directors |
| 33. | இயக்குனர் செயற்குழு, இயக்குனர் குழு | Committee of Directors |
| 34. | இருப்பு நிலை ஏடு | Balance sheet |
| 35. | ஈட்டுறுதி | Indemnity |
| 36. | உடன்படிக்கைகள், வரைமொழி ஒப்பந்தம் | Covenants |
| 37. | உத்தரவாதம் | Undertaking |
| 38. | உயிரித்தொழில்நுட்பம் | Biotechnology |

| | | |
|---|---|---|
| 39. | உரிமைகள் | Rights |
| 40. | உரிமை மாற்றம் | Transfer |
| 41. | உரிமை மாற்றம் பெறுபவர் | Transferee |
| 42. | உரிமை மாற்றம் செய்பவர் | Transferor |
| 43. | உருவாக்க முறை, கூட்டுருவாக்கம் | Incorporation |
| 44. | உறுதிமுறிப் பத்திரங்கள் | Bonds |
| 45. | உறுதிமொழி அளித்தல் | Declaration (to declare) |
| 46. | உறுப்பினர் | Member |
| 47. | உற்பத்தியாளர் | Producer |
| 48. | உற்பத்தியாளர் கம்பெனி | Producer company |
| 49. | உற்பத்தியாளர் நிறுவனம் | Producer institution |
| 50. | உற்பத்தியாளர் கம்பெனியின் செயலாளர் | Secretary of producer company |
| 51. | உற்பத்தியாளர் கம்பெனியைப் பிரித்தல் | Division of producer company |
| 52. | ஊக்கப் பங்குகள், மிகையூதியப் பங்குகள் | Bonus shares |
| 53. | ஒத்தி வைப்பு | Adjourn |
| 54. | ஒதுக்கீடு நிதி | Reserve fund |
| 55. | ஒப்பந்தங்கள் | Contracts |
| 56. | ஒருங்கிணைத்தல் | Amalgamation |
| 57. | ஓட்டிடும் உரிமைகள் | Voting rights |
| 58. | கடன் | Loan |
| 59. | கடன்கள் | Credits, Debts |
| 60. | கடனீட்டாளர் | Creditor |
| 61. | கடனீட்டுப் பத்திரம் | Debenture |
| 62. | கடனீட்டு இருப்பு | Debenture – stock |
| 63. | கட்டுப்படுத்தப்பட்ட, வரையறை | Restricted |
| 64. | கணக்குத் தணிக்கையாளர் | Auditor |
| 65. | கணக்குப் பதிவுப் புத்தகங்கள் | Book of account |
| 66. | கணக்காளர், கணக்கர் | Accountant |
| 67. | கணினி மயமாதல் | Computerisation |
| 68. | கம்பெனி சட்ட வாரியம் | Company law board |
| 69. | கம்பெனி செயல்பாடு அலுவல் துறை | Department of company affairs |
| 70. | கம்பெனிக் கலைப்பு | Winding up of a company |
| 71. | கலைத்தல் / கிரையப்படுத்துதல் | Dissolution / Liquidation |
| 72. | காடு வளர்ப்பு | Forestry |
| 73. | காப்பீடு | Insurance |
| 74. | காரணங்காட்டு அறிவிப்பு | Show cause notice |
| 75. | கால்நடைப் பராமரிப்பு | Animal husbandry |
| 76. | கிரையப்படுத்துபவர் | Liquidator |
| 77. | குடிசைத் தொழில் | Cottage industry |
| 78. | குந்தகம், பாதிப்பு | Prejudice |
| 79. | குழுமம் / கம்பெனி, நிறுவனம் | Company |
| 80. | கூட்டம் நடத்துவதற்கு தேவையான குறைந்த-பட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை, குறைவெண் | Quorum |

| | | |
|---|---|---|
| 81. | கூட்ட நடவடிக்கைகள் | Proceedings of meeting |
| 82. | கூட்டாண்மை அமைப்பு | Corporate body |
| 83. | கூட்டுறவு சங்கங்களின் கூட்டமைப்பு | Federation of cooperative societies |
| 84. | கூடுதல் இயக்குனர் | Additional director |
| 85. | கூட்டுறவு அமைப்பு | Cooperative institution |
| 86. | கூட்டுறவு வியாபார அமைப்பு | Cooperative business |
| 87. | கூட்டுறவு வங்கி | Cooperative Bank |
| 88. | கூட்டு வணிக முயற்சி | Joint venture |
| 89. | கையிருப்பு மூலதனம் | Reserve capital |
| 90. | கொள்முதல் | Procurement |
| 91. | கோரிக்கை | Claim |
| 92. | சட்டம் | Act |
| 93. | சட்டக்கூறு | Clause |
| 94. | சட்ட நடவடிக்கை, சட்ட நடைமுறைகள் | Legal / Legislative proceedings |
| 95. | சட்ட விதிமுறைகள் | Legislative provisions |
| 96. | சட்டப்படி தேவைப்படும் மாற்றங்கள் (அ) சட்டரீதியாகச் செய்யப்படும் மாற்றங்கள் | Statutory modification |
| 97. | சட்ட உட்பிரிவு | Sub-section |
| 98. | சாதாரண பங்குகள் | Equity shares |
| 99. | சந்தாக்கள் | Subscriptions |
| 100. | சம மதிப்பு | Par value |
| 101. | சமபாக பங்குகள் | Equal shares |
| 102. | சமுதாய சேவை அமைப்புகள் | Community service organization |
| 103. | சமூக மற்றும் பொருளாதார நலன் | Social and economic welfare |
| 104. | சராசரி வருடாந்திர விற்பனை அளவு | Average annual turnover |
| 105. | சான்றளிக்கப்பட்ட நகல்கள் | Certified copies |
| 106. | சிறப்பு பொதுக்குழுக் கூட்டம் | Special general meeting |
| 107. | சிறப்புத் தீர்மானம் | Special resolution |
| 108. | சிறப்புரிமைகள் | Special rights / privileges |
| 109. | சுயமாக, தன்னிச்சையாக | *Suo-motu* |
| 110. | சுய விருப்பம், விருப்புரிமை, உளத்தேர்வு | Discretion |
| 111. | சுற்றுச்சூழல் பாதுகாப்பு | Environmental protection |
| 112. | செயல்பாட்டாளர், நிறைவேற்றாளர் | Executor |
| 113. | செயல்முறை விதிகள் | Articles of Association |
| 114. | செயல்திறன் மிக்க உறுப்பினர் | Active Member |
| 115. | தகவல் புரட்சி | Information revolution |
| 116. | தக்கவைப்புத் தொகை | Withheld price |
| 117. | தணிக்கை செய்யப்பட்ட வரவு - செலவு அறிக்கை / கணக்குகள் | Audited statement of accounts |
| 118. | தணிக்கை செய்யப்பட்ட இருப்பு நிலை ஏடு | Audited balance - sheet |
| 119. | தலைமை தணிக்கை அதிகாரி | Auditor general |
| 120. | தலைமை செயலதிகாரி | Chief executive |
| 121. | தலைவர் | Chairman |
| 122. | தன் விருப்ப பணி ஓய்வு | Voluntary retirement |

| | | |
|---|---|---|
| 123. | தாக்கல் செய்தல் | Filing |
| 124. | தாராளமயமாக்குதல் | Liberalisation |
| 125. | திருத்தச் சட்டம் | Amendment Act |
| 126. | தீர்மானம் | Resolution |
| 127. | தீர்ப்பாயம் | Tribunal |
| 128. | திவாலான / நொடிந்த, நொடிப்பு நிலையர் | Insolvent |
| 129. | துணை செயல்பாடு | Ancillary activity |
| 130. | துணைநிலை அமைப்புகள் | Subsidiaries |
| 131. | தேய்மானம் | Depreciation |
| 132. | தொழில் தகராறுகள் சட்டம், 1947 | Industrial Disputes Act, 1947 |
| 133. | தொழில்நுட்ப சேவைகள் | Technical services |
| 134. | தோட்டக்கலை | Horticulture |
| 135. | நலத்திட்டம் | Welfare scheme |
| 136. | நன்கொடைகள் | Donations |
| 137. | நிகழ்ச்சி நிரல் | Agenda |
| 138. | நிதி அமைச்சகம் | Ministry of finance |
| 139. | நிதித் திட்டங்கள் | Financial plans |
| 140. | நிதி சேவைகள் | Financial services |
| 141. | நிதியாண்டு | Financial year |
| 142. | நியமனதாரர்கள் | Nominees |
| 143. | நிறுவனத்தின் கொள்கை | Organisational policy |
| 144. | நிறுவன உத்திகள் | Corporate strategies |
| 145. | நிர்வாகம் | Management |
| 146. | நிர்வாக உதவிகள் | Managerial assistance |
| 147. | நிர்வாக இயக்குநர் | Managing Director |
| 148. | நுகர்பொருட்கள் | Consumables |
| 149. | பங்கு | Share |
| 150. | பங்கு ஆதாயத் தொகை | Dividend |
| 151. | பங்குகளின் தோற்ற மதிப்பு | Face value of shares |
| 152. | பங்கு மூலதனம் | Share capital |
| 153. | பங்குதாரர்கள் | Share holders |
| 154. | பங்கு மாற்றம் | Share transfer |
| 155. | பங்குகளின் உரிமை மாற்றம் | Transfer of shares |
| 156. | பட்டியல் வங்கி | Scheduled bank |
| 157. | பதிலாள், மாற்றாள் | Proxy |
| 158. | பதிவாளர் | Registrar |
| 159. | பதிவு அலுவலகம் | Registered Office |
| 160. | பணிக்கொடை | Gratuity |
| 161. | பரஸ்பர உதவி கொள்கைகள் | Mutual assistance principles |
| 162. | பரஸ்பர புரிந்து கொள்ளுதல் | Mutuality |
| 163. | பரிவர்த்தனை | Transaction |
| 164. | பறிமுதல் (அ) ஒறுப்பிழப்பு | Forfeiture |
| 165. | பற்று | Debit |
| 166. | பற்றுரிமை | Lien |

| | | |
|---|---|---|
| 167. | பற்று நிலுவை | Debit balance |
| 168. | பன்னாட்டு நிறுவனங்கள் | Multinational companies |
| 169. | பன்மாநில கூட்டுறவுச் சங்கம் | Multi-State cooperative society |
| 170. | பிரமாண வாக்கு மூலம் | Affidavit |
| 171. | போக்குவரத்து கட்டமைப்பு | Transportation infrastructure |
| 172. | பொதுக் கூட்டம் | General meeting |
| 173. | பொது ஒதுக்கீடு நிதி | General reserves |
| 174. | பொருளாதாரவியல் வல்லுநர் | Economists |
| 175. | பொறுப்புகள் / பொறுப்புடைமை | Liabilities |
| 176. | மருத்துவ சலுகை திட்டம் | Medical benefit scheme |
| 177. | மலர் சாகுபடி | Floriculture |
| 178. | மற்றொரு கம்பெனியுடன் சேர்ந்து ஒரே கம்பெனியாக மாறுதல் | Merger of company |
| 179. | மாநிலங்களிடை கூட்டுறவுச் சங்கம் | Inter-State cooperative society |
| 180. | மாற்ற அறிவிப்பு | Transfer notice |
| 181. | மீன் வளர்ப்பு | Pisciculture |
| 182. | முதலீடு | Investment |
| 183. | முதல்நிலை விளைபொருள் | Primary produce |
| 184. | முதன்மை கடனாளி | Principal debtor |
| 185. | முத்திரை | Seal |
| 186. | முரண்பாடு | Conflict |
| 187. | முறையாவணம் | Instrument |
| 188. | முன்பணம் | Advance amount |
| 189. | முன்னுரிமைகள் | Privileges |
| 190. | முன்வைக்கப்படும் தீர்மானம் | Proposed resolution |
| 191. | மேலாளர் | Manager |
| 192. | மேல் முறையீடு | Appeal |
| 193. | மோசமான கடன் | Bad debt |
| 194. | லாப மற்றும் நஷ்ட கணக்கு | Profit and loss accounts |
| 195. | வரி விலக்கு | Tax exemption |
| 196. | வருடாந்திரக் கணக்குகள் | Annual accounts |
| 197. | வருடாந்திர பொதுக் கூட்டம் | Annual general meeting |
| 198. | வருடாந்திர வருவாய் | Annual return |
| 199. | வருங்கால வைப்பு நிதி | Provident fund |
| 200. | வருவாய் | Revenue |
| 201. | வரைவுத் தீர்மானம் | Draft resolution |
| 202. | வரைவு மசோதா | Draft Bill |
| 203. | வரையறுக்கப்பட்ட மாற்றீடு | Limited return |
| 204. | வரையறுக்கப்பட்ட தனியார் கம்பெனி | Private Limited Company |
| 205. | வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பெனி | Public Limited Company |
| 206. | வல்லுநர் இயக்குனர் | Expert director |
| 207. | வழக்கமான அலுவல்கள் | Ordinary course of business |
| 208. | வழக்கு | Suit |
| 209. | வாடிக்கை ஆதரவு ஊக்கத்தொகை | Patronage bonus |

| | | |
|---|---|---|
| 210. | விதிமுறை மீறல்களுக்கான அபராதங்கள் | Penalty for contravention |
| 211. | விதிமுறைகள், சட்ட நிபந்தனை, வழிவகை ஏற்பாடு, | Provisions |
| 212. | விதிமுறைகளை மீறிய செயல்பாடு | Contravention |
| 213. | வியாபாரப் பரிவர்த்தனைகள் | Business transaction |
| 214. | விருப்ப உரிமை மாற்றம் செய்பவர் | Proposing transferor |
| 215. | வைப்பு நிதிகள் | Fixed deposits |